ரிஜிஸ்டர் நெ. 2041.   தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம் — ரூ. 3—0	ஞாயிறுதோறும் வெளிவரும்.	வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
மாத சந்தா ,, — ,, 1--12		கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
வெளி நாட்டிற்கு ,, — ,, 5—0		நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8.   ஈரோடு, ஆங்கிரஸ-ஹு சித்திரை-மீ 19-உ (1—5—1932)   மலர் 1.

எட்டாவது ஆண்டிற் குடி அரசு.

(ஆக்கியோன் புதுவை, பாரதி தாசன்.)

விருத்தம்.

ஏழாண்டி னின்று நீ எட்டாம் ஆண்டின்
எழிற் பீடம் ஏறிவிட்டாய் வெல்க! வெல்க!
பாழாண்ட படிவிட்டே அறிவியக்கப்
படியேற்றிப் படியேற்றி நாங்கள் கொண்ட
வாழாத நிலை நீக்கி வாழ் நிலைக்கு
வரச் செய்யப் பணியாற்றும் நன்மை தன்னில்
சூழ்கின்ற குடி அரசே! வெல்க! உன்றன்
சுயமரியாதைக்கொள்கை வெல்க நன்றே!

எட்டாண்டின் எழிற்பீடம் வெற்றி கொள்க!
ஏறி நின்ற உனது நிலை ஏற்றம் கொள்க!
வெட்டாத கத்தியினை வீசாக் கையால்
வெடுக்கென்று தூக்கிஎமை வீழ்த்தப்பார்க்கும்
முட்டாள்கள், வைதிகர்கள், குருக்கள், சூழ்ச்சி
மூளையழிய நடமாடி, நாட்டு மக்கள்
கட்டோடு சமத்துவத்தைத் தாவும் இன்பக்
கருத்தளிப்பாய் குடி அரசே வெல்க நன்றே!

ஏழ் ஆண்டும் உன் நிலையும் உறையும் வாளும்,
எட்டாவதாண்டுதான் உனது வீச்சு!
கூழ்ஆ ண்டே கூழ்ஆண்டே என்று கூவும்
கொடும் ஏழ்மைத் தன்மையினை நீக்கவேண்டும்.
வீழ் நிலையில் நாட்டினரை வீழ்த்தும் தீய
வெம்பலக்காரத்தன்மை தொலையவேண்டும்
சூழ்கின்ற பகுத்தறிவின் இயக்கங்கண்ட
தூய குடி அரசே நீ என்றும் வாழி!

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி. S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

உலகப்பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம்செய்யும். வெட்டைச்சூடு, நிரேககாங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும். 24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்புவலி, நரம்பு தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள் நாவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பலகாரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

தாது புஷ்டிக்கு

"செய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்தது. சகலருக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப் பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

எட்டாம் வருடம்
பிறந்தது காண்
எங்களுக்கு.

[கைவல்யம்]

சுயமரியாதைச் சங்கத்தார்களே! குடி அரசு வாசகர்களே!! அபிமானிகளே!!! ஏழைகளுக் கிரங்கும் இயல்புடையவர்களே!!!! மனிதன் கண்டு பிடித்த உண்மைகளிலே மிகப்பெரிய தரும விதி யாதெனில் எவ்வளவு மனிதன் பிறருக்குள்ளே தன்னைக் காண்கிறானோ அவ்வளவு உண்மை நிலையடைகிறான் என்கிற சத்தியமேயாகும். அதை ஆதாரமாகக் கொண்ட உங்கள் குடி அரசுப் பத்திரிகைகக்கு ஏழாவதாண்டு முடிந்து எட்டாவதாண்டு பிறந்திருக்கிறது.

நமது ஜனங்கள் வைதீகக் கொடுமையாலும், நமது முன்னோர்கள் ஏழை ஜனங்களை காலால் மிதித்து வருத்தின கொடுமையாலும் வெகு நாளாக உட் பட்டு, ஆதரவற்று, வலியற்று, ஒளி மழுங்கி முதுகெலும் பற்ற புழுக்களாய் விட்டதை உணர்ந்த நீங்கள் உங்கள் நல்லெண்ணத்தாலும், நன்முயற்சியாலும் உங்களுடைய உத்தமக் கொள்கைகளை சன சமூகத்திடையே பரப்புவதற்கு நீங்கள் செய்து வந்த ஏழு வருடத்துப் பிரயத்தினம் வீண் போகவில்லை. நமது வழியிலுள்ள தடைகள் எத்தனை பெரியதாயினும் நமது நாட்டாரின் கண் முன்னே உங்கள் பரம சத்தியத்தின் முக்கியம் புறக்கணிக்கப் படவில்லை.

நமது நாட்டில் எல்லா அதிகாரமும், கௌரவமும் கொண்டு நிற்கும் ராஜீய, சமய, சமூக அதிகாரிகள் நம்மிடம் அன்பில்லாம விருந்தும், மனிதன் தனது இழி குணங்களினின்று விடுபடுதல் நமது நாட்டில் மதிக்கப் படாமலிருந்தும், உயர்ந்த ஜாதியாராலும், படித்தவர்களாலும் மனுஷிய உத்தம லட்சியங்களை பரவச் செய்தல் முக்கியமில்லை என்று பழக்கப்பட்டிருந்தும், அது கடவுளால் சொல்லப் பட்டதென்று பரப்பப்பட்டிருந்தும், குறுகிய மனமுடைய நமது நாட்டுப் படித்தவர்கள் சந்தையில் பகிரங்க விலைக்குப் போகாமலிருந்தும், எண்ணத் தொலையாத தேவதைகளுக்குப் பூசை, நைவேத்தியம் பண்ணி குருட்டச்சத்தால் மானுஷிக உரிமைகளைப் புறக்கணிக்கும் மலிதத் தன்மையற்ற மனிதர்கள் பெருங் கூட்டமாக விருந்தும் இவர்களெல்லாம் உலகப் பொது விதியின் உத்தமக் கொள்கைகளால் மோதுண்டு மதிமயங்கிக் கிடக்கிறாகள். அதனால் உங்களுக்கு புற வெற்றி கிடைக்கா விட்டாலும் அக வெற்றி கிடைத்து விட்டது நிச்சயமேயாகும்.

தமது சாஸ்திரத்தின் ஒளிப்பக்கத்தை ஒரு பக்கத்திற்கும், மற்றொரு பக்கத்திற்கு இருள் பக்கத்தையும் காட்டி தமது குணத்தில் ஓரம்சம் மற்றோரம்சத்தை வஞ்சிக்க விடுதல் எக்காலத்தும் இயலாது என்பதை இப்பொழுது அறிந்து கொண்டு வருகிறார்கள்.

நம்முடைய உண்மை வாதங்களுக்கு எதிர் விவகாரம் என்ன சொல்லுகிறார்கள் என்பதை நாம் அறிந்தே இருக்கிறோம். நாத்திகனென்று சொல்லலாமே யல்லாமல் நியாயம் தெரியாதவர்களென்று சொல்ல முடியாது. தெய்வத்தைக் குற்றம் சொல்லுகிறவர்களென்று சொல்லலாமேயல்லாமல் தெய்வ உண்மையைத் தெரியாதவர்களென்று சொல்ல முடியாது. சமயத்தை நிந்திப்பவர்கள் என்று சொல்லலாமே யல்லாமல் சமயத்தின் சன்மார்க்கத்தை உணராதவர்களென்று சொல்ல முடியாது. சிறிதேனும் நன்மை செய்ய முயல்பவர்கள் பேரில் பாய்வதற்கு எப்பொழுதும் தயாராகவிருக்கும் உயிரற்ற அந்த கூட்டத்திற்கும் உயிரைச் செலுத்துவதும் உங்கள் வேலையேயாகும். லட்சியத்தை அடைகிறவரையில் நிற்காதீர்கள் என்று அறிவின் களஞ்சியங்கள் கோஷிக்கின்றன. ஆனதால் எட்டாவது வருடமும் எழுந்து நில்லுங்கள், நீண்ட இருள் கழிந்து போகிறது, பகல் நெருங்குகின்றது அலை கிளம்பி விட்டது அந்த அலையின் உண்மையை எதிர்க்கும் சாமர்த்தியம் ஒன்றுக்குமில்லை.

கைவல்யம்.

இந்த நூற்றுக் கணக்கான வருஷங்களாகத் தடிப்பேரிய மூடக் கொள்கையினால் மேன்மேலும் அதிகரித்து வருகிற சுமையைத் தலையில் தாங்கி உட்கார்ந்து கொண்டு நூற்றுக் கணக்கான வருஷங்களாக் இந்த ஆகாரத்தைத் தொடலாம் அல்லது தொடக் கூடாது என்று வாதம் செய்து கொண்டு, நூற்றுக் கணக்கான வருஷமாக கடவுள் மொழி வடமொழியா? தென் மொழியா? தொல்காப்பியம் முந்தியா? அகஸ்தியர் இலக்கணம் முந்தியா? கடல் கொண்டது முந்தியா? கையிருப்பு முந்தியா? சிவன் முந்தியா? விஷ்ணு முந்தியா? என்கிறவைகளில் தர்க்கம் செய்து சனசமூகத்தின் இடைவிடாத கொடூரத்தினால் சீவ காருண்யம் சிறிதுமில்லாமல் பரந்த உலகத்தையும் பாராமல் படித்தவர்களென நினைத்துக் கொண்டிருக்கும் நம்மவர்கள் மத்தியில் தான் எளியவர்களிடத்திலிரக்கம், பொது ஜனங்களுக்கு அறிவையளித்தல் நம்முடைய முன்னோர்களது கொடுமையினால் மிருகப் பிராயத்திற்கு வந்திருக்கப் பட்டவர்களை மனிதர்களாக்குவது முதலிய உங்கள் வேலையும் நடைபெறவேண்டியிருக்கிறதென்பதை நீங்களறிவீர்கள். வீரர்களே! பெருங்காரியங்களைச் செய்கின்றவர் வீரமற்றவர்களன்று.

பலம் பொருந்திய பல[illegible] நாகரீகங்கள் பல தேசங்களில் உண்டாயின. பூர்வ காலத்திலும், தற்காலத்திலும் பல பராக்கிரமமுள்ள பெருஞ் ஜாதியர்களிடத்திலிருந்து மேலான கருத்துக்கள் உதித்தன. பூர்வ காலத்திலும், தற்காலத்திலும் ஒரு ஜாதியாரிடத்திலிருந்து விளங்கிய ஆச்சரியமான புதிய கருத்துக்கள் மற்ற ஜாதியாரிடத்தும் போய் பரவலாயின பூர்வ காலத்திலும், தற்காலத்திலும் தத்துவ ஞானத்தைப் பரவச் செய்ய விரும்பிய ஜாதியார்கள் தத்தம் அதிகார வைபவ ஆடம்பரங்களோடு நாடுகள் தோறும் சென்று பிரசங்கிப்பாராயினர். தமக்குத் தெரிந்த உணர்வை அயல்நாட்டாருக்குப் போதிக்கப் போனவர்கள் ரணபேரிமுழக்கத்தோடும், சேனை சமூக சகாயத்தோடுமே சென்றார்கள். அவர்களின் மதக் கொள்கைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் இரத்தப் பிரளயத்தில் தோய்ந்தே பரவ வேண்டியதாயின. அவர்களின் கொள்கை ஒவ்வொன்றும் ஒவ்வோரிலட்சம் மனிதர்கள் மாண்ட இரத்தப் பிரவாகத்தில் நடந்து செல்வனவாயின. அவ்யுத்த வீரர்களின் வாயினின்று வீர உரைகள் ஒவ்வொன்றாலும் அனேக ஜனங்கள் புலம்பிப் பிராணனை விட்டார்கள் இவ்வாறன்றோ தம் மதத்தைப் பரவச் செய்தார்கள்.

அவ்வாறு நமது இந்து மதங்கள் இரத்தப் பிரவாகத்தில் தோய்ந்து பரவாவிட்டாலும் மதத்தின் ஆதிக்கம் வகிப்பதற்கும், நிலைநிறுத்துவதற்கும் பல வஞ்சனையும், கொடுமையும் செய்யப்பட்டே இருக்கின்றன. இவைகளைப் போல சுயமரியாதைக் கொள்கைகளுக்கு ஒரு வீர உரையும் தேவையில்லை ஒரு துளி இரத்தம் சிந்த வேண்டியதில்லை, வஞ்சனையும் கொடுமையும் அவசியமில்லை அதன் தத்துவங்க ளெல்லாம் அறிவின் முன்னால் நிருத்தப்படுகின்றன ஆலோசித்துப் பார்க்கும்படி யாகவே எல்லாரையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சுயமரியாதைச் சங்கத்தைப்பலர் இது சரித்திரத்திலே ஒரு விநோதம் காலதேவதையின் குழந்தை விளையாட்டு, வெட்டிவேலை, வீணர்குறும்பு, படிப்பில்லாக்கூட்டம், பக்தியில்லாப்பாவிகள் மழைகாலத்தில் உண்டாகும் குமிழியைப்போலே கோளத்திலும் வர்ணத்திலும் குறையில்லை. அன்றல் உள்ளே ஓட்டை சத்தில்லாதது உடைந்தே போட வேண்டுமென்று எண்ணினார்கள். இடைஞ்சல் செய்தார்கள் அவர்களை பந்திக்கு வரப்பயந்தார்கள் சபைக்கு வரச்சந்தேகப்பட்டார்கள் மேடையேறினால் மெய்பேசவேண்டுமேயென்று மேலும் கீழும் விழித்தார்கள்.

தொடர்ச்சி 26-ம் பக்கம் பார்க்க

நூலறிவும் உணர்வும்.

சுயமரியாதை உணர்வின் காரியம்.

—:0:—

(புதுவை பாரதி தாசன்)

மனிதன் அறிபவன். மனிதனுக்கு அறிவுண்டு. மனிதன் எவற்றையும் அறிபவன். எவையும் அறிவுக்கு உட்பட்டவை.

உண்மை என்பது உள்ளத்தின் தன்மை. அதாவது உட்புறத்தின் தன் இயல். மெய்மை யென்பது மெய் (உடல்) யின் தன்மை. அதாவது மேற்புறத்தின் இயல். கடலின் மேற்புறம் கண்டோன் கடலின் மெய்மை கண்டோனு வான். கடலின் உள்ளியல் கண்டோன் கடலின் உண்மை கண்டோனுவான்.

மனிதன் அறிபவன். தன் னுண்மை, தனது மெய்ம்மை, உலகுண்மை, உலகின் மெய்மை. அடங்கல் உண்மை, அடங்கலின் மெய்ம்மை ஆகிய அனைத்தையும் அறிபவன். (அடங்கல்-எல்லாம்)

அறிவு என்பது உண்மை, மெய்ம்மைகளை அறிதல் என்பதனோடு அனைத்தையும் அறிதல் என்பதுமாகும்.

அறிவின் நோக்கம் பெரிது! அறிபவனுகிய மனிதன் தான், இல்லம், ஊர், நாடு, கண்டம் உலகம், வானம், வானுள்ள கோளங்கள், ஆகியவை உள்ளிட்ட பெரும்புறம் அனைத்தின் உண்மையையும், மெய்ம்மையையும் அறியும் நோக்க முடையவன்.

இப்பெரு நோக்கமுள்ள மனிதனின் நிலையோ சிறிது. தொட்டாலன்றி உணரமுடியாத உடல் கூப்பிடு தூரத்திலும் உள்ள உருவத்தைக் காண முடியாத சிறு கண்கள், சிறிய காதுகள், சிறிய வாய், சிறு மூக்கு ஆகியஇவற்றை யுடையவன், அனைத்தின் உண்மை மெய்ம்மைகளை அறிதலான தனது நோக்கத்தை அவன் எவ்வாறு நிறைவேற்றுவான்! இதனுல் அவன் கல்வி கற்றல் அவசியமாகிறது.

கல்வி என்பதற்குப் பெயர்ப்பு என்பது பொருள், கல்லல், கல்வி, கற்றல், கற்பு அனைத்தும் ஒரு பொருட் சொற்கள். சூரியன் பல்லாயிர அடி உயரத்தில் இருக்கிறது; ஒளியால் வெப்பத்தால்அது அறியப் படுகிறது. இது வன்றி அதன் உட்புறத்தின் தன்மை, வெளிப்புறத்தின் தன்மை அறியபடவில்லை- ஆயினும் அறிஞர் ஆக்கிய நூற்களில் அச்சூரியனது விஷயப் பெயர்ப்பு உண்டு. சூரியனுல் எதிர் பார்த்த அறிவு அதைப் பற்றிய விஷயப் பெயர்ப்புள்ள கல்வியால் நிரம்பலாம்.

அறிவு என்பதற்கும், நூலறிவு அல்லது கல்வி யென்பதற்கும் வித்தியாசம் உண்டு. அறிவு உண்மை மெய்மைகளை மாத்திரம் ஆதாரமாக உடையது, நூலறிவு அல்லது கல்வி என்பது உண்மை, மெய்ம்மை, பொய்ம்மை, மடமை முதலியவைகளை ஆதாரமாக உடையது. கேள்வியறிவும் இவ்வாறே.

ஒருவனுக்குத் தன்னிலையில் உள்ள அறிவானது விவாதத்துக் குரிய நூலறிவால் பெருகி வரும் காரணத்தால் பொதுவாக மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் அறிவு தார்க்கிகத்துக்கு உட்பட்டதே யாகும். அறிவினுல் எதிர்பார்க்கும் பயன் இன்ப வாழ்வு பெறுவதாகும் உண்மையும், மெய்மையும் உடைய இவ்வறிவால் இன்ப வாழ்வு பெறுதல் நிச்சயம். பொய்ம்மைமடமைகளையும் உடையதான தார்க்கிக ஞானத்தால் இன்ப வாழ்வு கிட்டுதல் நிச்சயமாகுமா?

தார்க்கிகமாவது "இது சரியா? சரி அன்று? சரி என்பதற்கு அறிகுறி இது வல்லவே! பிழை என்பதற்கு அறிகுறி இது வல்லவே! வீண் பயன். எதுவாயிருக்கலாம்! தீமையோ! நன்மையோ! என ஒருவன் தனக்குள் தர்க்கம் புரிவதாகும் தார்க்கிக ஞானமானது செயலில் இரங்கத் தீவிரப்படுத்தாது. ஒன்றைப் பற்றி நிச்சயிப்பதற்கும், தயங்குவதற்கும் காரணத்தைத் தானே கண்டு பிடித்துக் கொண்டிருக்கும் நூலறிவு தார்க்கிகத்துக் குரியதே.

அநுபவ ஞானம் என்பதொன்று உண்டு. அது உணர்வு, உணர்ச்சி எனவும் சொல்லப்படும். உணர்வு என்பதைச்சிறப்பித்து "உணர்வு எனும் பெரும் பதம்" என்றார் ஆழ்வாரும்.

தார்க்கிக அறிவுக்கும் உணர்வுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், தார்க்கிக ஞானமானது செயலில் வருவது துர்லபம். ஒன்றை அறிந்ததற்கு அறிந்தபடி செயல் செய்வதற்கும் இடையில் தாமதமேயின்றி அறிவும் செயலும் ஒரே நேரத்தில் நிகழ்வது உணர்வு.

நெப்போலியன் நூலறிவால், தார்க்கிக ஞானத்தால் காரியம் செய்யவில்லை எனவும், அவனது வெற்றி அனைத்தும் உணர்வின் பயனே எனவுஞ் சொல்வர் பாரிசியார்.

நமது நாட்டில் விவாதத்துக் குரிய நூலறிவும், கேள்வி யறிவும் மிகுதியாகும். இதனுல் தான் நம்மவர் செயலற்றுக் கிடக்கின்றனர். பட்டறிந்ததன் பயனுகவாயினும் உணர்ச்சி பெறவில்லை.

உணர்ச்சி தேவை! உணர்ச்சி பிழைபடுவதில்லை. அது உண்மை, மெய்ம்மைகளை ஆதாரமாகக் கொண்ட அறிவும் செயலும் அன்றோ! அந்தோ உணர்வு பெறாதிருக்கின்றார்கள் தார்க்கிக ஞானிகள், நூலறிஞர்கள்!

கடவுட்பைத்தியம், மதப்பூசல் சாதிப்பிரமாபம், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பட்ட தொல்லை பல பெரும் பாரதம்! இவைகளைத் தொலைக்க வேண்டும் என்பதை உணராதிருக்கின்றார்கள் தார்க்கிக ஞானிகள்! அந்தோ இவ்விஷயத்தில் இவர்கள் உணர்வு கொள்ளாதிருத்தலேயன்றி ஏழு ஆண்டுகளாகக் குடிஅரசு செய்து போந்த கிளர்ச்சியின் பயனுக் உணர்ச்சி எய்து வரும் பெருமக்களை,-சுயமரியாதை காரரை - அறிவியக்கத்தினரைப் பார்த்து "இவர்கள் நூலறிவற்றவர்" என்றும், "ஆராய்ச்சியற்றவர்" என்றும் சொல்லி உணர்ச்சிக்குத் தடை போடவும் முயல்கின்றனர் இவ்வறிஞர்

தொடர்ச்சி 25-ம் பக்கம் பார்க்க

இயந்திரப்பெருக்கத்திற்குத் தகுந்த மாதிரியில் நமது சமூக ராஜீய அமைப்பைத் திருத்திக்கொண்டோமேயானுல் யந்திரங்களை அடக்கியாளும் சக்தி நமக்குத்தானுகவே தோன்றும். அப்படியில்லாமல் யந்திரங்களை கூடாதென்று பகிஷ்கரித்து நமது முன்னோர்களைப் போல கைராட்டினத்தையும், கைக்கதரையும் போற்ற ஆரம்பித்தோமானுல் நாம் காலாடையில் காட்டுமிராண்டிகளாகி மிருகப் பிராயத்தையடைய வேண்டியதுதான். இந்திய தேசத்தினையும் விட மூடத்தனத்தில் மூழ்கிக்கிடந்த நாடுகள் தங்களுடைய ராஜ்ய, சமூக அமைப்புகளைச் சீர்திருத்தஞ்செய்து கொண்டு யந்திரங்களைப் பெருக்கிக்கொண்ட மாத்திரத்தில் வெகுநாளாக முன்னேற்றமடைந்ததாகக் கருதப்பட்ட நாடுகளுடன் வியாபாரத்துறையில் போட்டி போட ஆற்றல் பெற்றுவிடுவதை நம் கண்முன் கண்டும் இன்னும் தக்கிளி சுற்றுவதுமூலம் முன்னேற முயலுவது அறிவுடைமையாகுமா வென்பதைச்சிந்தித்துப் பார்க்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேனுட்டு சுற்றுப்பிரயாணத்திலுள்ள தோழர்,

(எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல்.,)

சமதர்ம உதயம்.

சுயமரியாதை இயக்கத்தின் எட்டாவதாண்டு.

இந்திய உலகிற்கோர் நற்குறி.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

சுயமரியாதை இயக்கம்; இன்று, 8-வது ஆண்டை அடைகிறது. நமது சமதர்ம உதயத்திற்கு ஓர் நற்குறியேயாகும். இந்தியதேச முழுமையும், நமது தமிழ் நாடு முக்கியமாக, சுயமரியாதை இயக்கத்தை, பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு வாழ்கவென, ஆசிர்வதித்தல் வேண்டும். பகுத்தறிவை வளர்க்கவேண்டிய அவசியத்தைக் கோருகின்றோர் யாவரும், நமது கோரிக்கையை மறுக்கார்கள் என, நம்புகின்றோம். பல்லாயிரம் வருஷங்களாக, பகுத்தறிவை இழந்த நமது மக்களுக்கு பகுத்தறியும் தன்மை மென்மேலும் விருத்திசெய்து, பண்டை கால மூடப்பழக்க வழக்கங்களை யொழித்து, புனிதர்களாக வேண்டி, உழைத்து வரும், சுயமரியாதை இயக்கத்தோர்களும் அவர்களை ஆதரித்துவரும் நமது நாட்டு விவேகிகளும், பத்திராதிபர்களும், தாங்கள், கடந்த இந்த 7 வருஷ காலமாகச் செய்து வந்த காரியங்களைக் குறித்து மகிழ்வடைய பல காரணங்களுண்டு. தேச லௌகீக (Secular Advancement) முன்னேற்றத்தைக்குறித்து நமது தமிழ்நாடு முழுமையும் சுயமரியாதை இயக்கத்தார் பெரும் பாடுபட்டுவுழைத்து வருவதை யாரும் மறுக்கார்கள்.. அரசியல் துறையில் இந்தக்கூட்டத்தார், இதுகாறும் இறங்கா விடினும், அரசியல் நடத்தும் நமது தமிழ் நாட்டு நிர்வாகிகாரிகளில் சிலர் இந்த இயக்கத்தை அனுதாபத்தோடு கவனித்து வருவதும் நற்குறியேயாகும்.

2. ஒருகாலத்திலாவது நமது இந்திய பாமர மக்கள், துராசார மத பழக்க வழக்கங்களிலிருந்து விடுபடுவார்களென்ற கோரிக்கை, நமதுள்ளத்தில் இருந்து வந்த போதிலும், அது எந்தக் காலமோ வென்ற சந்தேகம் நிறம்பி இருந்தது. ஆனல் சுயமரியாதை இயக்கத்தின் வெற்றியை நோக்க நோக்க, அக்காலம் எக்காலமோ வென்ற சந்தேகம் வொழிந்து, நமது காலத்திற்குள்ளே, அந்த காட்சியை காணலாமோ வென ஆசை மிகுந்து வருகின்றது.

3. சுயமரியாதைச் சங்கங்களும் அதன் மகாநாடுகளும், கூட்டங்களும், சமதர்ம சபைகளும், சுயமரியாதை நோக்கங்களை ஆதரித்து வரும் பத்திரிகைகளும் தினே தினே அதிகரித்து வருங்காட்சி, இனி வரும் சமதர்ம ஆட்சிக்கு, பெரும் அறிகுறிகளேயாகும்.

4. இந்த சுயமரியாதை இயக்கத்தை ஆங்கில நாட்டில் வலுவடைந்து வரும் லௌகீக ஸ்தாபனங்களாகிய, லௌகீக சங்கங்கள் (Secular Societies) பகுத்தறிவை விருத்தி செய்யும் சங்கங்கள் (Free Thought Societies) அறிவை வளர்க்கும் சங்கங்கள் (Rationalist Associations) முதலிய பகுத்தறிவை வளர்க்கும் சங்கங்களுக்கு ஒப்பிடலாம். இன்னொரு விஷயமும் இன்று கவனிக்கத் தகுந்தது. காந்தியாரின் இயக்கம், எப்படி அரசியல் துறையில் நமது பாமர ஜனங்களை கவர்ச்சி செய்து வருகின்றதோ, அதேமாதிரியாகவே, சுயமரியாதை இயக்கமும், லௌகீக விஷயங்களில் பாமர ஜனங்களின்கண்களைத் திறந்து வரும் காட்சியைப்பார்க்கலாம். வாஸ்தவமாகவே, நமது சுயமரியாதை இயக்கம், பொது ஜன கிளர்ச்சியாகவே ஒரு காலத்தில் முடியுமென்பதற்குசந்தேகமில்லை. இந்த இயக்கத்தால் பல்லாயிரங் கோடி மக்கள், இந்துமத பித்தலாட்டங்களில், தங்கள் நம்பிக்கையை இழந்து வருகின்றனர். இன்னும் பல்லாயிரம் மக்களுக்குள், விசாரணை என்ற உணர்ச்சி மேன்மேலும் வளர்ந்து வருகின்றது. நமது "குடி அரசில்", சந்தேகத்தெளிவு அடையவேண்டி, பிரசுரமாகும் வினாவிடைகளும், பகுத்தறிவு பொது மக்களுக்குள் உதயமாகும் அறிகுறிகளேயாகும்.

தோழர் ம. சிங்காரவேலு.

5. கடந்த ஏழு வருஷ காலத்தில் "குடி அரசு" நமது சுயமரியாதை இயக்கத்தைபலதுறைகளில் பிரசாரம்செய்து வருவதும், சமதர்ம உதயத்திற்கு நற்குறிகளேயாகும். இந்தக்காட்சி அபூர்வக் காட்சி என்றே சொல்லலாம். 7 வருஷத்தில் ஒரு இயக்கம் தோன்றி அதனைரட்சிக்க பல பத்திரிகைகள் தோன்றியது அறிஞருக்குள் களிப்பும், வியப்பும் தராமலிராது.

6. பல பக்கங்களிலிருந்துபல திசைகளிலிருந்து சுயமரியாதை இயக்கம் இடித்துவரும்இடிகளாலும், குமுறும் குமுறலாலும், மதக்கற்பனைகள் பறந்தோடுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆங்கில தேசத்தில் 100க்கு 99 பேர் தங்கள் ஆலயங்களுக்குப் போவதில்லை. ஆங்கு, "ஆலயம் தொழுவது சாலவு நன்று" என்றது போய் கண்காட்சிசாலைகளுக்குப் போவதும், விவேகத்தை விருத்திசெய்வதே, சாலவும்நன்று என்று கருதலாயிற்று. சுயமரியாதை இயக்கத்தோருடைய எதிர்கால முயர்ச்சியால், இந்நாட்டிலும் அந்தக்காட்சியைக் காண்பதற்கு வெகுநாள் செல்லாது என்று நம்புகின்றோம்.

7. இந்தியாவை நரகத்தில் ஆழ்த்தி வரும் ஜாதிக்கட்டுப்பாடுகளையும், ஜாதிக்கற்பனைகளையும் சுயமரியாதை இயக்கம் கண்டித்து வருவது போல் எந்த இதர இயக்கமும் இன்றைக்கு செய்ய வில்லை என்பதே நமது துணிபு. உண்மையாகவே சுயமரியாதை இயக்கம் இந்த ஜாதிப்பிரச்சினையை பொது மக்களின் இயக்கமாக்கியதோடு (Mass Movement) நடமுறையில் நிவர்த்தி செய்யக்கூடிய விஷயமாக ஆக்கிவிட்டது,

8. இதுவன்றியும், இந்த இயக்கம், தாழ்த்தப்பட்டோருக்கு புத்துயிர் அளிக்க வந்தது என்று எவ்வளவும் நேரிட்டது. காந்தியார் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதை, வெறுஞ் சொல்லோடு நிறுத்திக்கொண்டார். ஆனல் இந்த சுயமரியாதை இயக்கமோ, இதனை காரியாம்சத்தில் (Practical Politics)கொண்டுவர முக்கிய கருவியாயுள்ளது. இன்றைக்கும் சுயமரியாதை இயக்கத்தின் நிழலில் பல்லாயிரம் தாழ்த்தப்பட்டோர், தங்கி தங்கள் கிளர்ச்சியை நடத்தி வருவதே இந்த இயக்கத்தின் உபயோகத்திற்கு போதுமான அத்தாட்சியாகும். இந்த தீண்டாமை என்ற பிரச்சினையை நேர்முகமாக நின்று சுயமரியாதை இயக்கம் தாக்கி வருவது, பகுத்தறிவுடையோருக்கெல்லாம் மனமகிழ்ச்சி உண்டாக்குகின்றது. ஆனல் மந்திரத்தாலும், தந்திரத்தாலும், தீண்டாமையை விலக்க முயர்ச்சிக்கும் இந்து சபையின் முயர்ச்சிகள், யாவருக்கும் அருவருப்பை உண்டாக்கி வருகின்றது. இந்த இரண்டு ஸ்தாபனங்களின் மனப்பான்மையை, பல கோடி பஞ்சமர்கள் சிந்தனை செய்யாமலிரார்களெனவே நம்புகின்றோம். சுருக்கமாகச்சொல்லவேண்டுமானல், இந்து சபையார் தீண்டாமை ஒழிக்கச் சொல்வதெல்லாம், மோசம், பித்தலாட்டம், குழந்தை விளையாட்டு (Puppet Show) மயக்கம் (Illusion) என அறிக! ஆனல் சுயமரியாதையோர் சொல்லியும், செய்துவருவதெல்லாம் உண்மை காரியாம்சம் [practical] நேர்முகமென அறிக. இதற்கும், திருஷ்டாந்தம் வேண்டுமானல் இரண்டு கட்சியார் வாக்குரிமை விஷயமாக ஆதரித்து வரும் திட்டத்தைப் பார்க்க விளங்கும்.

9. இந்து சபையார், பஞ்சமர்களை பொதுப்பிரதிநிதித்துவத்தில் வீழ்த்தி, 5000 வருஷமாக வீழ்த்தி வந்த நிலையில் இருக்கச் செய்கின்றார்கள்! ஆனல் சுயமரியாதை இயக்கத்தார், தாழ்த்தப்பட்டோரை, தனித்தொகுதியால் அவர்களை கரைசேர்க்கப்பார்க்கின்றார்கள்!!

10. ஜாதி சமயத்தை இந்து சமூக வாழ்க்கையிலிருந்து போக்குவதுடன் மெஞ்ஞானத்தைப் பாமரமக்கள் அடைய வேண்டிய அவசியத்தையும் சுயமரியாதை இயக்கம் வற்புறுத்தி வருகின்றது. சுயமரியாதை இயக்கம் காந்தியா

தொடர்ச்சி 24-ம் பக்கம் பார்க்க.

“குடி அரசு” சாதித்ததென்ன?

[தோழர் அ. இராகவன்]

“குடி அரசிற்கு”க் கால்கோலி சென்றவாரத்துடன் ஏழாண்டுகள் நிறைவுற்றது. இவ்வாரம் எட்டாவதாண்டு ஆரம்பிக்கின்றது. ஏழு ஆண்டுகளாய்ப் பல பல இன்னல்களுக்கிடையே “குடி அரசுக் கொள்கைகள்” யாண்டும் பரவிவருகிறது. முதலாவதாக உங்கள் “குடி அரசு” பார்ப்பனீயத்திற்குப் பகையாகவும், பின்னர் அரசியலுக்கு விரோதமாயும், அதன் பிறகு இந்து மதத்திற்கும், அதன் கிளை மதங்களாகிய கிறிஸ்து மதம், காந்தீயம், சைவம், வைணவம் முதலியவற்றிற்கும் விரோதமாயும் பிறகு மக்களுலகிற்குப் பெரும் கேட்டை விளைவிக்கும் சாத்திர வெறி, கோத்திரவெறி, கடவுள் வெறி, மகளிர் உரிமையை மறுக்கும் வெறி முதலிய பல வெறிகளுக்கும் காரணமாய் மிளிரும், கடவுள், வேதம், புராணம், காவியம், ஓவியம், மூடப்பழக்க வழக்க ஒழுக்கங்களனைத்தையும் ஒழிக்க முனைந்து வேலை செய்தது. இவ்வாண்டு முதல் தான் மேற்போட்டுக்கொண்ட பல தொண்டுகளுடன் முதலாளி, தொழிலாளி, ஆண் பெண் முதலிய சகல பேதங்களுமற்ற “சமதர்ம குடி அரசைக்” காண உங்கள் குடி அரசு தன் கொள்கையாய்க் கொண்டு மிகு தீவிரமாய் வேலை செய்யப்போகிறது. இனி உங்கள் குடி அரசின் கொள்கைகள் கண்டு பயந்து பல நண்பர்கள் ஓடலாம். புதிய நண்பர்கள் வந்து புகுந்து பல அருந்தொண்டுகள் ஆற்றலாம். புதிய எதிரிகள் பலர் முளைக்கலாம். எனவே இனி உங்கள் குடி அரசிற்கு ஒரு பெரும் சோதனை காலம் என்பதே எனது நம்பிக்கை.

நிற்க பல அன்பர்கள் பல விடங்களிலும் ஏழு ஆண்டுகளாய் “உங்கள் குடி அரசு” சாதித்ததென்ன? என்று வினவுகின்றார்கள். இந்தியாவின் சமுதாய வாழ்விலும், மதவியலிலும், அரசியற் கொள்கையிலும் மாசுபடிந்து, தலைவர்களின் உள்ளத்தில் புகழ், தன்னலம் முதலிய பல பேய்கள் சூழ்ந்து மேலும் மேலும் இந்தியாவை அடிமைக்குழியிலாழ்த்தி பகுத்தறிவைப் பகையாக்கி வந்தஞான்று எவருடைய தயவு தாட்சண்ணியத்திற்கும் அஞ்சாது தம் மனதிற் கண்டவைகளை மிகத்தைரியமாய் எடுத்துக்கூறி மக்கள் வாழ்விற்கு இடையூறாயிருக்கும் யாவற்றையும் ஒழித்துவிடவேண்டுமென கூறிவந்தது உங்கள் “குடி அரசு” என்பதை எவரே மறுக்கவல்லார். உலகிலெவர்க்கும் பயப்படாது உண்மையை உரைத்துவரும் அதன் உயரிய குணத்தைக் கண்டு பல உத்தமர்கள் அக்கொள்கைகளை ஆதரிக்க முன்வந்தனர். “குடி அரசு” தோன்றிய சில ஆண்டிற்குள் குடி அரசுக்கோமான் ஈ.வெ. ரா. அவர்கள் ‘சுயமரியாதை’ யென்னும் வெடிகுண்டுடன் ஒவ்வொரு ஜில்லா, தாலூகாக்கள் தோறும் சென்று படை திரட்டி பகைமையுடன் அரும்போர் ஆற்றி வந்தனர். குடி அரசின் கொள்கையை நன்கு உணராது பல்லோர் தங்கள் சுயநலத்திற்கும், தங்கள் மதத்திற்கும், தங்கள் கட்சிக்கும் ஆதரவாயிருக்குமென்று நம்பி பலரும் குடி அரசுப் படையிற் சேர முன்வந்தனர்.

குடி அரசிற்கு அடி கோலிய அன்பரும், அறிஞரும், சுயமரியாதை வெடிகுண்டை உண்டாக்கியவருமான (தன்மதிப்பியக்கத்தின் வளர்ப்புத்தந்தையுமாகிய பெரியார்) ஈ. வெ. இராமசாமி அவர்களின் இடைவிடாத உழைப்பும், அஞ்சா நெஞ்சமும், தம் கொள்கைகளை ஆன்றோர்களும், பாமரர்களும் எளிதில் விளங்கும் வண்ணம் தெளிவாய் எடுத்துக்காட்டும் பேச்சு வன்மையும், எத்துணை உயர்தர ஆங்கிலப்பட்டம் பெற்ற அறிஞரும், தமிழ்க்கலாவல்லுனரும் மறுக்க முடியாத ஆணித்தரம் பொருந்திய தர்க்க வாதங்களும் “குடி அரசே” தமிழ் நாட்டில் சிறந்த கொள்கையும், இனிய தமிழும், பரந்த நோக்கமும் மிகத்தைரியமுமுடையது என்று அறிஞர்களெல்லாம்போற்றும்படி செய்தது. பின்னர் குடி அரசின்சேனைகளெல்லாம் 1929-ல் செங்கற்பட்டில் கூட்டப்பட்டு பயிர்ச்சி செய்யப்பட்டன. தலைவர்களின்பேரொலிக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் செவிகொடுத்து ஏராளமாக கூடி வெற்றி முரசொலிக்க “குடி அரசிற்கு ஜேய்! என்னும் கோஷத்துடன் சமதர்மக் கொடி யுயர்த்தப்பட்டது. குடி அரசின் உண்மைதத்துவம் அங்குநன்கு வெளியாயின. குடி அரசுக்கொள்கைகள் தங்கள் தங்கள் தன்னலத்திற்கெல்லாம் ஆக்கந்தரும் என்று நம்பிப் போந்த செல்வவான்களும், மிராசுதார்களும், ஜமீன்தார்களும், மந்திரிமார்களும், இதர உத்தியோகஸ்தர்களும். பதவி வேட்டைக்காரர்களும் ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு தலைவர்களும், உருப்பினர்களும், சட்டசபை அங்கத்தினர்களும் பெரியஏமாற்றமடைந்தனர். இஃது தங்களுக்கு விரோதமான ஓர் இயக்கமென்று எண்ணிப் பயந்தனர். பத்திரிகைகளிலும் பல விடங்களிலும் கண்டனங்கள் செய்தனர். நாடெங்கும் குடி அரசுக் கொள்கையைப் பற்றிய பேச்சாகவே காணப்பட்டது. ஆனால் இது தொழிலாளர்கள், ஏழைகள் பெண்மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் முதலியோர் உரிமையை நிலைநாட்டும் இயக்கமென நன்கு வெளிப்படவே ஈரோட்டிலும், விருதுநகரிலும் குடி அரசு இயக்கம், விருது பெற முதலாளிகள், மந்திரி முதலிய உத்தியோகஸ்தர்கள் பதவிவேட்டைக்காரர்களில்லாது ஏழைகளும் தாழ்த்தப்பட்ட மக்களும் பெண்களுமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் “குடி அரசு” படைவீரர்களாய்ப்பதிவு செய்து கொண்டு வெற்றி முழகத்துடன் சமதர்மக் கொடியை உயர்த்தினர்.



தோழர் அ. இராகவன்.

இதனிடையே குடி அரசு இயக்கத்தான் என்றால் பலருக்கு பார்க்கவே வெறுப்பாய் விட்டது. குடி அரசு கட்சியைச் சார்ந்தவன் எங்கும் ஹிம்சிக்கப்பட்டான் குடி அரசு பகிஷ்காரம் என்ற பேச்சு எழுத்தளவில் வலுத்து நின்றது. தோழர்கள் பலர் குடி அரசை ஒழிக்க அல்லும் பகலும் அரும்பாடு பட்டனர். ஆஸ்திகச் சங்கமொன்று தோன்றி மடாதிபதிகளின் பண உதவியுடன் வெகு அயோக்கியத்தனமாய் பிரசாரம் புரிந்தது- தமிழ் நாட்டிலே சுமார் ஒரு டஜன் பத்திரிகைகள் குடி அரசை எதிர்க்கத் தோன்றி தம் பக்கங்கள் முழுவதையும் குடி அரசைப் பற்றிய கண்டனங்களாக வெளியிட்டன. தேசியப் பத்திரிகைகள் பல பக்கமேளம் அடித்தன. இந்நிலையில் குடி அரசை ஆதரித்த அன்பர்களில் சிலர் கூட “குடி அரசு” கொள்கைகள் அதி தீவிரமானது. கடவுளைக் கண்டபடி தாககுகிறது. தேசியத்தை இடை விடாது கண்டிக்கிறது. அது தன் கொள்கையை சிறிது தளர்த்திக் கொண்டால் நாட்டிலதற்குப் போராதரவு கிடைக்கும் என்று கூறினர். குடி அரசுக் கொள்கைகள் ஒரு சிறிதும் தளர்த்தப் படாமல் மேலும் மேலும் அதி தீவிரமாய் வேலை செய்யப் பட்டு வந்தது. அதன் எதிரிகள் குடிஅரசுக் கொள்கைகளும், சுயமரியாதை வெடி குண்டுகளும் செங்கற் பட்டிலே புதைக்கப் பட்டு விட்டது என்றே கூறி வந்தார்கள். ஆனால் இரண்டு மூன்று ஆண்டில் குடிஅரசை எதிர்க்கத் தோன்றிய பத்திரிகைகளும், தலைவர்களும், ஆஸ்திகக் கழகமும் இருக்குமிடந் தெரியாமற் போய் விட்டதை யாவரும் அறிவர். குடி அரசோ சென்ற ஏழு ஆண்டுகளாய் விதவிதமான வேஷமிட்டுத் தோன்றிய பல எதிரிகளின் எதிர்ப்புகளையும், சூழ்ச்சிகளையும் தாண்டி தமிழ் நாட்டினரின் பூர்ண ஆதரவுடன் ஈரோட்டிலும், விருது நகரிலும் வெற்றிக் கொடியுயர்த்தி பல புதிய வீரர்கள் வந்து சேரவே அதன் எதிரிகள் பலரும் தலை கவிழ்ந்தனர்.

நாலாவது முறையாக நாஞ்சி நாட்டில் பிரதான நகரமாகிய நாகர் கோவிலில் குடிஅரசுக் கொடி உயர்த்தப்படுமுன் உங்கள் குடி அரசுக்கோ

தொடர்ச்சி 23-ம் பக்கம் பார்க்க

'சுயமரியாதைத் திருமணமும்' இந்து சட்டமும்.

[திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.,]

சீர்திருத்த வேட்கை யுற்ற ரிய சுயமரியாதைச் சிங்க மன்ன "குடி அரசு"ச் செல்வன், தான் தோன்றிய நாள் தொட்டு வையகந்தன்னில் வளம் பெற உலவி மெய்யருந் தொண்டினை மிகைபட வாற்றி, வாழாது நையும் வகையின் மாந்தர்க்கு வாழ்வு தந்து எழாண்டு நாட்கள் இனிது கடத்தி விட்டான்! இவ்வேழு ஆண்டுகளில் 'குடி யரசு இயற்றியுள்ள சீர்திருத்தங்களையும், செய்கைகளையும் இயம்புதல் எளிதன்று, பழக்கம் என்னும் படுகுழியிற் பட்டு அறிவின்மை என்னும் நாணுற் கட்டுண்டு, 'சமயம்' என்னும் கள்பருகி மயங்கி, சாதி என்னும் அரவின் வாய்ப்பட்டு அரற்றிப் புலம்பிக்கிடந்த அளவில் தொண்டையின் நம் இந்து சமூக மக்களை மேற்கூறிய தீமைகளினின்றும் காப்பாற்ற நம் இணையில் "குடி அரசு" இரவும் பகலும் இடைவிடாது இயற்றிய தொண்டிற்கும் எல்லையுண்டோ? அன்றியும் அதனை எளிதில் இயம்பற்பாற்றோ? இவ்வாறு ஒப்பறும், உயர்வுற்ற உண்மைத் தொண்டு ஆற்றிய 'குடிஅரசி'ன் சீர்திருத்தங்களுள் நம் பண்டைய பார்ப்பனீயர் மயமாய திருமணம் மாறி, பார்ப்பனீயமேயன்றி அதை யொட்டிய சடங்குகள் அனைத்தையும் அறவே பொழித்த சீர்திருத்தத் திருமணம் ஏற்படுத்தப் பட்டது மிகவும் முக்கியமான தொன்றாகும். இத்தகைய திருமணங்கள் தோன்றிய நாள் தொட்டு இதுவரை நூற்றுக் கணக்காக நம் தமிழ்நாட்டிடை இயற்றப்பட்டுவந்து கொண்டே இருக்கின்றன. தைரியமாகவும், சற்றும் தயங்காமலும் நம் மக்களுட் பலர் தினந்தோறும் பண்டைய பார்ப்பனீயத் திருமண முறைறை ஒழித்து இத்தகைய சடங்கற்ற சீர்திருத்தத் திருமண முறையை மேற் கொள்ளுதல் நம்மவர்க்கு அளப்பரும் மகிழ்ச்சியை அளிப்பதன்னியில் 'குடியரசு' ஆற்றி வரும் அருந் தொண்டின் ஆற்றலையும் அதன் பயன் சிறப்பையும் நமக்கு நனி அறிவுறுத்துகின்றது. ஆனால் இவ்வாறு நாள்தோறும் திங்கள் தோறும் மேம்பட்ட தொகையில் ஆற்றப்பட்டு வரும் திருமணங்களைக் கண்ணுற்ற பலர் இவையனைத்தும் நம் "இந்து சட்டம்" என்பதற்கு ஒத்துள்ளவையா? அதன்படி இவையனைத்தும் செல்லத்தக்கவையா? என்னும் ஓர் பேரையத்தைப் பெறுகின்றனர். அக்கேள்வி மிகவும் முக்கியமானது என்பதை ஒருவரும் மறுக்கவே முடியாது. சுயமரியாதைக்காரர்களாகிய நாம் பண்டைய இந்து சட்டத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்றாலும் புதிய சட்டம் ஒன்று தோற்றுவிக்கப்படும் வரையில், இப்போது நமக்கு வழங்கப்படும் சட்டம் இத்தகைய மணங்களைப் பற்றி என்ன கூறுகின்றது என்று நாம் ஆராய்வது இன்றியமையாததாகும்.

பொதுவாகக் கூறுமிடத்து இந்து மதத்தின்படி விவாகம் என்பது ஒரு தெய்வீகமான விஷயம் (Sacrament) மீதாக்ஷரத்தின் படிக்கும், மயூகத்தின்படிக்கும் விவாகம் என்பது ஒரு ஆரியன் தன் முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளாய கடமைகளுள் ஒன்றாகும். ஆதலால் ஒரு இந்து என்பவன் திருமணம் செய்து கொள்ள வேண்டுமெனின் அவன் தெய்வீகத் தன்மையையும், தூய்மையையும் அளிக்கக் கூடிய சடங்குகள் எவ்வெவைகளை சாஸ்திரங்கள் கூறுகின்றனவோ அவையனைத்தையும் இயற்றுதல் அவசியமாகும். ஆகவே சாத்திரத்தின் படிக்குக் கண்டிப்பாகவும், கவனமாயும் ஆற்ற வேண்டின் மண்டலீகர் கூறு. இருபத்தேழு (27) சடங்குமுறைகளையும் அனுஷ்டித்தாகவேண்டும். ஆனால் மண்டலீகரே இச்சடங்குகள் அனைத்தும் பழக்க வழக்கம் போன்ற பல காரணங்களால் அனுஷ்டிக்கப் படுதல் இயலாது என்று கூறுகின்றார், எனினும், (1) மணமக்கள் தேர்தல், (2) பெண் வீடு பார்க்கப் போதல் (3) பெண்ணின் தந்தை சம்மதத்தின் பேரில் சில பண்டிகை கொண்டாடுதல் (4) பெண்ணை நீராட்டுதல், (5) மணமகன் பெண்வீடு புகுதல் (6) ஆடையும் அணிகலனும் மணமகட்களித்தல், (7) மணத்தில் அர்க்கியம் ஆற்றுதல் (8) ஹோமம் வளர்த்தல் (9)பாணிக்கிரகணம் செய்தல், (10) அம்மி மிதித்தல், (11) அக்கினியை வலம் வருதல் (12) தான்யம் எரித்தல், (13) சப்தபடி அல்லது எழு அடி செல்லுதல் ஆகிய இச்சடங்குகள் சாதாரணமாக ஒவ்வொரு இந்து திருமணத்திலும் அனுஷ்டிக்கப் படவேண்டும். "ஆனால் இவ்வாறு சடங்கு ஆற்றுதலில் தேர்ச்சி பெற்ற அந்தணர் கிடைத்தல் அரிதாகையின் மக்கள் சமயத்துக் கேற்றவாறு சடங்குகள் ஆற்றிக் கொள்ளுவார்கள். தாம்பூலம் வழங்குதலும் தம் குலத் தெய்வத்தைப் பேணுதலும் இவை இரண்டுமே சில விடங்களில் சடங்குகளாய் விடுகின்றன." அனேகமாக 'விஹாக அக்கினி' (Nuptial fire) என்பதும், ஹோமத் தியாகம் (Homa Sacrifice) என்பதும் செய்யப் படுவதே இல்லை ஆனால் 'சப்தபதி' (Saptapati) என்னும் சடங்கு மட்டும் மற்ற எல்லாவற்றினும் முக்கியமானது என்று மனு, வசிஷ்டர், யமா முதலியோர் வற்புறுத்துகின்றனர். எனெனின் அச் சடங்கு தான் மணம் பூரணமாக முடிவடைந்தது எனக் காட்டுகின்றது.



திரு. பாலசுப்பிரமணியம்.

ஆனால் தற்காலத்தில் வழக்கத்தில் இச்சாத்திர சம்பந்தமான சடங்குகள் அனேகமாய் கைவிடப் பட்டு வருகின்றார். ஆகையால் தான் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர், முத்துசாமி Vs. மாசிலாமணி என்னும் வழக்கில் பின்வருமாறு கூறுகின்றனர். "இந்து வழக்கறிஞர்கள் ஒரு சரியான திருமணம் நடத்த பல சடங்குகள்வேண்டுமெனக்கூறியுள்ளனர். ஆனால் அச்சடங்குகள் முழுதும் அனுஷ்டிக்கப் படுவதே கிடையாது. அவர்கள் விவாக ஓமமும், சப்தபதியும் அவசியம் வேண்டும் என்பார்கள். ஆனால் வழக்கத்தில் எவ்வளவோ ஜாதிகளில் அவை இரண்டும் இல்லாமலே கலியாணங்கள் நடை பெறுகின்றன. ஆக ஒரு ஜாதியின் வழக்கப்படி மேற் கூறியவையன்றி வேறு சடங்குகள் இருந்தால் போதும் என்று இருக்கு மேல் அம்மணம் செல்லத் தக்கது தான்."

மேற்கண்டவைகளிலிருந்து நாம் பெறக்கிடப்பது என்ன வென்றால் பொதுவாக ஆதி இந்து சட்டத்தின் படி பல சடங்குகள் திருமணத்திற்குத் தேவை என்பதும், அதிலும சப்தபதி என்னும் சடங்கு மற்றவைகளைக் காட்டிலும் (அவை இல்லாவிடினும்) அவசியம் என்பதும், ஆனால் ஒரு சாதியினர் தமது வழக்கம் வேறு என்று காண்பித்தால் அதுவும் கூட அவசியம் இல்லை என்பதுமே.

இப்பொழுது நாம் இவைகளைக் கொண்டு நம் 'சுயமரியாதைத் திருமணத்தை' நோக்குவோம். சுயமரியாதைத் திருமணத்தின் அடிப்படையான கொள்கை திருமணம் என்பது ஒரு ஆணும், ஒரு பெண்ணும் உலக வாழ்வை ஒத்திருந்து வாழ அவர் இருவரும் தம்முள் செய்து கொள்ளும் ஒரு ஒப்பந்தம் என்பதே யாகும். தெய்வீகத்துக்கும் திருமணத்துக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இக்கொள்கை தற்காலத்திய இந்துலாக் கொள்கைக்குச் சற்று ஒட்டியதே தான். எனெனின் இப்பொழுது திருமணத்தை இந்து சட்டம் தெய்வீகக் குணமும் ஒப்பந்தத் தன்மையும் உடையது என்று கொள்கின்றது, மற்றும் 'சுயமரியாதைத் திருமணம் யாதொருவிதமான சடங்கும் இல்லாமல் செய்யப்படுகிறது மிகவும் முக்கியம் என்று கருதப்படும் சப்தபதி என்னும் சடங்கும் கூட இல்லாமல் சட்டத்திகேற்ற மணம் செய்யப் பட வேண்டுமானால் நாம் மேலே கண்டபடி அத்தம்பதிகளின் ஜாதியின் வழக்கம் (Custom) அவ்வாறு செய்ய இடம் கொடுக்க வேண்டும். ஆனால் சுயமரியாதைத் திருமணம் செய்து கொள்ளும் இந்து மக்களுள் பெரும்பான்மையோர்களது "ஜாதி"யில் இத்தகைய வழக்கப் இருக்காது என்பது திண்ணம். ஆகையால் இவற்றை யெல்லாம் கண்ட சிலர் (வழக்கறிஞர்களும்கூட) உடனே, 'சுயமரியாதைத்திருமணம்' இந்து சட்டத்தின்படி முற்றிலும் செல்லத் தக்கதல்ல வென்று முடிவு செய்து விடுகின்றனர். ஆனால், சற்று நமது தற்காலவழக்குகளையும், அவைகளில் வழங்கப்பட்டு வந்ததீர்ப்புகளின் அபிப்பிராயங்களையும் உற்று நோக்கி ஆராய்பவர்க்கு மேற்கூறிய அபிப்பிராயம் முழுதும் சரியானதல்ல வென்று நனிவிளங்கும் என்று நினைக்கின்றோம்.

முதலாவதாக ஒரு மணம் சட்டப்படி செல்லத் தக்கதா? இல்லையா? என்னும் பிரச்சினை எழுவதற்குக் காரணம் என்ன? அது அத்திருமணத்தின் பயனாகவோ, அல்லது அதைச் சார்ந்தோ ஏற்படக் கூடிய வேறுபலஉரிமைகள் அத்தம்பதிக்கும், அவர்களைச் சார்ந்த ஏனையோர்க்கும் உண்டா இல்லையா என்னும் கேள்வியை நிர்ணயிக்கவேண்டிய அவசியமேயாகும். அத்தகைய உரிமைகள் இருவகைப்படும். 1. தம்பதி உரிமைகள் (Conjugal Rights) அதாவது கணவன் மனைவி என்னும் இவ்விருவருள்ளும் ஒருவர் வயின் மற்றொருவர் கொண்டாடக் கூடிய உரிமை. 2. மற்றொன்று இவ்விருவருக்கும் பிறக்கும் குழந்தைகள் இவர்கள் மாட்டும் இவர்களது சொத்து முதலியனவற்றிற் கொண்டாடக்கூடிய உரிமைகள். மேற்கூறிய உரிமைகள் அவர்களுக்கு உண்டு என்பதையும், இல்லை என்பதையும் அக்கலியாணம் சட்டப்படி சரியானதா இல்லையா என்னும் கேள்வி நிர்ணயிக்கின்றது.

இப்பொழுது மேற்கூறிய இரண்டு வித உரிமைகளையும் நமது சுயமரியாதைத் திருமணத்தையும் சட்டப்படி ஒத்துப்பார்த்தால் நாம் வரவேண்டிய முடிவு என்னவென்றால் முத

தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க

சந்தேகிக்கும்—தெளிந்தவனுக்கும் சம்பாஷணை.

(ஸ்க்ரூஉ ஹூஸ்)

சந்தேகி:—உயர்ந்த சாதிக்காரர்களும், வைதீகர்களும் ஏன் விதவா விவாஹத்திற்குத் தடையாக இருக்கிறார்கள்? விதவைகள் மணம் புரிந்து கொள்ளுவதால் இவர்களுக்கு என்ன நஷ்டம்?

தெளிந்தவன்:—என்ன நஷ்டமா? பலவகையில் நஷ்டம் இப்பொழுது விபசாரத்தடைச்சட்டம் நிறைவேறிச்சென்னை நகரத்தில் அமுலுக்கு வந்துவிட்டது. பம்பாய் நகரத்திலும் அமுலில் இருக்கிறது. இன்னும்சில வருஷங்களில் நாடெங்கும் விபசாரச்சட்டம் அமுலிலிருக்கும். அக்காலத்தில் வைதிகர்கள் சம்பாதிக்கிறதற்கு விதவைகளிருப்பது சௌகரியமாயிருக்கும். அதுமாத்திரமா? வெளியில்போகாமல் வீட்டிலிருந்தபடியே தங்கள் எண்ணத்தையும் பூர்த்திசெய்துகொள்ளலாம். அவர்களை கல்யாணம் பண்ணிக்கொடுத்துவிட்டால் இந்தக்காரியங்களெல்லாம் நஷ்டமாகாதா?

oo oo

சந்:—நமது சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு புரோகிதப்புரட்டைப்பற்றி ஏழை, பணக்காரர் எல்லோரும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் சில பணக்காரர்களைத்தவிர பெரும்பாலான பணக்காரர்கள் இன்னும் புரோகிதத்தை ஒழிக்கவில்லையே! இதற்கென்ன காரணம்?

தெளி:—நீ சொல்லுவது வாஸ்தவந்தான் பணக்காரர்கள் யாருடைய தாட்சண்யத்திற்கும் கட்டுப்படவேண்டியதில்லை. சுலபமாகப்புரோகிதத்தை ஒழித்துவிடலாம். ஆனால்அவர்களுடைய இரக்கமனசுதான் காரணம். புரோகிதர்களும் அவர்களுடைய சொந்தக்காரப் பார்ப்பனர்களும் அதிகநாளாகப் பழகியவர்கள், ஆகையால் திடீரென்று விடமுடியவில்லை, அந்தப்பார்ப்பனர்களுக்காக இல்லாவிட்டாலும் அந்தப்பார்ப்பனர்கள் வீட்டுப்பெண்கள் முகத்துக்காகவாவது புரோகிதத்தை அனுசரிப்பதுபோல நடிக்கவேண்டியதிருக்கிறது. பெண்ணென்றால் பேயும் இரங்கும் அல்லவா?

oo oo

சந்:—சாரதா சட்டத்திற்கு ஏன் பார்ப்பனர்கள் பயப்படவேண்டும்? அவசரப்பட்டுக்கல்யாணம் பண்ணுவதால் வரதட்சிணை அதிகமாகக் கொடுக்கவேண்டும். சாரதா சட்டத்தின்படி சாவகாசமாகச்செய்தால் வரதட்சிணை தொந்தரவு அதிகமில்லை இவ்வளவு நன்மையிருந்தும் அதை எதிர்க்கிறார்களே ஏன்?

தெளி:—சாரதா சட்டத்தை எதிர்ப்பதற்குக்காரணம் வேறு. பெண்களுக்குப்பதினன்கு வயதுக்குமேல் ஆகிவிட்டால் அவர்கள் பெரும்பாலும் இக்காலத்தில் புத்திசாலிகளாகிவிடுகிறார்கள் 14 வயதுக்கு மேற்பட்ட புத்திசாலிப்பெண்களை தாய் தந்தையர்கள் தங்கள் இஷ்டப்படிக்சதியற்ற உச்சிக்குடுமிப்பார்ப்பனர்களுக்குக்கல்யாணம் பண்ணிக்கொடுக்கமுடியாது. அந்தப்பெண்கள் தாங்கள் இஷ்டப்பட்ட புருஷர்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ளுவார்கள். இந்தமாதிரியே அனேக பார்ப்பனப்பெண்கள் சாதிபேதம் பாராட்டாமல் பார்ப்பனரல்லாதார்களையும், கிறிஸ்தவர்களையும், முஸ்லீம்களையும், வெள்ளைக்காரர்களையும் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள், ஆகையால் பார்ப்பனப் பெண்களை அறியாத சிறுபருவத்திலேயே கல்யாணம்பண்ணிக்கொடுத்துவிட்டால் இந்தத்தொந்தரவு கிடையாது. பார்ப்பனர்களின் வருணாச்சிரமதருமம் அழியாமலிருக்கும் இந்தக்காரணத்தால்தான் பார்ப்பனர்கள் சாரதா சட்டத்திற்குப் பயப்படுகிறார்கள.

oo oo

சந்தேகி:— உத்தியோகம் பண்ணும் பார்ப்பனர்கள் கூட, தங்கள் ஆபீஸ்களில் ரகசியமாகக் காங்கிரஸ் பிரசாரம் பண்ணுகிறார்களே! இது ஏன்?

தெளிந்தவன்:— பார்ப்பனர்களுக்கு இப்பொழுது உத்தியோகங்கிடைப்பது கஷ்டமாகி விட்டது ஆகையால் இந்தமாதிரி, பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களிடம் தந்திரமாக பிரசாரம் பண்ணினல், அவர்களில் சிலர் புத்தி தடுமாறி உத்தியோகத்தை விட்டு விட்டுக் காங்கிரஸ் தொண்டராகி விடக்கூடும், உடனே அந்தக்காலியிடத்தில் தமது சொந்தக்காரர்களைக் கொண்டு வந்து உத்தியோகத்தில் வைத்து விடலாம் என்ற தைரியத்தின் பேரில் தான். இதைப் பற்றிக் கொஞ்சமும் சந்தேகப் படவேண்டாம்.

oo oo

சந்தேகி:—சீரங்கம் கோயிலுக்காக மறுபடியும் லாட்டரி ஆரம்பித்திருக்கிறார்களே! ஏன்? சாமியுமா லாட்டரி போட வேண்டும்? பக்த கோடிகள் எவ்வளவோ பேர் இருக்கிறார்களே, அவர்கள் ஏன் சாமியின் குறையை நிவர்த்திக்கக் கூடாது?

தெளிந்தவன்:— சாமிகளின் பாடே ஆபத்தாயிருக்கிற போது லாட்டரி போடாமல் என்ன பண்ணுகிறது? சுயமரியாதை இயக்கம் எற்பட்டபின் கோயில்களின் வருவாய் குறைந்து விட்டது. கோயில் கட்டப் பணங் கொடுக்கலாம் என்று நினைக்கின்றவன் கூட, பக்கத்தில் உள்ள சுயமரியாதை வாலிபன் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதே என்று விழிக்கிறான். பக்த கோடிகளோ எப்பொழுதும் சாமிக்குக் கொடுக்கிற வழக்க மில்லை. சாமி பெயரைச் சொல்லி ஊர் சொத்தைக் கொள்ளையடிப்பவர்கள் தான் பக்த கோடிகள் ஆகையால் சாமி லாட்டரி போடாமல் என்ன செய்வார்?

oo oo

சந்தேகி:—பார்ப்பனர்கள் தாழ்த்தப் பட்ட சகோதரர்களைக் கோயிலுக்குள் விட மறுக்கிறார்களே; ஏன்? அவர்களையும் கோயிலுக்குள் விட்டால், கோயிலில் கூட்டம் அதிகப்பட்டு வருவாய் அதிகமாக வருமோ?

தெளிந்தவன்:—இதில் ஒருபெரிய ரகசியமிருக்கிறது. ஆகையால் தான் பார்ப்பனர்கள், தாழ்த்தப்பட்ட சகோதரர்களைக் கோயிலுக்குள் விட மறுக்கின்றனர். அந்த ரகசியம்

(தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க)

சுயமரியாதை இயக்கத்தில் தான் மனிதத்தன்மை ஏற்படும்.

நமதியக்கமானது நமது உற்சாகத்தினாலும், உறுதியினாலும், ஊக்கத்தினாலும் இந்தியாவிலுள்ள எல்லா மக்களுடையவும் அரசியல் விடுதலையையும், சமூகவிடுதலையையும், உண்டாக்கியே தீருமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. சுயமரியாதை இயக்கத்தில் பிரிவினைக்கு இடமே இல்லை. பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக நமது மக்களிடையில் புகுத்தப்பட்டபாமரதன்மையையும், அறிவுத்தடையையும், இழிவுகளையும் நம்மில் ஒருவரை யொருவர் அடக்கிஆளும் கொடுமையையும் அடியோடொழித்து விட்டு, நாம் மனிதத்தன்மையைப் பெற்று விட்டோம் என்று உலகத்திலுள்ள மற்ற தேசமக்களுக் கெடுத்துக் காட்டக்கூடிய யோக்கியதையை அடைவதையே தான் "தேசியவிடுதலை என்று அவ்விடுதலையையடையவே நான் ஆசைப்படுகிறேன். எப்படிப்பட்ட" "தேசியவாதி"என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுக்கு இதைத்தான் எண்ணுவார்களென்றுநான் கருதுகிறேன். ஆகவே, இந்தக்காரியத்திற்கு நமது சுயமரியாதை இயக்கமே சிறந்த கருவியாகும்,

ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ.

வைதீகர் கொடுமையும். தீண்டாதார் துயரமும்.

(செல்வி. சிவகாமி சிதம்பரனார்)

வைதிகர்களும், பணக்காரர்களும் சுயராஜ்யத்திற்காகவும், மக்களுடைய நன்மைக்காகவும், விடுதலைக்காகவும் பாடுபடுவதாகச் சொல்லுகிறார்கள். இந்தமாதிரி செய்வதாக அடிக்கடி அவர்கள் பத்திரிகைகளிலும் சட்டசபைகளிலும் தங்களை விளம்பரம் பண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இவர்கள் நோக்கம் எல்லாம் சுயநலத்திற்கே என்பதை அவர்களின் செய்கைகளால் அறியலாம்.

காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் சுயராஜ்யம் கிடைத்தவுடன், தீண்டாமையை ஒழிப்போம், பெண்களுக்குச் சுதந்திரமளிப்போம், என்று வாய்வேதாந்தம் பேசுகிறார்கள். ஆனால் சட்டசபைகளில் எப்பொழுதாவது சீர்திருத்தத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டால் தங்கள் அப்பன் வீட்டு ஆஸ்தியைப் பறி கொடுப்பவர்கள்போல் அவைகளை எதிர்த்துப் போராடுகின்றார்கள். மதம் போச்சே! சாதி போச்சே! சாமி போச்சே! அது எங்கள் பழய பழக்க வழக்கம்! என்றும், எங்கள் இந்து மதத்தில் ராஜாங்கம் தலையிடக்கூடாதென்றும் சொல்லி சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேறாவண்ணம் பட்டினிகிடந்தாவது பாடுபடும் இவ்வைதீகக் கூட்டத்தார் சுயராஜயம் வந்துவிட்டால் மக்களுக்குச் சாதிப் பதென்ன?

தீண்டாமையை ஒழிப்போம் என்கிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சாதகமான தனித் தொகுதித் தேர்தலைக் கூடாதென்று திரு. காந்தி உள்பட எல்லா வைதீகர்களும், காங்கிரஸ்காரர்களும் எதிர்க்கிறார்கள். இதுவரையில் இவர்கள் தீண்டாமையை ஒழித்து அம்மக்களுக்கு எதேனும் ஒரு நன்மையாவது செய்திருக்கிறார்களா? இல்லையே, இவர்களாகவே நன்மை செய்யாவிட்டாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுக் குளம், கேணி, தெரு, கோயில், பள்ளிக்கூடம் இவைகளில் மற்ற மக்களைப் போல் நாங்களும் அனுபவிக்க இடந்தர வேண்டுமென்று கேட்டால், வந்ததே மோசம்! உடனே அவர்களுக்கு அடியும், உதையும், வசையுமே தாராளமாய்க்கொடுத்து "தீண்டாதவர்களாகிய உங்களை எங்கள் கண்களால் பார்த்தாலும் பாபம்" என்று விரட்டுகிறார்களே! இது எவ்வளவு கொடுமை! கொடுமை!!

இப்பொழுது, நாசிக்கிலும், குருவாயூரிலும் ஆதிதிராவிட சகோதரர்கள் கோவில் பிரவேசத்திற்காக சத்தியாக்கிரகம் செய்கிறார்களே. "சுயராஜ்யம் வந்துவிட்டால் முதலில் தீண்டாமையைத்தான் ஒழிப்போம்" என்று வாய்வேதாந்தம் ஓதும், யோக்கியர்களாகிய வைதீகக் காங்கிரஸ் கூட்டத்தாராகிய நீங்கள், என் கோவில் கதவை மூடிக்கொண்டு அவர்களை உள்ளே புகவிடாமல் அடித்து விரட்டுகிறீர்கள்? கோவில் உள்ளே என்ன இருக்கிறது. உங்கள் பாட்டன் தேடின சொத்தா? கோவிலினுள் இருப்பதாக நீங்கள் சொல்லும் தெய்வத்தை—உலக ரட்சகர் என்றும், எவ்வளவு அக்கிரமங்கள் செய்தாலும் 3 பைசா கல்பூரம் வாங்கி கொளுத்தினால் போதும்; மன்னித்துவிடுவார்; என்றும், எல்லோரையும் உண்டாக்கின தகப்பன், என்றும், எறும்பு முதல் எண்ணாயிரங்கோடி சிவராசிகளுக்கும் படி அளப்பவர்; என்றும், அவனின்றி ஓரணுவும் அசையாது, கடவுளை நம்பினோர் கைவிடப்படார்; என்றெல்லாம் சொல்லுகிறீர்கள். இந்தமாதிரியான சாத்திரங்களும், கட்டுக் கதைகளும் எழுதிவைத்திருக்கிறீர்கள். இப்படிப் பட்ட எல்லாம் வல்ல தெய்வம் உள்ள கோவிலுக்குள் மனித சமூகத்தினராகிய தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் ஏன் நுழையக்கூடாது? அவர்கள் யார்? அவர்கள் உங்களுடைய வஞ்சகக் கண்களுக்கு மனித சமூகத்தினராய்த் தோன்றவில்லையா? அம் மக்கள் கோவிலில் நுழைந்தால் சாமி செத்துப்போகும் என்கிறீர்களே! அப்படிப்பட்ட ஒரு சாமியும் உண்டா? மேலும் நீங்கள் அக் கோவிலுள்ளேயே புகுந்துகொண்டு செய்யும் அனியாயங்களையும், அக்கிரமங்களையும், மோசங்களையும், ஆபாசங்களையும், ஊழல்களையும், கோடிக்கணக்கில் பொருத்துக்கொண்டிருக்கும் அத்தெய்வம் உங்களைப் போலவே பிறந்து வளர்ந்து ஆறறிவு படைத்த ஜனசங்கத்தினரின் ஒரு பகுதியினராகிய தாழ்த்தப்பட்ட மக்கள் சமீபத்தில் வந்தால் "செத்துப்போவேன்" என்று உங்களிடம் அத்தெய்வம் சொல்லுகிறதா? இல்லையே.

ஆதிதிராவிட மக்கள் கோவிலுள் பிரவேசிக்கவேண்டுமென்பது, "சாமியானது அள்ளிக் கொடுத்து அம் மக்களின் கஷ்டத்தையும், இழி நிலையையும் நீக்கிவிடும் என்பதற்காக அல்ல" என்பதை அறியுங்கள்! மற்ற சாதி மக்களைப்போல் அவர்களும் சம நிலை பெறவேண்டும் என்பதற்காகவே பொது இடங்களின் பிரயோசனத்தைத் தாங்களும் பங்கு கேட்கிறார்கள். இவைகளைக் கொடுக்க மறுக்கும் வைதீகர்களும், உயர் சாதி இந்துக்களும் காங்கிரசின் பேரால் பாடுபடுவதாய் ஏமாற்றுகிறார்களேயொழிய வேறு என்னதான் சாதிக்கக்கூடும்?

திருமதி ஈ. வெ. ரா. நாகம்மாள்.

என்னே இக் காங்கிரஸ்காரர்களின் ஏமாற்றல்! ராமேஸ்வரம் கோவிலில் தேசீயக் கொடியைப் பறக்க விட்டிருக்கிறார்களாம். ஏன்? எதற்கு கோவிலில் தேசீயக்கொடி பறந்தால் என்ன? "தன்னைப் பெற்ற தாய் தவிட்டிற்கழ, மகன் கோதானம், பூதானம் கொடுக்கிறானும்" என்றொரு பழங்கதை சொல்வார்கள். அதுபோல் ஒருபுறம் மக்கள் சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும், முன்னேற்றத்திற்கும் பாடுபட்டுக் கொண்டிருக்கும்போது தேசீயக் கொடியை கோவிலில் கட்டிவிட்டால் ஏமாந்துவிடுவார்களா? தெருக்களில் பிச்சை வாங்கும் சாமியார் வேஷம்போட்ட சோம்பேரிகள் சாம்பலைக் கொடுத்து பாமர மக்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பது போலல்லவோ இருக்கிறது இக் காங்கிரஸ்காரர்களின் ஏமாற்றல்

தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் கோவிலில் நுழைந்தால் தீட்டுப்பட்டுவிடும் என்று ஆர்பாட்டம் செய்யும் வைதீகர்களே! உயர் சாதி இந்துக்களே! சாதி என்பது என்ன? இவ்வேற்றுமை பண்டைக் காலத்தில் உண்டா? இல்லையே, அண்டிப் பிழைக்க இந்து குடிபுகுந்த ஆரிய மக்களால் இந்திய மக்களின் ஒற்றுமையைக் கலைத்து ஏமாற்ற உண்டாக்கப்பட்டதே இச்சாதிகள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்!

ஈவு, இரக்கமற்ற இருதயமுடைய ஓ வைதீகர்களே! அப்படியே சாதி உண்டென்றே வைத்துக்கொண்டாலும்; உங்களில் ஒருவராவது தற்காலம் உங்கள் சாத்திரக் குப்பைகளில் உள்ளபடி பிழைப்புத்தொழில் செய்து பிழைக்கிறீர்களா? இல்லவே இல்லையே. எல்லாத் தொழில்களையும் செய்து பொருள் சம்பாதிக்கும் தற்கால பார்ப்பன மக்கள் யாவரும் சாத்திரப்படி பார்ப்பன மக்களாகவேமாட்டார்கள். மிக இழிந்தவர்களே. என்று சாத்திரங்கள் சொல்லுகின்றனவே. இப்படியிருக்க உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்னும் திமிர்கொண்டு ஒருசில மக்களை அழிக்கப் பார்ப்பது பகுத்தறிவுள்ள மனித செய்கையாகுமா?

இனி தீண்டப்படாத சகோதரர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல ஆசிக்கிறேன். அதாவது— தீண்டப்படாத சகோதரர்கள் கோவில் பிரவேசம் செய்யக் கஷ்டப் படுவதைப் பார்க்கிலும் மக்களுக்கு ஒரு சின்ன உதவியும் இல்லாத அக் கோவில்களை ஒழிக்கச் சத்தியாக்கிரகம் செய்து முயற்சிப்பதே பல வகையிலும் நன்மையுண்டு எனக் கூறுகிறோம். கோவிலினுள் சென்றால் நமக்கு என்ன பலன்? ஒன்றுமில்லை. என் இவ்விதக் கஷ்டம்பட்டு கோவில் நுழைவுக்கு வழிதேடவேண்டும்? இதைவிட எல்லா மக்களுக்கும்உதவியற்ற அக் கோவில்களுக்கு ஒழிக்க வழி தேடுவதே சீர்திருத்தம், பகுத்தறிவு, என மறுமுறையும்கூறுகிறோம்,

(தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க)

பத்திரிகைகளும் நமது நாடும்.

(திருமதி எஸ். நீலாவதி)

பகுத்தறிவிற் சிறந்த பெரியோர்களே! நமது நாட்டின் தற்கால நிலைமை, நமது மக்களின் இக்கால நிலைமை எவ்விதத்தும் பரிதபிக்கக்கூடியதே யென்பதை நீங்கள் ஒப்புக்கொண்டுதான் ஆவீர்கள். எவர் மனத்தும், எத்திசையும் அடிமைத்தனமே நிறைந்து நிற்க. இன்பம்மலிந்த வாழ்க்கையை எதிர்பார்க்கக்கூடவில்லை. எப்பகுதியிற் சென்றாலும், எவ்வித அளவில்பார்த்தாலும் நமது நாட்டின் நிலைமை மோசமானதாகவேயிருக்கின்றது 'தாய்க்கு சுகமிருந்தல்லோ கர்ப்பத்திற்கு சுகம்' என்பதுபோல் எப்போது நாட்டிற்கு நலமில்லையோ, அப்போதுஆங்கு மக்களுக்கும் நலமேற்படவழியில்லை. நாட்டின் நலத்தைப்பற்றியிருக்கிறது மக்கள் நலம். மக்கள் நலத்தைப்பற்றியிருக்கிறது நாட்டின் நலம். வாழ்க்கையில் எவ்வாறு ஆண் பெண் இருவரின் நலமும் ஒருவர்க்கொருவர் இன்றியமையாது வேண்டப்படுகின்றதோ அவ்வாறே மேற்கூறப்பட்ட செய்தியுமாகும். என்பதை எவரும் மறுக்கத்துணியார் என்றே நம்புகிறேன். பண்டு பல்வகையானும் சிறப்புற்றோங்கிய தென்படும் நமதுநாடு இன்று சிறுமை நிலையடைந்து சீர்குலைந்து நிற்பது வருந்தற்பாலதொன்றே! நமது நாட்டின் செழுமை வளம்கண்டே ஆசித்து அன்னிய நாட்டினர் (பார்ப்பனரும்) இங்கு போந்தனர் என்று கூறப்படுகின்றது. உண்மைதான் அப்பேர்கொத்த நமதுநாட்டின் இற்றைய நிலைமை யாதாயிருக்கின்றதென அறிவுடையோர் ஆராய்ந்து பார்க்கவேண்டுவது அவசியமாம். பெண்ணுரிமை, பெண்கல்வி, சுதந்திரம் போங்கு இவைகளில் மிகமுற்போக்கடைந்திருந்த நமதுநாடு இற்றை ஞான்று அவைகளில் எவ்வளவுதூரம் பிற்போக்கடைய முடியுமோ அவ்வளவுதூரம் அடைந்து அவ்விடயத்தில் தன்னை மிஞ்சிய நாடு ஒன்றில்லையென மார்தட்டிநிற்கின்றது. இடையில் வந்த பார்ப்பனீயப் பேயால்தான் நமதுநாடு பல இன்னல்களுக்குள்ளாயதென்பதுமட்டிலும் உண்மை. தம்மைப் பூதேவரெனப்பறைசாற்றி, மற்றவர்களை அடங்கி நடக்கக்கட்டளையிட்டு அடிமையாக்கி வேற்றுமை விருட்ச விதையை நட்டு, நாட்டின நலம் கெடுத்தவர்கள் பார்ப்பனர்களே! அவர்களின் சூழ்ச்சித்தனத்தை அறிந்து அதனையகற்ற ஒருவரும் முன்வராததால் அவர்களின் சட்டதிட்டங்கள் அரசனிட்ட ஆக்ஞைகள் போல் வலுக்கத்தொடங்கி செலாவணியாக நேர்ந்தது. அரசர்களெல்லோரும் இவர் தம் அடிமைகளென்றால் அவர்தம் கைப்பாவைகளென்றால் அதன்பின் யாது இயம்புவது? தேசத்தையாளும் தேசாதிபதியே கைக்குள் அகப்பட்டுவிட்டால் செய்யவேண்டிய காரியங்களுக்கு சிரமமதிகமோ வேண்டும்?

இந்நிலையில் நமது மக்களின் நிலைமை ஆதிகல்வியில்லாது கண்ணிழந்து நிற்பதேயாகும். இதர நாட்டு மக்களின் நிலையையும் நம் நாட்டு மக்களின் நிலையையும் உன்னிப்பார்க்குங்காலையில் துக்கந்தான் பொங்கி பெழுகின்றதே தவிர இன்பத்தை என்னளவேனும் காணக்கிடைக்கவில்லை. அதி சமீபத்தில் மிக அந்தகார இருளில் அமிழ்ந்துகிடந்த நாடுகளெல்லாம் இதுகாலை மிக முன்னேற்றமடைந்த நாடுகளாய்த்திகழ்வதைக்காண்கின்றோம். ஆனல் புராணகாலமுதல் கொண்டு பெருமைபேசப்படும் நமது பொன்னாடு இன்னும் நன்னடாய் விளங்கத்தக்க மார்க்கத்தையும் காணவில்லை. கண்டு கடைப்பிடித்தொழுக அடியெடுத்து வைக்கவும் இல்லை ஆனல் ஏடுகள்மட்டிலும், வாய்வீச்சுமட்டிலும் வீரம் பேசுவது குறையவில்லை நமது நாட்டு மக்கள் கல்வியறிவிற்குறைந்தவர்களென்பதில் ஐயமில்லை. பகுத்தறிவிலோ வென்றால் சைபர்தான். ஆங்கில அரசாங்கம் வந்து சகலரும் படிக்கலாமென்ற சட்ட (நியாய) மிருக்கும்போதே ஆண்களில் நூற்றுக்கு ஏழுபேரும், பெண்களில் ஆயிரத்திற்கிருவரும் படிப்புள்ளவர்களாயிருக்கின்றார்களென்றால் படித்தால் நாக்கை அறுக்கவேண்டுமென்னும் சட்டமிருந்தபோது எவ்வளவுபேர் படித்திருப்பார்களென்பதை அன்பர்கள் தாமாகவே யூகித்துணர்ந்துகொள்ள வேண்டியதுதான்.

திருமதி எஸ். நீலாவதி.

கல்வி ஒளியாங்கில்லையோ, ஆங்கு கண்ணொளியும் கிடையாதெனவே துணிந்து கூறுகின்றேன். இதனையே நமது திருவள்ளுவனாரும்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர்"

என்னும் குறளால் எடுத்துக்காட்டியிருக்கின்றார். ஆனல் கல்வியென்றாலும் தற்காலத்தில் பல படித்த பட்டதாரிகளின் கல்வி போல் ஏட்டுச்சுரக்காய் தன்மையில் இல்லாது வீட்டுச்சுரக்காயாயிலங்கி அறியாமையை ஓட்டும் தன்மையில் முதன்மைபெற்றிருக்க வேண்டுமென்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது, கல்வி ஒன்றில்லாததாலேயே நம்மக்கள் மிருக வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள். ஆறறிவுள்ள கூட்டத்தில் பிறந்தும், அவ்வாறறிவைப் பெறாத காரணத்தால் மாற்றுக்குறைந்த இனத்தில் சேர்க்கப்படவேண்டியிருக்கின்றது. ஆண்மக்களின் நிலையே கல்வியில் இவ்வாறென்றால் கொடுமை! இருட்டறையிலே அடைக்கப்பட்டுகிடக்கும் பெண்மக்களின் நிலையைப் பற்றி அதிகம் பேசவும் வேண்டுமோ? அந்தோ! என்ன நாடு! என்னே! பெண்களின் நிலைமை! நிற்க சந்தர்ப்பமில்லாத போதுதான் அவ்வாறென்றால் சந்தர்ப்பமிருக்கும் இப்போதாவது கல்வியின் அவசியத்தை உணர்ந்தார்களா? இல்லையே! அதிலும் பெண்கல்வியின் இன்றியமையாத தேவையை எண்ணுகின்றார்களா? கல்வியில்லாதோர் கண்ணில்லாக் குருடர்களே என்பதில் குற்றமென்ன? பெண்மக்களோவெனில் முழுக்குருடர்களாயிருப்பதை நினைக்க வயறுபற்றி யெறிகின்றது. கல்லுக்கும், செம்புக்கும், மண்ணுக்கும், மரத்திற்கும் கடவுள் கடவுள் என்றே உடலை வதக்கி என்னபயனைக்கண்டோம்! அறிவாற்றலைக் கெடுத்து ஞானசூன்யர்களாயிருப்பது தான் மிச்சம். இவற்றிலொன்றும் கவலையே கொள்ளாத இதர நாடுகள் பசுமைபொங்கி வழிகின்றது செல்வங்கொழுத்து செழிக்கின்றது. நமது நாட்டுக் கல்வியே இதற்குக் காரணமெனத்துணிந்து கூறலாம்' உனக்கு சொந்த முயற்சி வேண்டாம் கண்ணுக்குத்தென்படாத "கடவுள்" என்ற ஒரு பொருளின்மீதே எல்லாபாரத்தையும் போட்டுவிடு. சுருக்கமாகக்கூறப்போனால் உனது வாழ்க்கையையே அப்பொருள்வசம் ஒப்படைத்திடு" என்னும் குருட்டுக் கல்வியால் சீர்திருத்தக்காரர்கள் எதிர்பார்க்கும் பலன் கிட்டுமா? என்பதுதான் கேள்வி. சொந்த அறிவும் இல்லை. சொந்த முயற்சியும் இல்லை. பின்னர் முன்னேற்றம் எங்குவரும்? இந்நிலையில் நம் நாட்டுப் பத்திரிகைகளின் நிலைமை எவ்வாறிருக்குமென்பதை

தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்க,

சுயமரியாதை.

சுயமரியாதையும் காங்கிரசும்.

[ஈ. வே. ரா.]

திரு. காந்தியால் 1921-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கமானது அரசியல் கொடுமைகள் ஒழிப்பதோடு பார்ப்பனக் கொடுமைகளையும் ஒருவாறு ஒழிக்கும்படியான மாதிரியில் சில கொள்கைகள் கொண்டிருந்தாலும் நம் போன்றவர்களின் ஆசைக்கும், அவசரத்திற்கும் தக்கபடி அது காணப்பட்டதை முன்னிட்டும், அவ்வியக்கத்தில் கலந்து மனப்பூர்வமாக நாலைந்து வருஷ காலம் உழைத்ததின் மூலமும் அது சமயம் பார்ப்பனர்களுடைய நெருங்கிய சம்பந்தம் இருக்க நேர்ந்ததன் மூலமும், அதன்பலாபலன்களைநாமும் ஒரு பங்கு அனுபவிக்க நேர்ந்ததின் மூலமும், அவ்வியக்கத்தின் போக்கை பார்ப்பனர்கள் எந்த வழியில் திருப்பி அதன் பலனை எப்படி அடைய முயற்சித்தார்கள். முயற்சிக்கின்றார்கள் என்பதை நன்றாய் அறிய நமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதிலிருந்து நமது போக்கையும் ஒரு வகையில் ஒன்று படுத்தி ஒரே வழியில் திருப்பி யோசிக்க வேண்டிய அவசியமுண்டாயிற்று. அங்கனம் யோசித்ததின் பலனாக நமக்குக் கிடைத்த பலன் என்னவென்றால் நமது மக்கள் அரசியல் விஷயமாய் கூச்சல் போடுவதும், முயற்சிகள் செய்வதும் சற்றும் நமக்கு பயன் படுவதல்ல என்பதும், இவைகள் பார்ப்பனர்கள் நம் மீது செலுத்தி வரும் தங்கள் உயர்வையும், ஆதிக்கத்தையும், நிலை நிறுத்திக் கொள்ளும் சூழ்ச்சிக்கேது உண்டாக்கப் பட்டிருக்கிறதே தவிர வேறல்ல வென்றும் இன்றைய நிலையில் நமது மக்களுக்கு வேண்டியவைகளெல்லாம் பகுத்தறிவும் மானமுமே முக்கியமானதென்றும், இன்றைய பார்ப்பன ஆதிக்கத்திற்கு முக்கிய காரணமும், அந்நிய ஆட்சியின் கொடுமைக்குக் காரணமும், நமது மக்களுக்குப் பகுத்தறிவும், தன் மதிப்பு உணர்ச்சியும் தடைப்படுத்தப் பட்டிருப்பதேதானென்றும் கண்டு பிடித்தோம். இது மாத்திரமல்லாமல் நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், சமத்துவத்திற்கும் வேண்டிய வேலையெல்லாம் செய்தும் பார்த்து விட்டோம். அதாவது பணம் கொடுத்தோம், சுக சௌக்கியம் [illegible], சிறை சென்றும் இன்னும் மனிதனால் உபசாரத் தவிர வேறு என்ன என்ன சாதனங்களை அலட்சியமாய் கருத முடியுமோ அவ்வளவும் செய்தோம். இப்படிச் செய்ததால் ஒருவரல்ல, இருவரல்ல ஆயிரக்கணக்கான பேர் லட்சக்கணக்கான ரூபாய்களையும் நட்டமடைந்து ஒரு தடவை மாத்திரமல்லாமல் பல தடவை சிறையும் சென்றோம்.

இவ்வளவு செய்ததின் பலனாகவும் கடுகளவு கூட முற்போக்கு அடைய முடியாமல் போனதையும் கண் கூடாகக் கண்டோம் அதன் பிறகே மற்ற நாட்டு விடுதலை நிகழ்ச்சிகளை ஆராயத் தொடங்கியதில் அவற்றிலும், அநேகமாய் ஒவ்வொரு நாடும் நம்மைப் போலவே வேறு பல முயற்சிகளை எவ்வளவோ செய்து பார்த்தும் முடியாமற் போன காலங்களில் எந்த முடிவைக் கண்டு பிடித்து அந்த முயற்சியிலேயே யிறங்கி கடைசியாக விடுதலைப் பெற்று சமத்துவம் அடைந்ததாகவும் கண்டோமோ அதையே பின்பற்ற நாமும் ஆசைப் பட்டோம்.

அன்றியும் பெருமையும், வலிமையும் கொண்ட நாடு என்று சொல்லப்பட்ட ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களின் உன்னத நிலைமைக்கு அவற்றின் பகுத்தறிவு வளர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியுமே முக்கியமானதென்பதையும் கண்டோம். சமீப காலம் வரை கஷ்டப் பட்டுக் கொண்டிருந்த துருக்கி, சைனா, ஜப்பான் முதலிய தேசங்கள் வல்லரசுத் தன்மை பெற்றதற்கு அவற்றின் சுயமரியாதை உணர்ச்சி என்பதையும் கண்டோம். அதன் பிறகே நாமும் நமது தேசத்தின் விடுதலைக்கும், சமத்துவத்திற்கும் பகுத்தறிவும் தன் மதிப்புமே பிரதானம் என்பதாகக் கருதி அதன் முயற்சிக்கு சுயமரியாதை இயக்கம் எனப் பெயரிட்டோம். இவ்வியக்கம் எந்த ஒரு தனிப்பட்ட நாட்டிற்கோ, சமூகத்திற்கோ வென்பதாக இல்லாமல் பொதுவாக தாழ்த்தப் பட்டும், இழிவு செய்யப்பட்டும், தன்மான உணர்ச்சி உண்டாகாமல் அழுத்தப் பட்டும், பகுத்தறிவு வளர்ச்சி செய்யாமல் தடை செய்யப் பட்டும் இருக்கும் எல்லா மக்களுக்கும், கொடுங் கோன்மையில் அடக்கி ஆளப்பட்டு வரும் மக்களுக்கும் பயன்படும்படியான முறையில் அமைக்க விரும்பியே இதில் பிரவேசித்துள்ளோம். பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து மக்களெல்லோரும் சமத்துவம் என்கின்ற உண்மையான மனிதத் தன்மைக்கு தாராளமாய் இடங் கொடுக்கின்ற ஒவ்வொருவருக்கும் இடமும் ஒதுக்கி வைக்கும் எண்ணங் கொண்டே இம்முயற்சி லீடுபட்டோம் என்றும், இம்முயற்சியானது மிகவும் கஷ்டமானதென்றும், அளவுக்குமீறிய துன்பத்தையும் தொல்லைகளையும் விளைவிக்கக் கூடியதென்றும் நாம் நன்றாய் உணர்கின்றோமாயினும், இது வெற்றி பெற்றாலொழிய நமது சமூக மாத்திரமல்ல, நமது நாடு மாத்திரமல்ல, உலக சமூகம் எல்லாவற்றிற்கும் உலக முழுமைக்கும் நிற்பயமான விடுதலையோ, சாந்தியமோ, ஒய்வோ இல்லை யென்கின்ற முடிவினாலும், இம்முயற்சி இன்றைய பெரியோர்களெனப்படும் வயது சென்றவர்களுடைய ஒத்துழைப்பும், ஆதரவும் பெற முடியா விட்டாலும் பெரும்பான்மையான பரிசுத்தத் தன்மையுடைய வாலிபர்களின் கூட்டுறவும், அனுதாபமும், ஆதரிப்பும் மலிந்து கிடப்பதாலும் துணிந்து இறங்கி விட்டோம்; முடிவில் இதனுடைய வெற்றி தோல்வியைப் பற்றி நாம் அதிகமான கவலை எடுத்துக் கொள்ளாமல் இந்த முயற்சி சரி

திரு. ஈ. வெ. இராமசாமி,

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

'குடிஅரசி'ற்கு வாழ்த்து.

(S. லக்ஷிமிரதன்பாரதி M. A., B. L.)

"குடிஅரசு" ப்பத்திரிக்கை ஏழாண்டுகளாக ஓயாதுழைத்து இன்று எட்டாவது வயதடைந்திருக்கிறது. இளமைப் பிராயத்திலேயே இத்தனை கஷ்டங்களுக்குக்கிடையிலும் மனம் உளையாமல் உழைத்த பத்திரிக்கை வேறொன்றும் தமிழகத்தே கிடையாது. சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து, உண்மையான குடியரசேற்படுவதற்கு உற்ற வழிகாட்டியாக உதவும் பால சூரியனாக இன்னும் விளங்குகின்றது. இப்பரிதியின் பேரொளியை நம்மக்கள் இவ்வேழாண்டுகளாகக்கண்டு களித்து அதிற் குளித்தும், இன்னும் குடிஅரசென்னும் நல்முத்தை நாமடைய முடியாதபடி மூடியிருப்பதான அறியாமை இருளாகிய சிப்பியை உடைத் தெறிந்தாரில்லை. என்னே! நம்மவர் பேதமை! நமக்கு குடிஅரசு வேண்டும் அதாவது உண்மையான சுதந்திரம் வேண்டும். சுதந்திரத்திற்குச் சுயமரியாதை அடிப்படை. மக்களுக்குப் பிறப்பு முதல் இறப்புவரையுள்ள, சாப்பாடு முதற்கொண்ட சகல விதமான செயல்களையும் கட்டுப் பாடுசெய்து அவர்தமைஅடிமைகளாகச் செய்யும் மதத்தையும், இன்னும் அவர்களைப் பிறப்பொன்று கருதிப் பல சாதிகளாகப் பிரித்து, அவற்றுள்அழிவிற்குப் பொருத்தமற்ற உயர்ச்சி தாழ்ச்சிகளைப் புகுத்தி,ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் அறவே கொன்று விட்ட ஆரிய நாகரீகப்பேயான வருணாச்சிரமத்தையும், மக்கட் பயிரைப் பயன்பட வளர்த்திடும் மாதர்தமை அடிமைசெய்யும்இதியமடமையையும் ஒருங்கே ஒழித்தலாகிய செயலே இன்றையதினத்திலே, இப்பொழுதே நாம்நன்றே செய்யவேண்டிய நல்லறமாகும். இச்செயலாற்றுவதே சுயமரியாதையை அடிப்படையாகக் கொண்ட "குடி அரசு" நிறுவதலாகும், இதுவே,'குடிஅரசு,விடாதுமுழங்கும் இடிமுரசாகும். 'குடிஅரசின்' எட்டாவது ஆண்டு விடிந்தும், சுயமரியாதை அகத்தே உடையவரெல்லாம் குடியரசின்ஒளி 'பார்மிசை காணுதற் கலந்தும்' இன்னும் விடுதலை கிட்டாத விபரீதமென்ன? கேவலம் அன்னிய அரசை விலக்கு வதினாலடையும் விடுதலையே குடிஅரசாமெனக் கொள்ளும் நம் போலித் தேசியத்தலைவர்கள் நம்மக்கள் தம் அறியாமையை இன்னு மதிகரிக்கும் படியாகச்செய்கின்ற மயக்கப் பிரசாரமே இதற்குக் காரணம். எனினும், கேவலம் வெறும் விடுதலையை நாடி ஒத்துழையாமை போன்ற முறைகளைக்கையாடும் காங்கிரசு சங்கமும் இவ்விடத்தலைக்குங்கூட மதச்சண்டைகளும், சாதித்தொல்லைகளும், மங்கையர் துயரங்களும் இடையூறாய் வருவன கண்டு, பின்னர் அவற்றைச்சிறிது சிறிதாக விலக்க ஓய்வுகாலங்களில் முன் வருகின்றனர். இவர் தம்முறையோ மூக்கைத் தலையைச்சுற்றி தொடுபவர் செய்கையைப் போன்று பரிகசிக்கத்தக்கதாக விருக்கிறது. இத்தகைய தேசியத்தலைவர்கள், இக்காலத்தில் ஹரிகதைகளையும், புராணப்பிரசங்கங்களையும், திருவிழாக்களையும் பண்டிகைகளையும் விட மக்கள் சமுதாய தேசிய விடுதலையே கவனிக்கத்தக்கது என்ற உணர்ச்சி ஊட்டுவதற்குப்பதிலாக அவற்றோடு தமது பிரசாரங்களையும் செய்வதற்கு வழி கிடைத்தால் போதுமென விருக்கிறார்கள். இன்னும் சிலர் இவற்றின் உதவியாலும் பெயராலும் காங்கிரசுப் பிரசாரம் செய்யும் கிலிபிடித்த அவிகளாகவு மிருக்கிறார்கள். என்னே! இவர்தம் சிறுமை! சமுதாய, தேசிய தனிநலம் பேணிவரும் கூட்டங்கள் மத, புராண, பண்டிகை சம்பந்தமான விழாக்களில் கலந்து கொள்ளும் கூட்டங்களில் நூறில் ஒன்று, ஆயிரத்தில் ஒன்று இருக்குமாஎன்று கேட்கலாம். அன்னிய அரசை விலக்கி சுயராஜ்யம் நிலை நாட்ட.காங்கிரஸ் இத்தனை வருஷங்களாகப் பாடுபட்ட பின்னரும் நாம் இத்தகைய இழி நிலையிலிருப்பதற்குக் காரணங் கண்டு கொள்ளமுடியாத தேசியத் தலைவரின் அறிவு, குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டு பவரது மதியையே ஒக்கும். சுயமரியாதை யற்ற மக்களுக்கு சத்தியாக் கிரகத்தாலும், ஒத்துழை யாமையாலும், வெடிகுண்டுப் பிரயோகங்களினாலும், மற்றெதனாலும் சுதந்திரம் கிடைக்குமோ. மந்திரத்தால் மாங்கனி வீழ்வதுண்டோ. மானம் துறந்தறமறந்தும் பின்னுயிர் கொண்டு வாழ்வது சுகமெனக்கொள் வார்க்குச் சுதந்திரம் பகற்கனவேயாம். எனவே இனியேனும், நாட்டின் நலமும் உண்மைச் சுதந்திரமும் கருதினால் காங்கிரசுக்காரர் உள்பட, மற்றுயாவரும் 'குடி அரசு' ப்பத்திரிக்கையின் எட்டாவது ஆண்டு முதலாவது அதனோடு ஒத்துழைத்து அது காட்டும் நேர்மையான பாதையைக் கள்ளங்கபடின்றித்தைரியமாக ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். எனில் நாம் எங்கும் எதனிலும் வெற்றிபெறு வோமென்பதில் ஐயமில்லை. ஆகவே 'குடிஅரசு' நீடூழி வாழ்ந்து குடி அரசைத்தருக!

எட்டாவது ஆண்டில் நமது கடமை.

(நாகை N. B. காளியப்பன்.)

இன்றுமுதல் நமது "குடி அரசு"க்கு எட்டாவது ஆண்டு பிறந்துவிட்டது என்ற மகிழ்ச்சி செய்தியைக் கண்ணுறும் நமது "குடி அரசு" வாசகர்களும் சுயமரியாதைத் தோழர்களும் அளவிலா மகிழ்ச்சி அடைவார்கள். "குடி அரசு', பிறந்த ஏழு ஆண்டுகள் வரையும் அது செய்த தொண்டுகள் பல பல. என்பதை "குடி அரசு" வாசகர்கள் நன்கறிவார்கள். என்றாலும் 'குடி அரசு' தோன்றக் காரணம் என்னவென்பதைச் சுற்று விளக்கி "குடி அரசு" வாசகர்களுக்கு எழுதினால் அது மகா பயனுடையது என்று நான் கருதுகிறேன்.

"குடி அரசு" தோன்றுவதற்கு ஆதிகாரணமாய் இருந்தது, அரசியலில் பார்ப்பனர்கள் நம்மவர்களுக்குச் செய்த கொடுமை என்றாலும், அதைப் பலப்படுத்தியது சுயாக்கிரகம் திருவண்ணாமலை மகாநாடுமாகும். இன்னும் "குடி அரசி"ன் பிரச்சாரத்தை வேகமாகச் செய்வதற்குத் தூண்டியது, தோழர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகையால் அவருக்கும் "குடி அரசி"ன் சார்பாக நன்றிசெலுத்த வேண்டும். ஏனென்றால் "குடி அரசி'ன் முக்கியமான கொள்கையாகிய எல்லாருக்கும் எதிலும் பங்குண்டு என்ற கொள்கையைத் திரு. வி. க. முதலியார் அவர்கள் தலைமைவகித்த காஞ்சிவரம் அரசியல் மகாநாட்டில் மறுத்ததினால்தான் திரு. முதலியாருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"குடி அரசு', பிறந்ததுமுதல் அதை நசுக்கவும் அழிக்கவும் முயற்சித்தவர்கள் பலரும் அவர்களை அழிந்தும் நசுங்கியும் போனதற்குக் "குடி அரசின்" மாறுபடாக் கொள்கையேயாகும். கடைசியில் நினைத்தால் 5 நிமிஷத்தில் "குடி அரசு"வும் சு. ம. இயக்கத்தையும் ஒழித்துவிடுவேன் என்று விருது கட்டிக்கொண்டிருந்தமருந்துவியாபாரியான ஒருவரும் அவரது தோழர்களும் இருந்த இடம் தெரியாமல செய்ததும், ஏ! மனிதனே உனக்கு எதிரில் இருப்பது குட்டிச்சுவர், முட்டிக்கொள்ளாதே யென்று "குடி அரசு" பன்முறை சொல்லியும், கேளாது முட்டித்தான் கொள்ளுவேன் என்று முட்டி மண்டைகள் உடைந்து துன்பப்படுகிற முட்டாள்களையும் மூலையில் உட்காரச் செய்தது "குடி அரசின்" உண்மையான கொள்கையேயாகும். ஆகையால் குடி அரசின்" வளர்ச்சியில் கவலைகொள்ளுகிற ஒவ்வொருவரும் இவ்வாண்டில் ஏராளமான சந்தாக்கள் சேர்த்து "குடி அரசை" வளரச்செய்ய கேட்டுக்கொள்ளுகிறேன்.

கும்பகோணத்தில் சீர்திருத்தத் திருமணம்.

17—4—32 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குக் கும்பகோணம் அழகப்ப முதலிதெரு திருவாளர் குமாரசாமி நாயுடு அவர்கள் திருநிறைச் செல்வன் சௌந்திரராஜலுக்கும், வலங்கிமான் வளையல்காரத் தெரு திருவாளர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் திருநிறைச் செல்வி அம்சவள்ளியம்மாளுக்கும் கும்பகோணம் அழகப்ப முதலியார் தெருவிலுள்ள மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெற்றது. வலங்கிமான் உயர்திருவாளர் வி. கந்தசாமி அவர்கள் ஷை திருமணத்தை நடத்திவைத்தபிறகு மணமக்களிருவரிடத்திலும் திருமண ஒப்பந்தச்சீட்டில் கையெழுத்து வாங்கப்பட்டு ரிக்கார்டு செய்யப்பட்டது. "புதுவைமுரசு" ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் பழக்கம் வழக்கம் என்பதுபற்றி ஒன்றரை மணி நேரம் பேசியபின் தலைவரவர்களின் முடிவுவுரைக்குப் பிறகு சமபந்திபோஜனம் நடைபெற்றது. திருமணத்திற்கு சுமார் 500 பெயர்கள் வந்திருந்தனரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலை.

மூன்றாவதாண்டு நிறைவு விழா.

கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச்சாலையில் மூன்றாவதாண்டு நிறைவுவிழா கோட்டாறு சமதர்ம மண்டபத்தில் தோழர் ஏ. குணமணி எம். ஏ. பி. எல். தலைமையில் மேமாதம் 13ந்தேதி நடைபெறும். நிறைவு விழாவுக்குத் தோழர்கள் கே வி. அழகர்சாமி, திருச்சி விஸ்வநாதம், எஸ். திரவியம் பி. ஏ. பி. எல். நீலாவதி ராமசுப்பிரமணியம் முதலியோர்விஜயஞ்செய்து சொற் பொழிவாற்றுவார்களெனத் தெரிகிறது. சௌந்தரவிலாசை ஜாகையாக அமைத்திருக்கின்றனர். ஆண்டுவிழா சம்பந்தமாக வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றனவென்று நாகர்கோவில் சுயமரியாதை இளைஞர் சங்கக்காரியதரிசி திரு. எஸ். கிருஷ்ணன் தெரிவிக்கிறார்.

பரமசிவனுக்கும்— ஏசுநாதருக்கும் சம்பாஷணை.

[தோழர் எஸ். குருசாமி பி. ஏ.,]

[பரமசிவன் விரித்த சடையோடு புலித்தோலையுடுத்திக்கொண்டு, நெற்றிக் கண்ணில் நெருப்புக் கிளம்ப, விபூதி நெற்றிக் கண்ணில் உதிர்ந்து நெருப்பை அணைத்துவிடாதபடி ஒரே வரியாகக் குழைத்து அப்பியபடியே கையில் உடுக்கு, சூலம் முதலியவைகளோடு அரைப்பாகம் பெண் உருவமாய் சுடுகாட்டில் சாம்பல் ஆசனத்தில் படுத்துக் கொண்டிருக்கிறார். ஏசுநாதர் கோவணதாரியாய் சிலுவையில் அறையப்பட்டபடியே பக்கத்தில் படுத்திருக்கிறார். ஏசுநாதருக்கு சுவாசம்மாத்திரம் போய் வந்து கொண்டிருக்கிறது. கைகாலைத் தூக்கமுடியவில்லை, ஆனால் வாயைத் திறந்து சில வார்த்தைகள் மாத்திரம் பேசக்கூடியவராய் இருக்கிறார். இருவரும்பேச ஆரம்பிக்கிறார்கள். அடடா! ஒருஅபத்தம்! எந்தப்பாஷையில் பேசுவது? பரமசிவன்தமிழில் பேசுகிறார். ஏசுநாதர்ஹீப்ரு— அல்ல— இங்கிலிஷில் பேசுகிறார். ஆனால் ஒருவர் பேசுவது மற்றொருவருக்கு விளங்கவில்லை. ஆகையால் சிறு மலையடிகள் என்று ஒரு சைவ சித்தாந்தி இருவருக்கும் மொழி பெயர்த்துச் சொல்கிறார்.]

பரமசிவன்:— ஓய்! ஏசுவே! உம போக்கிரித்தனத்திற்குத் தகுந்த தண்டனை விதித்துக்கூட உம் கொழுப்பு அடங்கவில்லை பார்த்தீரா?

ஏசு:— நிறுத்துங்காணும்! உமது வண்டவாளத்தைக் கிளப்பினால் ஊரெல்லாம் சிரிக்குமே! உம் ஜம்பம்தான் பலிக்காமல் போய்விட்டதே! "செத்த நாய் செருப்பைக் கடித்த" மாதிரி கிடக்கும் பொழுதே உமக்கு வாய்வீச்சு வேறு இருந்தால், நீர் இன்னும் சரியான நிலையில் இருந்தால் தலைகீழத்தான்-நிற்பீர்.

ப:— (கண்ணில் நெருப்புப் பொறிபறக்க) அதிகமாய்ப் பேச வேண்டாம். ஓய்! உமது வால்தனத்தை, என் தேசமானஇந்தியாவிலும் கொண்டுவந்து விட்டு என்னுடைய ஆட்களையும் உம் கட்சியில் சேர்த்தீரே, அதற்குத் தண்டனை வெகு சீக்கிரம் அனுபவிப்பீர். "தகப்பன் பெயர் தெரியாத' நீர், ஏதோ யோக்கியன் மாதிரிப் பேசுகிறீரே! கலியாணமாகாத கன்னிப் பெண்ணுக்குப் பிறந்த பிள்ளையாம்! பேஷ்! கன்னிப் பெண்ணுக்கு எந்த அவயவம் வழியாகப் பிறந்தீரோ! வெட்கங்கெட்ட பிழைப்பு! இந்த லட்சணத்தில் நல்லமாடு உள்ளூரில் விலை போகாமல் இந்தியாவுக்கு வேறு வந்து விட்டீரே!

ஏ:— ஓய்! அதிகப்பிரசங்கி! நிறுத்தும் உமது பேச்சை! உம் நாற்றம்தான் ஊர்முழுதும் நாறுகிறதே! என்னைத்தான் தகப்பன் பெயர் தெரியாதவன் என்றீர். உமக்குத் தாயார் பெயர்கூடத் தெரியாதே! தந்தையுமில்லாமல் தாயாருமில்லாமல் எப்படி முளைத்தீரோ! உம்முடைய பாதி உடலில் உமது சம்சாரத்தையும் நிரந்தரமாய் ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறீரே! உலகத்தார் பார்த்து உம்மைக் கிறுக்கன் என்று நகைக்கிறார்களே! உடலோடு ஒரு பாதி பெண்ணும், தலையில் ஒரு பெண்ணும் இருந்தும் ரிஷி பத்தினிகளைக் காதலித்து அவமானப் பட்டது எனக்குத் தெரியாதா? உனது அடியார்களின் மனைவியிடத்திலும், அவளுடைய மரியிடத்திலும் காதல்கொண்டு கேட்டு வாங்கிய ஆபாசச் செய்கை எனக்குத் தெரியாதா? தாயாரைப் புணர்ந்தவனுக்கு மோட்சம் கொடுத்த விந்தை எனக்குத் தெரியாதா? உன் பெயரே அடியோடு இந்தியாவில் ஒழிந்துபோக வேண்டுமென்று தானே நான் சதா வேலை செய்துகொண்டிருக்கிறேன். இப்பொழுதே லட்சக்கணக்கானவர்களை உன்கட்சியிலிருந்து என்கட்சிக்குச் சேர்த்துவிட்டேன். இன்னும் சில வருஷங்களுக்குள் பார்! உன் பெயர் சொல்லக்கூட ஆள் இல்லாதபடி செய்துவிடுகிறேன்,

ப:— ஓய்! ஏசுவே! ரொம்ப ரொம்ப விரட்டாதேயும். உம் கட்சிக்காரர்களே ஐரோப்பாவில் இரண்டு பாகமாகப் பிரிந்து பலத்த சண்டையிட்டு ரத்த ஆறாக ஓடும்படிசெய்தார்கள். இப்போதுங்கூட கத்தோலிக்கர்—பிராட்டஸ்டெண்ட் என்றால் எலியும், பூனையுமாக இருக்கிறார்களென்பதைப் பார்க்க உமக்குக் கண்ணில்லை போலிருக்கிறது. உம் வால்தனமெல்லாம் என்னுடைய தேசத்தில் முடியவே முடியாது என்பது ஞாபகத்திலிருக்கட்டும். கிருஸ்துவர்களுக்குள்ளே கூட என் சிஷ்யர்கள் ஜாதி என்பதை நுழைத்துவிட்டார்களே! எல்லாரும் சமம் என்பதற்காக உம் மதம் ஏற்பட்டதாகப் பீத்திக்கொள்ளுகிறீரே! நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டாமா? உம் மதத்தில்கூட என் ஆட்கள் விஷமம் செய்து விட்டார்களே! என் தேசத்தில் உமக்கு இருக்கும் சிறு தொகையில் 100க்கு 90 பேர், பறையக்கிறிஸ்துவர், பள்ளக் கிறிஸ்துவர், நாடார் கிறிஸ்துவர், நயினார் கிறிஸ்துவர், உடையார் கிறிஸ்துவர், பிள்ளை கிறிஸ்துவர், முதலிகிறிஸ்துவர், பார்ப்பாரக் கிறிஸ்துவர், நாயர் கிறிஸ்துவர் என்று தானே சொல்லிக்கொள்ளுகிறார்கள். "தீண்டப்படாத கிருஸ்துவர் மகாநாடு" என்று சமீபத்தில் தானே திருச்சிப் பக்கத்தில் கூடினார்கள்! உமக்கு வெட்கமில்லை? மானமில்லை; சுயமரியாதைஇல்லை என்னமோ இந்தியாவையே ஜெயித்துவிட்டதுபோல் பெருமைப் படுத்திக்கொள்ளுகிறீரே! எங்கள் ஆட்களை ஜெயிக்க உம்மால் முடியுமா ஓய்!

ஏ:— அதெல்லாம் சரிதான் காணும் எத்தனைபேர் உம் ஆட்களிலேயே சாம்பலைப் பூசிக்கொள்ளவே வெட்கப்படுகிறார்கள்? இதெல்லாம் யார் வேலை? என் ஆட்கள் சொல்லிக்கொடுத்தபடியும் நாகரீகமல்லவா காரணம்? உம்ம கோவிலைத்தான் உம் ஆள் காந்தியே "விபசார விடுதி" என்கிறானே! உமக்கு ஏதாவது ரோஷமிருந்தால் அல்லவா இதெல்லாம் யோசித்துப் பார்க்க நேரமிருக்கும்? உம் கோவிலில் உமது சிலையின்பேரில் வௌவால்தானே புழுக்கை போடுகிறது! வேறு என்ன அங்கே இருக்கிறது?— அதெல்லாம் போகட்டும்.

உம்மை அடியோடு அழிப்பதற்குத்தான் சுயமரியாதைக்காரர்கள் புறப்பட்டிருக்கிறார்களே! சுமார் ஒன்றரை லட்சத்திற்கு மேல் தென் இந்தியாவிலும் மலையாவிலும் சிலோனிலும் இருக்கிறார்களே? அவர்கள்தான் உன் ஆணிவேரையே வெட்டிக்கொண்டிருக்கிறார்களே! அந்த ஒன்றரை லட்சம் பேரும் உன்னை மதிப்பதே கிடையாது. உன் கோவிலுக்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க,

தோழர் எஸ். குருசாமி பி. ஏ.

இலங்கை சந்தாதார்கள் கவனிக்க.

இலங்கைக்கு பத்திரிகை வி. பி. அனுப்புவதால் தபால் இலாக்காவினால் ஏற்படும் சங்கடங்களையுத் தேசித்து வி. பி. அனுப்புவதை நிறுத்தியிருக்கிறோம். சந்தாதாரர்களுக்கு சந்தா காலம் முடிவடையும் தேதி தெரிவிக்கப்படும். தயவு செய்து அவர்கள் தொகையை தவறாமல் மணி ஆர்டரிலேயே அனுப்பிவிடவேண்டுகிறோம்.

மானேஜர்.

குடி அரசு.

ஈரோடு 1932 மேமீ 1-உ

எட்டாவதாண்டு.

—:0:—

நமது 'குடி அரசுக்கு' எழு ஆண்டுகள் நிறைவேறி, இன்று எட்டாவது ஆண்டின் முதல் இதழ் வெளிவருகிறது. நமது "குடி அரசு" பிறந்தது முதல் இதுவரையிலும் நாட்டில் உண்டாக்கியிருக்கும் மாறுதலை எதிரிகளும் வயிற்றெரிச்சலோடு ஒப்புக்கொண்டுதான் தீருவார்கள்.

நமது "குடி அரசு" மக்களுடைய உயர்வு தாழ்வுக்குக்காரணமான எல்லா மாசுகளையும் போக்கிச் சமத்துவத்தை உண்டாக்கும் கொள்கையுடன் ஏற்பட்டது என்பதை வாசகர்களுக்கு நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை.

முதலில் புரோகிதப்புரட்டில் உள்ள சூழ்ச்சிகளையும் அர்த்தமற்ற செயல்களையும் வெளிப்படுத்திச் சிக்கனத்தையும், மூட நம்பிக்கையைப் போக்கிப்பகுத்தறிவையும் போதித்தது.

இரண்டாவது மக்களிடம் ஜாதி பேதத்தையும், எண்ணற்ற மூட நம்பிக்கைகளையும் உண்டாக்குவதற்குக்காரணமாக இருக்கும், வேதம், புராணம், இதிகாசம், ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களின் ஆபாசங்களையும், பொய்யுரைகளையும், அவைகள் பார்ப்பனர்களின் சுயநலத்திற்காக உண்டாக்கப்பட்டவை என்பதையும் எடுத்துக்காட்டிற்று.

மூன்றாவது மக்கள் ஏமாறுவதற்கும், மக்களை ஏமாற்றுவதற்கும் காரணமான, அவதாரம், நாயன்மார், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், ஜீயர்கள், சந்நிதானங்கள், பாதிரிகள், முல்லாக்கள், புரோகிதர்கள், குருக்கள் முதலியவர்களின் சூழ்ச்சிகளையும், மோசங்களையும் வெளிப்படுத்திற்று.

கடைசியாக, கடவுள், ஆன்மா, மோட்சம், நரகம், மறுபிறப்பு முதலியவற்றில் உள்ள சூழ்ச்சிகளையும், புரட்டுகளையும், இவ்வார்த்தைகளில் உள்ள அர்த்தமற்ற தன்மைகளையும் வெளிப்படுத்தியது.

மேற்கூறிய விஷயங்களைப்பிரச்சாரம் பண்ண நாம் எல்லா மதங்களையும் தாக்கவேண்டியதிருந்தது. மதங்களைத் தாக்காமல் மேற்கூறிய காரியங்களைச் செய்யவே முடியாது.

"கடவுள்", "வேதம்", "ஆன்மா" "மோட்சம்" "நரகம்" "மறு பிறப்பு" "அவதாரம்", ஆகிய புரட்டுகள் எல்லாவற்றையுமோ, அல்லது இவைகளில் சிலவற்றையோ, அல்லது பலவற்றையோ, அல்லது ஒன்றையோ அஸ்திவாரமாகக்கொண்டிராத மதமே உலகில் இல்லை. ஆகவே மேற்கூறிய அஸ்திவாரங்களையெல்லாம் அகழ்ந்தெரியவேண்டுமானால் மதங்களையும் அடியோடு அழித்தே ஆகவேண்டுமென்ற முடிவுக்கு வந்தது.

பெண்களின் சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும், "குடி அரசு" செய்திருக்கும் அவ்வளவு வேலை இந்தியாவில்வேறு எந்தப்பத்திரிகையும் செய்ததில்லையென்று தோள்தட்டிக்கூறலாம். இன்று நமது நாட்டில் நடைபெறும் எந்தப் பெண்கள் கூட்டத்திலும், சுயமரியாதைக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்குக் "குடி அரசின்" பிரசாரமே காரணமாகும்.

"குடி அரசு" இவ்வாறு மத விஷயத்திலும், சமூக விஷயத்திலும் பங்கு எடுத்துக்கொண்டதோடு மாத்திரம் நிற்காமல் அரசியல் விஷயததிலும், மக்கள் ஏமாறாமலிருக்குமாறு அடிக்கடி எச்சரிக்கத்தவறவில்லை.

அரசியல்வாதிகளின்புரட்டுகளையும், அயோக்கியத்தனங்களையும், தாட்சண்யமில்லாமல் பொதுஜனங்களுக்குக்கூறி வந்தது. இதன் பலனாகத்தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்குப் பொது மேடைகளில் இடங்கிடைக்காத நிலைமையும் உண்டாயிற்று. இன்று தென்னாடில் வருணாச்சிரம தருமிகளுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும், செல்வாக்கு இல்லாமலிருப்பதற்குக் காரணம் "குடி அரசின்" பிரசாரமேயாகும். சுருங்கக்கூறினால் "காங்கிரஸ் ஸ்தாபனத்தின், மதப்பிரசாரத்தையும், வருணாச்சிரம தருமப் பிரசாரத்தையும், முதலாளி ஆதிக்கப் பிரசாரத்தையும், ஆரம்ப முதல் இன்று வரையிலும், வெட்ட வெளிச்சமாக்கிப் பொது ஜனங்களை ஏமாறாமல் இருக்கும்படி செய்து வருவதும், இக்காரணங்களால் காங்கிரஸ் ஸ்தாபனத்தை அடியோடு அழித்தால் ஒழிய நமது நாட்டுக்குச் சமதரும ராஜியம் கிடைப்பதற்கு வழியில்லை என்று பிரசாரம் பண்ணி வருவதும் நமது "குடி அரசு" ஒன்றேயாகும்.

இவ்வாறு 'குடிஅரசு' மத விஷயத்திலும், சமூக விஷயத்திலும், அரசியல் விஷயத்திலும் உள்ள சூழ்ச்சிகளை வெளிப்படுத்தி வந்த காரணத்தினால் இதற்கு உண்டான எதிர்ப்புகள் எண்ணற்றவை.

"மத பக்தர்"கள் எல்லோரும் 'குடி அரசு' வாலிபர்களை யெல்லாம் கெடுக்கிறதென்றும், 'குடி அரசு' பெண்களை யெல்லாம் கெடுத்து விடுகிறது என்றும், 'குடி அரசு'ப் பிரசாரத்தால் உலகமே முழுகிப் போய் விடுமென்றும், மறுபடியும் "கடவுள்" அவதாரம் பண்ணித் தான் 'குடி அரசை'யும், அதை ஆதரிக்கும் சுயமரியாதைக் காரர்களையும் தொலைக்க வேண்டு மென்றும் ஊர் ஊராகப் பிரசாரம் பண்ணினார்கள்; பத்திரிகைகளில் எழுதினார்கள்; புதிய பத்திரிகைகளும் ஆரம்பித்து நடத்தினார்கள்; அவர்கள் நம்பும் "ஆண்டவனை" நோக்கித் "தவமும்" கிடந்தார்கள்.

இரண்டாவது, 'குடி அரசு' தோன்றுவதற்கு முன் சமூகச் சீர்திருத்தக்காரர்களாக விளங்கி வந்தவர்களெல்லாம் 'குடி அரசை'க் கண்டு நடு நடுங்கினார்கள். 'குடி அரசு' சீர்திருத்த விஷயத்தில் அளவு கடந்து செல்லுகிறதென்றும், இவ்வாறு சென்றால் உள்ள சீர்திருத்தமும் அழிந்து விடும் என்றும், மதங்களை யெல்லாம் அழித்து விட்டுச் சீர்திருத்தம் பண்ணுவது முடியாத செயலென்றும், ஆப்கானிஸ்தானத்தில் மாஜி அரசர், அமானுல்லாகான் அதிதீவிரச் சீர்திருத்தம் செய்ய முயன்றதனால் ராஜ்யத்தை இழக்கும்படி நேர்ந்ததைப் போல 'குடி அரசு'க் கொள்கையும் மதிப்பிழந்து புறக்கணிக்கப்படுமென்றும், பலவாறாக பயமுறுத்தல் பிரசாரமும், அவதூறுப் பிரசாரமும் பண்ணினார்கள்.

மூன்றாவதாகப் பார்ப்பனர்களும், காங்கிரஸ் காரர்களும், பொறாமைக் காரர்களும் 'குடி அரசை' ஒழிப்பதற்குச் செய்த சூழ்ச்சிகள் எண்ணத் தொலையாதவை. 'குடி அரசை'த் தேசத்துரோகப் பத்திரிகை யென்றும், அரசாங்க தாசப் பத்திரிகை யென்றும், ஜாதித்துவேஷப் பத்திரிகை யென்றும், நாஸ்திகப் பத்திரிகை யென்றும், பலவாறு பொது மக்களிடம் பிரசாரம் பண்ணினார்கள். 'குடி அரசு' பொது உடமைப் பிரச்சாரம் பண்ணுகிறதென்றும், ஆகையால், அதையும் அதைச் சேர்ந்த கூட்டத்தாரையும் அடக்கா விட்டால் நாட்டில் கலகமும் கொள்ளையும் உண்டாகுமென்றும், அரசாங்கத்தாரிடமும், பொது மேடைகளிலும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பிரசாரம் பண்ணினார்கள்.

அதிலும் சென்ற இரண்டு ஆண்டுகளில், அதற்கு முந்திய ஆண்டுகளைக் காட்டிலும், 'குடி அரசை'யும் அதன் மூலம் உண்டான சுயமரியாதை இயக்கத்தையும் அழிக்கப் பாடுபட்டவர்களின் முயற்சி மிகவும் அதிகம் என்றே கூறவேண்டும், நமது நாட்டில் உப்புச் சத்தியாக்கிரகத்திலும், சட்ட மறுப்பிலும் ஈடுபட்ட பார்ப்பனர்களும், சில பார்ப்பனரல்லாதாரும் 'குடி அரசை'ப் பற்றியும், 'குடி அரசை' ஆதரிப்போரைப் பற்றியும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு மேடையிலும் கூட்டத்திலும், நாள் தவறாமல், நாழிகை தவறாமல், அவதூறுப் பிரசாரம் பண்ணினார்கள். நம்மவர்களுக்குள்ளேயே சிலர், புத்தி தடுமாற்றத்தினாலேயோ, அல்லதுசுயநலத்தினாலேயோ, அல்லது வேறு எந்தக் காரணத்தினாலேயோ எதிரிகளுடன் சேர்ந்து கொண்டும், "தேசீய சுயமரியாதை" என்ற புதுப் பெயர் வைத்துக் கொண்டும் "குடி அரசை"யும், சுயமரியாதை இயக்கத்தையும் எதிர்த்தார்கள் இவ்வாறு எவ்வளவு பாடுபட்டுங்கூட அதன் சந்தாதாரர்களின் எண்ணிக்கையைச் சிறிதளவு குறைக்க முடிந்ததேயொழிய வேறு இதன் கொள்கைகளின் நமது எதிரிகளால் ஒரு உரோமத்தைக்கூட அசைக்கமுடியவில்லை என்பது வாசகர்களுக்குத் தெரியாத செய்தியல்ல.

"குடி அரசு" தோன்றியநாள் முதல் இதுவரையிலும், தனது கொள்கையிலிருந்து சிறிதும் வழுவாமல், உழைத்துவருவதற்குக்

காரணம், யாருடைய தயவையும் தாட்சண்யத்தையும் எதிர்பாராமல் வேலைசெய்வதேயாகும். ஒரு கொள்கையைப் பிரசாரம்பண்ண ஏற்பட்ட எந்தப் பத்திரிகையாகட்டும், எந்த ஊழியராகட்டும், பிறருடைய தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமலிருந்தால்தான் கொள்கைக்காக உழைக்க முடியும் என்ற தத்துவத்திலிருந்து சிறிதும் பிசகாமலே "குடி அரசு" இதுவரையிலும் இருந்து வருகிறது.

எண்ணற்ற எதிர்ப்புக்களிருந்தும் "குடி அரசு" பொது ஜனங்களின் கவனத்தை நாளுக்குநாள் எதிர்பார்ப்பதற்கு அதிகமாகவே கவர்ந்து வருவதற்கு அதன், அசைக்கமுடியாததும், பகுத்தறிவுக்குப் பொருத்தமானதும், உண்மையில் நாட்டில் சமதர்மத்தையுண்டாக்கத் தகுந்ததும் ஆகிய கொள்கைகளே காரணமாகும் என்றுநாம் கூறுவது மிகையேயாகும்.

ஆரம்பத்தில், "குடி அரசை"த் தங்களுடைய தேர்தல் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்று கருதி அதன் கொள்கைகளை ஒப்புக்கொள்வதுபோலச் சிலர் நடித்துவந்தார்களானாலும், நாளடைவில் அவர்கள் "குடி அரசி"ன் உண்மைக் கொள்கைகளையும், அது யாருடைய தயவையும் போற்றுதல், தூற்றுதல்களையும் எதிர் பார்ப்பதல்ல என்பதையும் அறிந்தபின் "குடி அரசு" படிப்பதையும் அதன் கொள்கைகளைப் பற்றிப் பேசுவதையும் விட்டுவிட்டதோடு மாத்திரமல்லாமல் மறைமுகமாகச் சிலர் எதிர்ப்பிரசாரங்கூடச் செய்ய ஆரம்பித்தார்கள் என்னும் விஷயம் "குடி அரசு" வாசகர்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம். இப்படி இருந்தும் "குடி அரசி"ன் கொள்கைகளுக்கும் "குடி அரசு"க்கும் ஒரு குறைவும் உண்டாகவில்லை.

வைதீகர்களும், பார்ப்பனர்களும், காங்கிரஸ்காரர்களும் "குடி அரசை" உபயோகப்படுத்திக் கொள்ள எதிர்பார்த்து ஏமாந்தவர்களும் "குடி அரசை" ஒழிக்கப் பாடுபட்டாலும், ஆரம்பத்தில் "குடி அரசி"ன் சீர்திருத்தங்கொள்கைகளை ஆதரித்துவந்த பணக்காரர்களும், உத்தியோகஸ்தர்களும், மந்திரிமார்களும் "குடி அரசை" ஆதரிக்கவும், சுயமரியாதைக் கூட்டங்களுக்கு வரவும் பயந்து ஒதுங்கியிருந்தாலும் பணக்காரர்களில் சில உண்மையான சுயமரியாதைப்பற்றுடையவர்களைத் தவிர மற்ற எல்லாப் பணக்காரர்களும், ஜமீன்தாரகளும், பெரிய உத்தியோகஸ்தர்களும் இவர்களுடைய கையாட்களாக வேலைசெய்யும் ராஜ்ய வாதிகளும் "குடி அரசு"க் கொள்கையை முந்திய ஆண்டுகளைவிடச் சென்ற ஆண்டில் அதிகமாக எதிர்த்துப் போராடினாலும், அதன் வேலை சென்ற ஆண்டிலேயே அதிகமாக நடைபெற்றிருக்கிறது என்று தைரியமாகவே கூறவேண்டும். உதாரணமாகச் சென்ற ஆண்டில் நடைபெற்ற சுயமரியாதை மகாநாடுகளை எடுத்துக்கொள்ளலாம்.

சென்ற ஆண்டில் தூத்துக்குடியில் ஒரு சுயமரியாதை மகாநாடு, காரைக்குடியில் ஒரு சுயமரியாதை மகாநாடு, பொறையாற்றில் ஒரு சுயமரியாதை மகாநாடு, நன்னிலத்தில் ஒரு சுயமரியாதைமகாநாடு, லாலுகுடியில் இரண்டுசுயமரியாதை மகாநாடுகள், விருதுநகரில் மாகாணச்சுயமரியாதை மகாநாடு, நாகப்பட்டினத்தில் ஒரு சுயமரியாதை மகாநாடு, சென்னையில் ஒரு சுயமரியாதை மகாநாடு ஆக பத்து சுயமரியாதை மகாநாடுகள்நடந்திருக்கின்றன. இவைகளைத்தவிர நாடெங்கும் நடைபெற்றுள்ள பொதுக்கூட்டங்கள் எண்ணற்றவை. இந்தமகாநாடுகளின் பயனாலும் பொதுக்கூட்டங்களின் பயனாலும் ஆயிரக்கணக்கான மக்கள் சுயமரியாதையியக்கத்தின் உண்மைக்கொள்கைகளையறிந்து, அவைகளைக்கூடிய வரையிலும் பின்பற்றி நடக்கக்கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதையும் யார் மறுக்க முடியும்? இவற்றுக்கெல்லாம் "குடி அரசி"ன் அச்சமற்ற ஊழியம் அன்றோ காரணம்.

சுருங்கக் கூறவேண்டுமானால் சென்ற ஏழாண்டுகளாகக் "குடி அரசு" தனது கொள்கையை விட்டு நழுவாமலும், யாருடைய தயவுக்கும் கட்டுப்படாமலும், எவருக்கும் அஞ்சாமலும், உழைத்து வந்ததன் பலன் வீண் போகாமல் நாளுக்கு நாள் அதிகமான மக்கள்—ஆரம்பத்தில் அதன் கொள்கைகளில் நம்பிக்கையில்லாமலிருந்தவர்கள் கூட அதன் கொள்கைகளைப்பற்றிச் சிந்திக்கவும் பின்பற்றவும் முன்வருகிறார்கள் என்ற உண்மையை அறியும்போது "குடி அரசும்" அதன் வாசகர்களும், பெருமையும். மேலும் மேலும் உறுதியோடும், அஞ்சாமையோடும் பிரசாரம் பண்ணுவதில் ஊக்கமும், தைரியமும் அடையவேண்டுமேயொழிய வேறு தளர்ச்சியோ, கவலையோ படவேண்டிய அவசியமில்லையென்றே நிச்சயமாகக்கூறுவோம்.

மற்றொரு விஷயத்தையும் 'குடி அரசின்' வெற்றிக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். சென்ற நாலைந்து மாதங்களாக நமது ஆசிரியர் நமது நாட்டில் இல்லாமல் மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திற்காக தோழர். இராமநாதன் அவர்களுடன் சென்றிருந்தும் "குடி அரசி"ன் வளர்ச்சியில் ஒரு விதமான குறைவும் ஏற்படவில்லை என்பதைக்கொண்டும், அதன் கொள்கைக்கு தேசத்தில் எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை அறியலாம்.

இனி எதிர்காலத்தில் சென்ற ஆண்டுகளைவிடக் "குடி அரசி"ன்வளர்ச்சியும், அதன் கொள்கைகளுக்கு ஆதரவும் அதிகப்படும் என்றே எதிர்பார்க்கிறோம். நமது ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி அவர்களும், தோழர் எஸ். ராமநாதன் அவர்களும் மேல் நாட்டினர் மத சமுதாய விஷயங்களில் எவ்வாறு முன்னேறியிருக்கின்றார்கள் என்பதையும், அவ்வாறு முன்னேறியிருப்பதற்குக்காரணங்கள் என்ன என்பதையும் நேரில் பார்த்து அறிந்து கொள்ளும் பொருட்டு மேல் நாடுகளில் இப்பொழுது சுற்றுப்பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வந்தவுடன் "குடி அரசின்" கொள்கைக்காகவேண்டி இன்னும் அதிதீவிரமாக உழைப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகவே இனிவருங்காலத்தில் பொது ஜனங்களின் கவனமும், வாசகர்களின் ஆதரவும் "குடி அரசி"னிடமும் அதன் கொள்கைகளிடமும் அதிகமாகவே ஏற்படுமென்று உறுதியாக நம்புகின்றோம்.

திருப்பத்தூரில் சீர்திருத்தத் திருமணம்.

அரியக்குடி திரு. கே. மாணிக்கம் அவர்களுக்கும், திருப்புத்தூர் திருமதி கே. மீனம்பாளுக்கும் 24—4—32 ஞாயிற்றுக்கிழமை இரவு திருப்புத்தூரில் தென்மாப்பட்டு சமதர்ம செந்தமிழ் கலாசாலை தலைமை உபாத்தியாயர் திரு. ரெங்கசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தலைவரால் திருமணம் என்பதுபற்றி பேசி மணமொப்பந் தங்கள்செய்து முடிந்ததும் மணமகனால் வந்தனோபசாரம்கூறப்பெற்று விவாகம் இனிது முடிந்தது அரியக்குடி சுயமரியாதை அன்பர்களுள் சீர்திருத்தமணம் இதுவே முதல் தடவையானதாகுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

47-வது காங்கிரஸ் நாடகம்.

நம் இந்திய நாட்டின் சுதந்தரம் கோரி, இந்திய மக்கள் அடிமைத்தளையினின்றும் அகற்றப்பட்டுச்சுதந்தரமக்களாய் வாழவேண்டுமென்று எண்ணிச் சில பல இந்தியப் பிரமுகர்கள் சென்ற 46-ஆண்டுகளாகப் பெரும் பிரயாசை எடுத்து வந்திருக்கின்றனர். இதற்காகச் சமூக மத வித்தியாசங்களையும் பாராமல் பல தலைவர்கள் தியாக புருஷர்களாய் விளங்கி வந்தனர்; தந்நலங்கருதாதுழைத்துவந்தனர்.

ஆனால், பிற்காலத்தில் துர் அதிருஷ்ட வசமாய்க் காங்கிரஸ் மகாசபைதகுந்த தலைவர்களின்றி, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் சூத்திரப்பதுமையாக மாறிவிட்டது. ஹிந்து மகாசபைக்காரர்களும் ஆரிய சமாஜக்காரர்களும் அதில் தங்கள் சூழ்ச்சியின் வலைகளை விசிறத் துவக்கி விட்டனர். இதனால் முஸ்லிம்கள் அதனை விட்டுச்சற்றே விலகியிருக்க வேண்டிய அவசியமும் நேர்ந்து விட்டது.

இவ்வாறு நின்ற முஸ்லிம்களை அலக்ஷியம் செய்து சட்டமறுப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டு, 'காலித்தனமாக' அவ்வியக்கம் நடத்தப்பட்டு, அதனால் உலக மக்களே, சிறப்பாக இந்திய மக்கள் பேரவஸ்தையுறும்படிசெய்து விட்டது. இவ்வளவுடனுமின்றி, ஆங்காங்கே அடாத காரியங்கள் பலவும் ஆற்றப்பட்டே வருகின்றன.

இந்நிலையில், அவசரச் சட்டத்தின் மேல் அவசரச்சட்டமாகக் கிளப்பிக் காலிகளை அடக்கமுயன்று கொண்டிருக்குங்கால், காங்கிரஸ் சார்பான கூட்டமும் சட்ட விரோதமானதென அறிவிக்கப்பட்டிருக்குங்கால், ஸ்ரீமதி சரோஜினி தேவி, பண்டிதர் மாளவியா பொன்றவர்கள் மூர்க்கப் பிடிவாதமாக, அனுவசியமான இத்தச்சந்தர்ப்பத்தில், காங்கிரஸ் மகாநாட்டிற்கு எத்தகைய அவசரமும் அவசியமும் இல்லாமலிருக்கையில் ஒரு சில மக்களை வரவழைத்து இடமுமின்றி நடுச்சந்தியில் காங்கிரஸ் பெயரை மட்டும் வைத்து ஒரு தேர்தல் கூட்டம் கூட்ட முயற்சித்தமைக்கு என்ன காரணந்தான் எம்போன்றோர் எடுத்துக் காட்டக்கூடும்?

தலைவர்களென்போர் அனைவரும், மக்களுட் பலரும் சிறைக்குச்சென்று விட்டனர். பண்டிதர் மாளவியா, ஸ்ரீமதி சரோஜினி போன்றோர் வட்டமோஜை. மகாநாடு முடிந்தவுடன் உல்லாசமாக உலகைச்சுற்றிக்கொண்டு கடைசியில் இந்தியா வந்து சேர்ந்தும் கைதியாகாமலிருந்ததனை நாட்டினோர்—காங்கிரஸ் பக்தர்கள்—இழிவாகக் கருதிப் பற்பல விதமான வதந்திகளை யெல்லாம் கிளப்பிவிட்டுக்கொண்டிருந்தமையால், மற்றொ

ருவருக்குக் கொடுக்கப்பட்ட தலைவர் பதவியையும் ஸ்ரீமதி சரோஜினி தேவி ஏற்று இத்தனை பேரைப்போன்று ஊர்வலஞ் சென்று கைதியாகிவிடாமல், காங்கிரஸைக் கூட்டி அதன் மூலம் கைதியாகி அனைவருக்கும் நல்ல பெயரெடுத்துக் கொள்ள வேண்டுமென்று செய்யப்பட்ட சூழ்ச்சியென்றுதான் நாம் கூறுவோம். இல்லை யெனின், காங்கிரஸ் இதுபோது எந்த அவசியத்தை முன்னிட்டு நடுத்தெருல் 150-பேருடனே இவ்வளவு எதிர்ப்புகளினூடே கூடிற்றென்று எவரேனும் கூற முன்வரக் கூடுமோ?

போலீஸார் மிகுந்த முன் ஜாக்கிரதையாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு ஸ்ரீமதி சரோஜினிதேவியையும், பண்டிதர் மதனமோகன மாளவியாவையும் அப்படியே கைது செய்து விட்டனரெனினும், டெல்லி மணிக்கூண்டருகில் சுமார் நூற்றைம்பது பேர் கூடி 23-ந்தேதி இரவே விஷயா லோசனைக் கமிட்டியில் முடிவு செய்ததாகக் கூறி ஐந்து தீர்மானங்களை வாசித்து முடிந்தும் முடிக்காததுமா யிருக்கையிலேயே முடிச்சுமாறிகளையும் சூதாடிகளையும் வளைத்துப் பிடிப்பதே போன்று போலீஸார் அவர்களைச் சூழ்ந்துவளைந்து வேட்டையாடிக் கைது செய்து விட்டனர். இத்தகைய இழிவு காங்கிரஸுக்கு உண்டாகுமாறு செயவது எவ்வளவு உசிதமான நற்றொண்டு என்பதை இந்திய மக்களே தீர்மானிக்க வேண்டும்.

அம்மட்டோ! தைரியமாக "இந்த இடத்திலேதான் நாங்கள் காங்கிரஸ் மகாநாட்டைக் கூட்டப்போகிறோம்" என்று ஏன்கூறியிருக்கலாகாதென்றும் கேட்கின்றோம். போலீசாரை ஏமாற்ற எண்ணிப்பலப்பல விடங்களின் பெயர்கள் காங்கிரஸ் மகாநாடு கூடுமிடங்களெனக் குறிப்பிடப்பட்டமையால் போலீசார் டெல்லி முழுதுமிருந்த சத்திரம் சாவடி பொதுவிடங்கள் முதலிய அனைத்தையும் காவல்புரிந்து சோதனையிட்டு இந்த வாரத்திற்குள் சற்றேறக்குறைய 700 பேர்வரை கைது செய்துவிட்டனர். இவ்வாறெல்லாம் போலீசாருக்கு ஆட்டங்காட்டியிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது குழந்தைத்தனமான நோக்கங்கொண்ட இந்தத்தலைவர்கள் என்போர் காங்கிரசையும், கண்மூடி மௌனிகளாக அதனைப் பின்பற்றி நிற்கும் பரம சிஷ்யர்களையும் எவ்வளவு பெரிய வழிக்கேட்டிலும் துன்பத்திலும் ஆழ்த்திவைக்கும் பாதையில் போய்க்கொண்டிருக்கின்றனர் என்பது நன்கு புலனாகிவிடுகின்றதன்றோ?

இந்திய மக்கள் எந்த நோக்கங்கொண்டிருக்கின்றனரோ எவ்வளவு சீக்கிரத்தில் சுதந்தரம் பெறவேண்டுமென்று நாடுகின்றனரோ அவ்வளவையும் இந்தக்காங்கிரஸ் தலைவர்களென்று தம்மைக்கூறிக்கொள்வோர் கெடுத்தே வருகின்றனர். வழிதெரியாமற்போய்ப் படுகுழியான வழிகளிலிறங்குகின்றனர். இந்த கையவர்களை நம்பிக்கிடப்போரும் நாசமாகின்றனர். நாட்டின் நிலையும் வரவர அதிகம் சீர்கெட்டுப் போய் விடுகின்றது.

முஸ்லீம்கள் எக்காலமும் அடிமைகளாய் வாழ விரும்பங்கொண்ட கோழைகளாயிருந்ததில்லை யென்பது சரித்திரம் படித்தவர்கள் அறிந்தேயிருக்கின்றனர். அதே போன்று இக்காலத்திலும் முஸ்லீம்கள் தங்களைப்பிறரிடம் அடிமைகளாக இருக்கச்செய்துகொண்டிருப்பதை விரும்பவில்லை, பிரிட்டிஷாராயினும் சரி, அல்லது ஹிந்து ராமராஜ்யமாயினும் சரி, முஸ்லீம்கள் இவ்வுலக எந்த அநீத அரசாங்கத்திற்கும் அடிபணிந்து நடக்கக் கட்டளை பெறாதவர்களாவர். எனவே, தற்போதைய தேசியப் பத்திரிகைகளென்னும் வெளிவேடப்பத்திரிகைகள் உளறிக் கொட்டி வருமாறேபோல் முஸ்லீம் தலைவர்கள் இந்தியநாட்டு நலனுக்கு எதிராகப் போவதாக எவரும் கருதுக் கொள்ளுதல் கூடாது. ஆனால், காங்கிரஸ் தலைவர்களென்று கூறுவோரே இதுசமயம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள்; பிறரையும் தவறான பாதையில் ஈர்த்து வருகின்றார்கள் என்றே நாம் கூறுவோம்...........

"தாருல் இஸ்லாம்"

29—1—32.

பெரிய குளம்.

இவ்வூருக்கு தோழர் கைவல்யம் விஜயம் செய்திருந்ததை முன்னிட்டு சுயமரியாதை சங்கத்தாரால், கும்பக்கரை என்னுமிடத்தில் 22—1—32 தேதி விருந்தொன்று நடத்தப்பட்டது. மேற்படி விருந்திற்கு வடகரை அண்டு தொட்டப்ப நாயக்கனூர் ஜமீன்தாரும், பெரிய குளம் டவுன் முனிசிபல் சேர்மனுமாகிய கனம் லெப்டினென்ட் நாகமராமபத்திர நாயுடுகாரு அவர்களும் வியாபாரிகளுமாக நான்கு முஸ்லீம் சகோதரர்கள் உள்பட மற்றும் பல வகுப்பினர்களுமாக சுமார் நூறு பேர்கள் வரை விருந்தில் கலந்து கொண்டு சமபந்தி போஜனம் சிறப்பாய் நடை பெற்றதென ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

சமபந்தி போஜனம்.

24—4—32 நாள் ஞாயிறன்று இரவு 8 மணிக்குக் கோவை சுயமரியாதைச் சங்கத் தலைவர் தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் ஷை சங்க அங்கத்தினர்களுக்கும் கோவை தேவேந்திர வேளாள வாலிபத் தமிழ் சங்கம், இருகூர் திராவிட முன்னேற்ற சங்கம், குனியமுத்தூர் திராவிட வாலிப சங்கம் முதலிய தாழ்த்தப்பட்ட சமூகச் சங்க அங்கத்தினர்களுக்கும்ஓர் சமபந்தியுணவளித்தார். விருந்தில் ஜாதிமத பேதமின்றி சுமார் 100 பேர் கலந்துகொண்டனர். அவ்விருந்துக்கு கோமங்கலம்புதூர் ஆசிரியர்கள் ஆர். எஸ். மயில்சாமி, வெங்கட்டாதனம் பொன்னுக்காளிபாளையம் எஸ். ஏ. மாணிக்கம் ஆகியவர்களும் வந்திருந்தனர்.

பின்னர் இவ்விருந்தைப் பாராட்டு முகத்தான் கோவை சுயமரியாதை வாலிபர் சங்கக் கூட்டமொன்று தோழர் ஈ. தர்மலிங்கம், கோவை தேவாங்க வாலிபர் சங்கக் காரியதரிசி அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்களைப் பாராட்டிப் பாராட்டற்பாமாலை ஒன்று பாடிக் கொடுக்கப்பட்டது. பின் தலைவர்களானவர்கள் இத்தகைய கூட்டங்கள் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக்கொள்வதற்கும் சாதி, மத, வைதீகச் சாத்தான்களை யொழித்தற்கும் நம் நாட்டில் அதிகமாய்ப் பரவவேண்டுமென்று கூறியமர்ந்தார். அதற்குத் தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் விடையிருக்குமுகத்தான் தமதழைப் பிற்கிசைந்து விருந்திற்கலந்துகொண்டு தம்மைக் கௌரவித்த தோழர்களைப் பாராட்டி நன்றிசெலுத்தியதுடன் இரவு 10 மணிக்கு இனிது கூட்டம் முடிந்தது.

சுயமரியாதைத் சங்கம் நாகப்பட்டணம்.

24—4—32 மாலை 6 மணிக்கு இச்சங்க அங்கத்தினர்களின் கூட்டமொன்று கொடி மரத்தடியில் சங்கத் தலைவர் தோழர் எஸ். பி. கிருஷ்ணன் தலைமையில் கூடிற்று.

தலைவர் முகவுரையாக சென்ற வருடத்தை விட இவ்வருடம் சிறப்பாக வேலை செய்ய வேண்டு மென்று பேசியபின் காரியதரிசி கூட்டம் கூட்டப் பட்டதின் காரணங்களை தெரிவித்த பின் தோழர் ஆர். வி. கோபால் அவர்கள் "சங்கத்திற்கென சொந்தக் கட்டிடம் இவ்வருடத்திற்குள் வாங்க வேண்டு மென்றும் அதற்காகப் பணம் வசூல்செய்ய ஒரு கமிட்டியையும் நியமிக்கவேண்டுமென்ற" தீர்மானத்தை பிரரேபிக்க அத்தீர்மானத்தை தோழர்கள் என். சிவஞானம், ஏ. கோவிந்தன் இவர்களால் முறையே ஆமோதித்து ஆதரிக்கப்பட்ட பின் ஏகமனதாக நிறைவேறியது. வசூல் செய்ய 13 பேர் களடங்கிய ஒரு கமிட்டிரிம் நியமிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் 9 மணிக்கு முடிவுற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பார்ப்பனீயமின்றிய 11-ம் இறுதிச்சடங்கு.

சுயமரியாதையிற் மிகவும் பற்றுடையோரும், திருச்செங்கோடு ஐஸ்கூல் டிராயிங் மாஸ்டருமான திரு. வி. நரசிம்மலு நாயுடு தமது தந்தை இறந்த இறுதிச் சடங்கை பார்ப்பனீயமின்றி சேலம் கோட்டையில் தமதில்லத்தில் (17—1—82) ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தீண்டப்படாதார் மகாநாடு.

27—1—32ல் பெருந்தொழுவில் கோவை சுயமரியாதை வாலிபர் சங்கத்தலைவர் உயர் திரு. ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடிய திருப்பூர் தாலுக்கா தீண்டபபடாத கிறிஸ்துவர்கள் மகாநாட்டில் தனித்தொகுதியை ஆதரித்தும், திரு. எம். சி. ராஜா அவர்களைக்கண்டித்தும்வட்டமேஜை மகாநாட்டில் ஆதிதிராவிடர்களுக்காக அரும்பாடுபட்ட பிரதிநிதிகளைப்பாராட்டியும், ஆதிதிராவிடர் நன்மைக்கானபலமுக்கியதீர்மானங்கள் நிறைவேறியதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தஞ்சை ஜில்லா 2-வது சுயமரியாதை மகாநாடு.

ஆலோசனைக்கூட்டம்

24—4—32 மாலை 4-மணிக்கு மன்னார்குடி சுயமரியாதை சங்கத்தில் ஜில்லா 2-வது சுயமரியாதை மகாநாடு நடத்துவதுபற்றி முன்னரே அறிவித்தபடி ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தவர்களில் முக்கிமமானவர்கள்:—

தோழர்களான ஏ. ஆறுமுகம், பி.. எஸ், ரத்தினசபாபதி, கே. இருமையா சித்தாக்காடு, வி. ஜி. ஆர். ராஜு திருவாரூர் சிற்சபேசன், திருவாரூர் சாமி அய்யர், ஈசனக்குடி ஈசப்பு பாவலர், ஷம்ஷுல்ஹுதா ஆசிரியர் ஏ. முகமது இஸ்மாயில் முகைதீன், வைத்திலிங்கம் மற்றும் ஜில்லா சுற்றுப்புறங்களிலிருந்தும் சுமார் 200 பேர்வரை கூட்டத்திற்கு வந்து கலந்து கொணடனர். கூட்டத்திற்கு ஏ. ஆறுமுகம் தலைமை வகித்தார். ஆலோசனைக்கூட்டத்திற்கு வரமுடியாது கடிதம் எழுதிய தோழர்கள், டி.ஏ. எம். மாணிக்கம், சி. நடராஜன், சாமி சிதம்பரனார் முதலியவர்களுடைய கடிதங்களைக்கூட்டத்தில் படிக்கப்பட்டது. தீர்மானங்கள்:—

தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டை ஜூன் மாதம் முதல் வாரத்தில் மன்னார்குடியிலேயே நடத்த வேண்டு மென்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்த மகாநாட்டிற்குத் தலைவர்களாகத் தோழர், 1. முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் 2. சிங்கப்பூர் முன்னேற்றம் ஆசிரியர் தோழர் சாரங்கபாணி அவர்கள் 3. தோழர் இந்திராணி பால சுப்பிரமணியம் அவர்கள் 4. தோழர் இராமச்சந்திரன் அவர்கள் சிவகங்கை இவர்களை முறையே தலைமை வகிக்கக் கேட்டுக் கொள்ளுகிறது,

இந்த மகாநாட்டைத் திறந்து வைக்க "தாருல் இஸ்லாம்" ஆசிரியர், தாவுத்ஷா அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது

மகாநாட்டில் சுயமரியாதைத் தோழர்களை வெளி ஜில்லாக்களிலி

ருந்து சொற்பொழிவாளர்களாகவும். படத்திறப்பு, கொடியேற்று விழா போன்ற காரியங்களை நிறைவேற்றி வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

1. வரவேற்புக் கமிட்டித் தலைவராக திரு. ஏ. ஆறுமுகம் அவர்களை இருக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டு தீர்மானம் நிறைவேறியது.

1 ஷை மகாநாட்டிற்குக் காரிய தரிசிகளாக தோழர்கள் எம். கோபாலசாமி, வி. விஸ்வநாதன், ஆர். கோவிந்தராஜலு, முகைதீன் ஆகிய நால்வரையும் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டு தீர்மானம் நிறைவேறியது.

3 தோழர் பி. சொக்கண்ணு அவர்களை சர்வாதிகாரியாய் இருக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

திருத்தம்.

24—4—32ந் தேதி "குடி அரசில்" வெளிவந்த "கலப்புத் திருமணம்" என்பது உண்மையல்ல வென்றும், அத்தகைய திருமணம் விருதுநகரில் நடைபெறவில்லை யென்று தெரிகிறது.

குறிப்பு.

நமது பத்திரிகையின் எட்டாவதாண்டைப்பற்றி பல அன்பர்களிடமிருந்துகட்டுரைகள்வந்தன. அதில் சிலவற்றைப்பிரசுரித்துள்ளோம். மற்றவை அடுத்தவாரம் பிரசுரிக்கப்படும்.

சுயமரியாதைத் திருமணம்.

(1) கோலார் தங்கவயல் மாரிக்குப்பம் 9-வது கெனி Garden Block) கார்டன் பிளாக் 1-வது கிரகத்தில் 25—4—32 திங்கட்கிழமை காலை 9-மணியிலிருந்து 11-மணி வரையில் திரு. என். பி. இராமாநுஜனுக்கும் திருமதி. ஆண்டாளம்மாளுக்கும் சீர்திருத்தக்காரர்களும் வைதீகர்களும் நிறைந்த கூட்டத்தில் உயர்திரு. இ. நா. ஐயாகண் புலவரவர்கள் தலைமையில் முகவுரை கூறப்பட்டு மணமகன் தகப்பனுர் என். பாலகிருஷ்ணன் அவர்களால் திருமணம் நடத்தப்பட்டு திரு. ஆர். சுப்பிரமணியரால் ஷை திருமணமானது எவ்விதச் சடங்குகளன்றி நடந்தேறிய தைப்பாராட்டி வைதீக ஊழல்களை வெளியாக்கியதுடன் வாலிபர்கள் இவ்வித காரியங்களுக்கு முன்வரவேண்டுமெனக்கூறியமர்ந்தார். பின்னர் உயர்திரு. சங்கரசாமியவர்கள் மூடக் கொள்கைகளைக் கண்டித்து சீர்திருத்தங்களைக் கையாளும்படி கேட்டுக் கொண்டதின்பின் தலைவர் இரு பிரசங்கிகளையும் ஆதரித்துத் தம்பதிகளுக்குச் சமவுரிமை, நற்புத்தி, காதல் இவைகளைப் பின்பற்றி நடக்கவேண்டுமென முடிவுரை நிகழ்த்தினர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

தேசியப்பார்ப்பனரில் பூணூலை அறுத்தவர் எத்தனை பேர்?

திருச்சி ஜில்லா
5-வது பார்ப்பனரல்லாதார்
மகாநாடு.

நாளது மே மாதம் 7, 8 தேதிகளில் திருச்சி முனிசிபல் பப்ளிக்ஹாலில் நடைபெறும்.

மகாநாட்டுத்தலைவர்.

கனம் சர். A. P. பாத்ரோ B. A., B L., M. L. C.

வரவேற்புக்கழகத்தலைவர்.

கனம் K. C. M. வெங்கடாசல ரெட்டியார் அவர்கள் M. L. C.

அதுசமயம் திருச்சி ஜில்லா 3-வது பார்ப்பனால்லாத இளைஞர் மகாநாடும் நடைபெறும்.

டிக்கட் விபரம்.

வரவேற்புக்கழக அங்கத்தினர் ரூ. 5—0—0.
பிரதிநிதிகள். ,, 1—0—0.
பார்வையாளர் (Visitor) அணு 0—4—0.
பெண்களுக்குச் சட்டணமில்லை.

இங்கனம்,

P. ரெத்தினவேலு தேவர்,
வரவேற்புக்கழக உதவித்தலைவர்.

சேலம் ஜில்லா
சுயமரியாதைமகாநாடு

மே-மீ 7, 8-ம் தேதிகளில் நடைபெறும்.

தலைவர்.
தோழர். M. சிங்காரவேலு B. A., B. L.,

திறப்பாளர்.
தோழர். A. V. முத்தையா B. A., B. L.,
பிரஞ்சிந்திய அமைச்சர்.

பெண்கள் மகாநாடு.

தலைவர்.
தோழர். S. நீலாவதி.

திறப்பாளர்.
தோழர். R. அன்னபூரணி.
செனட் அங்கத்தினர்.

சிவகங்கை. தோழர். S. ராமச்சந்திரன் B. A., B. L., சுயமரியாதைத் தலைவர். E. V. ராமசாமியின் படத்தைத் திறந்துவைப்பார்.

தொண்டர்கள் மகாநாடு

தலைவர்
தோழர் T. V. சோமசுந்தரம் B. A., B. L.,

திறப்பாளர்
T. V. சுப்பிரமணியம்
திராவிடன் ஆசிரியர்-

தோழர்களான ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி., தோழர் வி. வி. ராமசாமி, விருதை நகராண்மை தலைவர், தோழர் எஸ். முருகப்பா—மரகதவல்லி 'சண்டமாருதம்" ஆசிரியர், கி. ஆ. பெ. விஸ்வநாதம், சிவராஜ் எம்.எல்.சி., இந்திராணிபாலசுப்பிரமணியம், புரொபசர் பி. லெக்ஷுமிநரசு, "திராவிடன்" ஆசிரியர் டி. வி. சுப்பிரமணியம், டி. தர்மலிங்கம் எம். எல். சி., குருசாமி பி. ஏ., குஞ்சிதம் பி. ஏ., "சிட்டிசன்" ஆசிரியர்கள் டி. வி. சோமசுந்தரம் பி ஏ., பி. எல்., கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல். ராமசுப்பிரமணியம். எ. ஆர். சிவானந்தம், எ. ரத்தினசபாபதி, சிவகாமி-சிதம்பரனுர், சுந்தரி-அருணகிரி, விசாலாட்சி-சுப்பையா, "புதுவை முரசு" ஆசிரியர் அ. பொன்னம்பலம், மற்றும் நமதியக்கத்தலைவர்கள் பலரும் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

நமது தலைவர்கள் ஐரோப்பிய யாத்திரையில் இருக்கும் பொழுது நமதியக்கத்தின் ஓர்மகாநாடு கூடுகிறது. சகல சுயமரியாதைத் தோழர்களும் சேலத்திற்குப் புறப்பட ஆயத்தமாகுங்கள்.

தமிழ்நாட்டின் சுயமரியாதை தோழர்களோ நமது எதிரிகளின் பொய்பிரசாரம், சூழ்ச்சி, எதிர்ப்பு, இவைகளைத்தாண்டி வெகுநாளாயிற்று. இம்மாகாணத்திலுள்ள சகல சுயமரியாதை அன்பர்களும், தோழர் சிங்காரவேலு பி. ஏ. பி. எல், தலைமையில் நமதியக்கத்தின் எதிர்கால வேலைத்திட்டங்களை செய்ய ஒன்றுகூடி தீர்மானிக்கபோகிறார்கள்.

ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் விஜயம் செய்து மகாநாடுகளைச் சிறப்பாக நடைபெறும்படி தவரமாட்டீர்கள் என்று நம்புகிறோம்.

காரியதரிசிகள். இங்ஙனம்
எஸ். சி. ரேங்கசாமி வரவேற்புக்கமிட்டியார்
சித்தையன் செவ்வாய்பேட்டை,
கோசலம். சேலம்.

குறிப்பு:—நாளது மே-மீ 7, 8 தேதிகளில் மகாநாடு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாய் பலருக்கு கடிதம் சேலமிருந்து சென்று இருக்கிறது இவைபொய்யான செய்தி என்பதை அறிந்துகொள்ளவும்

எஸ். வி. லிங்கம், சர்வாதிகாரி.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யா, தப்பா என்பதைப் பற்றி மாத்திரம் தீர யோசித்து தைரியமாயிறங்கி இருக்கின்றோம்.

ஃ ஃ

காங்கிரஸ்.

காங்கிரஸ் என்பது பாமர மக்களைப்படித்த கூட்டத்தார் ஏமாற்றுவதற்கென்று ஏற்படுத்திக் கொண்ட ஸ்தாபனம் என்றும் அதிலும் அப்படித்த கூட்டத்தார் என்பதில் முக்கியமானவர்கள் நமது தென்னாட்டு பார்ப்பனர்களேயென்றும், அவர்கள் இஷ்டப்படியெல்லாம் ஏறக்குறைய காங்கிரஸ் ஆரம்பமான காலமுதல் கொண்டு ஆட்டப்பட்டு வந்திருக்கின்றது என்றும். காங்கிரஸ் என்பதாக ஒன்று நமது நாட்டில் ஏற்பட்டபிறகே மக்களின் ஒற்றுமை குலையவும், ஒழுக்கம்கெடவும் ஏழைமக்களுக்கு பல வழிகளிலும் கஷ்டம் ஏற்படவுமான காரியங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றதென்றும் கோபுரத்தின் மீதிருந்தும் கூறுவேன்.

ஃ ஃ

உண்மையை ஒளிக்காமல் பேசவேண்டுமானல் நமது நாட்டில் காங்கிரஸ் என்கின்ற ஒருகொடிய எமன் போன்ற இந்த ஸ்தாபனம் இருக்கும்வரையில் ஏழைமக்கள் விடுதலை என்பதை கனவிலும் நினைக்க வேண்டியதில்லை என்றே கல்லிலும் எழுதிவிடுவோம்.

ஃ ஃ

வெள்ளைக்காரனுடைய கொடுமையான ஆட்சிமுறை எதாவது ஒரு காலத்திலாவது நமது நாட்டை விட்டு ஒழியவேண்டுமானல் முதலாவது காங்கிரஸ் ஒழிந்து தீரவேண்டும். பிறகுதான் 'இந்து' மதமும் பார்ப்பன ஆதிககமும் ஒழியவேண்டும் என்று சொல்லுவோம். ஏனெனில் "இந்து" மதத்தின் பெயரால் பார்ப்பனர்கள் மாத்திரம்தான் மக்களை ஏமாற்றி பாழ்படுத்த முடியும். காங்கிரசோ அப்படியில்லை. காங்கிரசின் பெயரால் எல்லா குப்பு அயோக்கியர்களும், அன்னக்காவடிகளும் அனுமதேயங்களும், காலிகளும் மக்களை ஏமாற்ற வசதிஇருக்கின்றது.

ஃ ஃ

"இந்து" மதம் ஒருமனிதன் செத்தபிறகு, மோட்சம் (விடுதலை) என்கின்ற புரட்டான தத்துவத்தின்மீது கட்டப்பட்ட பொய்க் கோட்டையாகும். காங்கிரசோ உயிருடன் இருக்கும்போதே விடுதலை (மோட்சம்) கொடுப்பது என்கின்ற புரட்டான தத்துவத்தின் மீது கட்டப்பட்ட பொய்க் கோட்டையாகும். பாமர மக்களும் ஏழைமக்களும் இதைவெகு சுலபத்தில் நம்பி ஏமாந்து போகத்தக்கபடி தந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதற்கு தக்கபடி அரசாங்கத்தின்மீது மக்களுக்கு வெருப்பு ஏற்படும்படி பிரசாரங்கள் செய்ய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே ஜனங்கள் ஏமார்ந்துபோவதில் அதிசயமில்லை.

(13-ம் பக்கத்தொடர்ச்சி)

கும்போவதே கிடையாது. உன் சாம்பலைப் பூசிக்கொள்வதேகிடையாது. அவர்கள் பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே உங்கள் ஆட்களெல்லாம் பயந்துநடுநடுங்குகிறார்கள். 'திருஞான சம்பந்தர்' அவதாரம் செய்வார்; சுயமரியாதை இயக்கத்தை ஒரே வருஷத்தில் கருவறுப்பதற்குத் தவங்கிடக்கிறேன்; என்று சொன்ன படே படே ஆசாமிகளெல்லாம் கேட்பாரற்று மூலையில் பதுங்கி அடங்கி ஒடுங்கி பழுதைபோல் படுத்துக்கிடக்கிறார்களே! இன்றும் 10—15 வருஷத்தில் இந்த ஒன்றரை லட்சம் ஆட்களும் இந்தியா முழுவதும் உனக்கு எதிரியாக ஆகி விடுவார்களே! பம்பாயில்கூட ஒரு சங்கம் உண்டாக்கிவிட்டார்களே! இங்கிலீஷில் கூட பத்திரிகை போடுகிறார்களே உன்யோக்கியதை நிமிஷத்துக்கு நிமிஷம் வெளியாகிக்கொண்டுபோகே இருக்கிறது!

பரமசிவம்:—(சூலத்தை ஆட்டிக்கொண்டு,) போதும்! போதும்!! உமது நிலைமை எனக்குத்தெரியாதா? உம் செல்வாக்கு ருஷியாவில் எப்படிஅய்யா இருக்கிறது? என் கோவில்களிலாவது வௌவால் அடைந்திருக்கிறது என்றீர், உம் கோவில்களைஇடித்துவிட்டுதொழிற்சாலைகள் கட்டிவிட்டார்களே! இங்கிலாந்தில் கூட லண்டன்4,-6 ஜான்சன்ஸ்கோர்ட், ப்ளீட்ஸ்டிரீட்டில் உன்குட்டுதினம்கொஞ்சங்கொஞ்சமாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறதே! அமெரிக்காவில் நியூயார்க்வீதித்தெருவில்உம்வேருக்கு வெந்நீர் ஊற்றிக்கொண்டிருக்கிறார்களே! பிரான்சில்வெகுமும்முரமாக உமக்குக்குழி தோண்டிக்கொண்டிருக்கிறார்களே! அதெல்லாம் போகட்டும் ருஷ்யா என்று சொல்லும் போதுஏன் உமதுமுகம் சிவந்தது? ஒரேவேர்வையாக வேர்த்ததே அதுஏன்? உடம்புஆடிற்றே அதுஏன்?

பலகுரல்கள் கேட்கின்றன;—

எங்கே ஏசு? எங்கே சிவன்? மனிதர்களைப்பிரித்த பாதகர்கள் எங்கே? கொண்டா அவர்களை! பொசுக்கு அவர்களை ஹோ! ஹோ!

சிவனும் ஏசுவும்:— திருச்சிற்றம்பலம் Amen.

விளம்பரம்

இதனல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றல்:—

ஈரோடு முனிசிபல் சங்கத்தாருக்கு பாத்தியப்பட்ட கீழ் குறிப்பிட்ட லார்டு நேப்பியர் வீதியிலுள்ள நெ. 2 முதல் 11 வரையிலுள்ள 10 கடைகளை 11-6-32 முதல் 3 வருஷத்திற்கு வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் பாத்தியதையை 1932-௵ ஜூன் மாதம் 6 தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஈரோடு முனிசிபல் கவுன்சில் ஹாலில் பகிரங்கமான ஏலத்தில் விடப்படும்.

ஏல நிபந்தனைகள்.

குறிப்பிட்ட கடைகள் 1932-௵ ஜூன் மாதம் 11 தேதி முதல் 3 வருஷங்களுக்கு அனுபோக பாத்தியதை உண்டு.

(1) ஏலம் கோர பிரியமுள்ளவர்கள் ரூ. 00 டிபாசிட்டு கட்டி ஏலம் கோரவேண்டும். ஏலம் எடுத்தவர்களின் டிபாசிட்டு குத்தகை காலம் முடிந்தபிறகு திருப்பிக்கொடுக்கப்படும். மற்றவர்களின் டிபாசிட்டு உடனே திருப்பிக்கொடுத்துவிடப்படும்.

(2) மாதாந்திர வாடகையை மாதம் முடிந்து அடுத்த மாதம் 5 தேதிக்குள் செலுத்திவிட வேண்டியது. இதற்கும் அப்போதைக்கப்போது கவுன்சிலில் ஏற்படுத்தப்படும் மற்ற நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு ஒப்பந்தச்சீட்டொன்றை ஏலம் எடுத்தவர்கள் ஏலம் எடுத்த தேதியிலிருந்து மூன்று தினத்திற்குள் எழுதிக் கொடுக்கவேண்டும். தவறினல் டிபாசிட்டு தொகையை இழப்பதுமன்றி மறு ஏலத்தில் ஏற்படக்கூடிய நஷ்டத்திற்கும் பாத்தியப்படவேண்டும்.

(3) கட்டிடங்களில் எப்பாகத்தையாவது எவ்விதத்திலும் எழுத்து மூலியமாய் முனிசிபல் கவுன்சிலின் அனுமதி பெறுமல் மாறுதல் செய்யக்கூடாது.

(4) கடையை குறித்த காரியத்திற்கல்லாமல் வேறெவ்வித ாகவும் உபயோகப்படுத்தக்கூடாது.

(5) கடையை ஏலத்தில் எடுத்தவர் வேறு நவருக்கு கவுன்சிலின் அனுமதி இல்லாமல் உள்வா க்குக் கொடுக்கக்கூடாது.

(6) கடை அனுபோக ாத்தியதை முடிவ நது ஒப்புவிக்கும் போது நல்ல ஸ்திதியில் எவ்விதமாக முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டதோ அதே திதியில் ஒப்புவிக்கவேண்டியது.

(ஒப்பம்)

ஈரோடு முனிசிபல் ஆபீஸ், 25—4—1932.

கே. ஏ. ஷேக் தாவூது,
சேர்மன்.

ஈ. வெ. ரா.

[உ. க. எழுதியது]

அவரவர்களுக்கு ஒரு விஷயம் சரி அல்லது தப்பு, என்றுபடுமானால் அதனை வெளிப்படையாய் "தனது கருத்து—அபிப்பிராயம்" என்ற முறையில் கூற சகலருக்கும் உரிமையுண்டு. ஒருவரது கருத்து மற்றையோருக்கு முழுதும் முரண்பட்ட அபிப்பிராயமாயிருக்கலாம். அதனாலேயே ஒருவர் தமது கருத்தை வெளியிட அது பாதிக்காது. அம்முறையிலே இக்கட்டுரை எழுதத்துணிந்தேன்.

நம் தேசத்திலே உள்ள கட்சிகள் பெரும்பாலும் ராஜீய விஷயங்களைப் பின்பற்றியவை. தேசீய விஷயங்கள் அடங்கியவை. ராஜீய விஷயங்கள் சமூக சீர்திருத்தத்தின் ஒரு அம்சமாகும், ஆகவே ராஜீய கட்சிகள் சமூகம், "ராஜீய விஷயத்தில் பின் தங்கியிருப்பதான ஒரே ஒரு குறையை" "நிவர்த்திக்கப்பாடுபடுபவைகள் சமூகத்திலுள்ள சகல குறைபாடுகளையும் நிவர்த்திக்கவும், சமூகம் மற்ற தேச ஜனசங்கையோடு சரிசமமாக வீற்றிருக்கவும் சகல கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு அரும்பாடுபட ஹேதுவாயிருப்பது இன்றைய தினம் நாம் காணும் தனிக்கட்சியான "சுயமரியாதைக் கட்சியேயாகும்" "கட்சி" யென உருவாக்கிய பெருமை தோழர் ஈ. வெ. ராமசாமிக்கே உரியது. தோழர் ஈ. வெ. ராமசாமி சாதாரண ஜனங்களுள் ஒருவர். நீண்ட நாள் பள்ளியிலோ, கலாசாலையிலோ தாமே இருந்து அங்கு அனுபவ பூர்ணமாகக்கல்வி கற்று வெளியேறி உலகுக்கு எவ்விதத்தும் பயன்படா வகையில் உயிர்வாழும் பட்டதாரிகளுக்கும், அவருக்கும் நெடுந்தூரம். இளம்பிராயத்திலே புத்தகக் கல்வியை விட்டு விலகி உலகறிவுபெற உழைத்த அறிவாளி. அவ்வறிவே பிற்கால அவரது வாழ்க்கையில்பேருதவிபுரிந்தது,புரிகிறது அவரது அவ்வுலக "அறிவே" சகல விஷயங்களையும் நொடியில் தமக்குள்ளே நிறைத்துக்கொள்ளும் பெரும் பொன்பாண்டமாயிருந்தது. விஷயங்களைச்சிக்கறுத்து, பக்குவப்படுத்தி, எதிர்காலத்திலே, தமக்கும் உலகுக்கும் பெரிதும் பயன்பட தம்மனதுள்ளே சேகரித்து வைத்திருக்க முககிய மூல காரணபூதமாயமைந்தது அவரது உலகறிவு. பனித்திவலைகள் சூரியனது ஒவ்வொரு கிரணத்திற்கும் உடனுக்குடன் மறைகின்றன. அதே போல் புத்தகத்தை மனப்பாடம் செய்து ஏட்டுச்சுரைக்காய் போல் வீற்றிருக்கும் புத்தகப் பூச்சிகள், பிரயோஜனமான விஷயங்களும், உலக அனுபோகமும் ஒருங்கே பொருந்திய பகுத்தறிவாளர்கள் கேட்கும்புத்திநிஷ்ணயத்திற்கு உதாரணமென விளங்கும் கேள்வி பாணங்கள் முன்பு ஷியார்கள் உஷ்ணத்திற்கெதிரான பனித்திவலைகளே என்பதை நிரூபித்துக்காட்டிய மேதாவிகளுள் தோழர் ஈ. வெ. ரா. ஒருவர். நான்கு பக்கமும் சுவரையெழுப்பி அவ்வரையின் மத்தியிலே வாத்தியாரின் மூலமாக ஊட்டும் கல்விக்கும், அறிவிக்கும் சம்பந்தமேயில்லை என உலகுக்கு தோற்றுவித்து நின்றவர். அதற்குத்தாமே உதாரணமாய் விளங்குபவர்.

உலகறிவு பெற்றுவிளங்கும் தோழர் ஈ. வெ. இராமசாமியைப்போல ஆங்காங்கே பழைய பற்றுகளைவிட்டு, பயனற்றவைகளை விலக்கி, ஆராய்ச்சியின்பயனால் சக்கை வேறாகவும், சாறு தனியாகவும் பிரித்து ரசத்தைக்கொண்டு நின்ற பூமான்கள் நம் தமிழ்நாட்டில் ஏராளமாய் அமைந்து கிடந்தனர். அச்சிலர்களது கொள்கை அகத்தே கிடந்தன. தைரியம், தான்கொண்ட கொள்கையை மெய்ப்பிக்குந்திறன் இரண்டும் பூஜ்யமாக இருந்ததால் மேற்படியார்கள் தம் கொள்கைக்கேற்றவாறு நடக்கவகையறியாதும், உலகுக்குப் பயந்தும் உள்ளூறவருந்தி, "ஏழை இந்தியா முட்டாள்தனத்தால் இன்னும் பாதாளத்திற்குப் போகிறதே" என ஏங்கி துக்கித்து நின்றனர். தோழர் ஈ. வெ. ரா. தோற்றுவித்த இயக்கம் மயங்கிநின்ற வீரர்களுக்குப் புத்துயிர் அளித்தது. தனது கொள்கையை ஊர்ஜிதப்படுத்தி பிறரை "ஆம்" என ஒப்புக்கொள்ளச்செய்யும் வாக்குவாத முறை— எதிரியை நியாய முறையில் அவனது வார்த்தைகளாலேயே முறியடித்து ஓட்டும் வழி இரண்டும் தோழரினால் இனமாக வழங்கப்பட்டன போலாயிற்று.

தர்க்க முறையைப புதிதாய் அமைத்து வெற்றிகரமாய் முடிந்தவர் தோழர் ஈ. வெ. ரா. இராமாயணத்தைப்பற்றி இருவித்துவான்கள்தான் தர்க்கம் செய்யத் தகுதியுடையவர்கள் இரண்டு தர்க்கிகளுள் கந்தபுராணத்தைப்பற்றி முழுதும் ஒருவருக்குத தெரிந்து மற்றவருக்குத் தெரியாமல் கந்த புராணத்தைப்பற்றி வாதப்போரை ஆரம்பிப்பது முடியாக்காரியமென நினைத்திருந்தவொருகாலம். ஆனால் ஈ. வெ. ராவின் காலத்தில் பிறந்த தேதியிலிருந்து புராணத்தைக்கேட்டுப் படித்து பிரசங்கியாய் விளங்கும் எவ்வித நிபுணரும் ஆராய்ச்சி புத்தியும், உலக விசாரணை அறிவும் பெற்று விளங்கும் எந்த மனிதனிடத்திலும் தர்க்கித்து உண்மையை மெய்ப்பித்து ஈடேறுவது முடியாதகாரியமாய் முடிந்தது. வேத, சாஸ்திர, புராணத்தின் முதல் பக்கத்தைப்பாராத ஈ. வெ. ராவின் சிஷ்யகோடிகளான பகுத்தறிவாளர்கள் முன்பு, வேதம், சாஸ்திரம், புராணம் முதலியவைகளை அடி முதல் நுனிவரையில் ஓதிநின்ற ஆயிரக்கணக்கான மறைமலையடிகளும், வித்வமணிகளும், மஹோமஹோ உபாத்தியாயர்களும் சின்னபின்னப்பட்டுச் சிதறி, "இதுவரை தாம் பெற்ற கல்வி இருபதாம் நூற்றாண்டில் பயனற்று ஒழிந்ததே" என ஷியார்கள் ஒப்பாரி வைத்து அழும்படி நேர்ந்தது.

தோழர் ஈ. வெ. ராவின் அரும் முயற்சியினாலும், கலங்காத நெஞ்சினாலும், சிறந்த புத்தியினாலும் தமிழ் ஜில்லாக்களில் இவ்வெட்டாண்டுகளாக பெரியமாறுதல்உண்டாயிருக்கிறது என்பது மறுக்க முடியாத விஷயம். "சூத்திரன்" என்னும் பதம் அமுலில் இருந்து, சென்று நெடுநாளாயிற்று. "பிராமணீயம்" என்னும் மரம் தழைத்துப் பூத்துக்காய்த்து கனிந்து குலுங்கி நின்ற தொருகாலம். அம்மரம் வேரோடு சாய்ந்து மண்ணோடு மண்ணாகப் போகும் காலம் மிகவும் சமீபத்தில் வந்து விட்டது- தேன், பால், இளநீர் முதலியன கோவில் சாக்கடையில் சமுத்திரமாக நின்றது இவ்வெட்டு ஆண்டுகளுக்கு முன்பு. தற்சமயம் ஷை தீர்த்தங்கள் நிறைந்த சின்னஞ்சிறு ஊற்றுகளே தேங்கிநிற்கின்றன. பெண் தெய்வம் எனவாயளவிலே பறைசாற்றி செயலளவிலேயேபெண்ணைப்பேயாகப்பாவித்து அடக்கி வைத்திருந்த வேஷதாரி வித்வச்சிரோமணிகளது கொட்டம் அடங்கியது. பெண் விடுதலைக்குப் பெரும் பாதை போடப்பட்டது. லக்ஷக்கணக்கில் நிறைந்து நின்ற பரலோகத் தபாற்பெட்டிகளான மடி சஞ்சிகள் வீட்டை விட்டு வெளியேற வழியின்றி சிறை வைக்கப்பட்டனர். இம்மியளவாவது மனிதர் சுகங்களுக்குப் பயன்படா வகையில், சைவத்தையும் வைஷ்ணவத்தையும் புனருத்தாரணம் செய்யப்போய்க்கொண்டிருந்த ஏராளமான செல்வம், பெரும்பாகம் மீதப்பட்டது. விலாசமான உலகத்தைப் பரந்த நோக்கத்தோடு பார்த்து தம்மையும் கண்டு பழையனவற்றைக்கழித்துப் புதியனவற்றைப் புகுத்தி ஏனைய சனசமூகத்திற்கு இணையாக வீற்றிருக்கவேண்டும் என்னும் உணர்ச்சி எங்கு பார்த்தாலும் மங்களத்தோடு தங்கி நிற்கிறது.

ஃஃ ஃஃ

முடிவாகதோழர் ஈ. வெ. ரா.தமது கொள்கைகளை நிலை நாட்டித் தமிழ் நாட்டை பல்லாயிரம் படிகளுக்கு மேல் கை தூக்கி விட்டார். அவரது உண்மை சிஷ்யகோடிகள் அவ் விஷயத்தில் அவருக்குப் பக்கபலமாக நின்று, அவரது கொள்கைகளை அசைத்துப் பெயர்க்க முடியாக்கோட்டையாகக்கட்டினர். அக்கோட்டையே சுயமரியாதை இயக்கம். அவ்வியக்கம் சாயுஜ்ய நிலையில் எட்டாண்டுகளாக நிற்கிறது. அது அப்போதைக்கப்போது வேறு பெயரோடு மிளிருமே ஒழியஎன்றென்றும்அழிய முடியாது.

இவ்வளவு பெருமை தங்கியவீரர் ஈ. வெ. ராவுக்கு எனக்குத்தோன்றிய வரையில் சில குறைகள் இல்லாமல் போகவில்லை. ஷை குறைகளினாலேயே அவரைப் பேசுந்தெய்வம் என எண்ணி நின்ற சில தோழர் குழாங்களுக்கு அவரிடம் நாளடைவில் சிறிதளவு அறுவறுப்பு எழுந்தது. பொருளைப்பற்றியவரையில் ஈ. வெ. ராவின் பரந்த நோக்கம் சிறிது குறைவுதான். (எலக்ஷன் காலத்தில்) தான் தலைவராவதற்கு மயிலை திரு. எஸ். சீனிவாசய்யங்கார் பணப்பிரபுவாய் விளங்கியதைப்போல் இல்லாவிட்டாலும், ஓரளவுக்கு பொருள் விஷயத்தில் பரந்த நோக்கம், கொண்டிருப்பாரேயானால் இன்றைக்கிருக்கும் ஈ. வெ. ராவின் செல்வாக்கு நூறு மடங்கு பெருகி ஜொலிக்கும் என்பதில் ஐயமில்லை. பெரிய கஷ்டங்களைச் சகித்து, தமது சுகத்தை விலக்கி உழைத்து தமிழ் நாட்டின் ஞானக்கண்ணைத்திறந்து வைத்த பெரியாரது பெருமையையுன்னி அவர் கண்ட உண்மைகளை நினைந்து போற்றுவோமாக.

கோவில்பட்டி சுயமரியாதைத் திருமணம்.

கோவில் பட்டியிலுள்ள சுயமரியாதை இயக்க அபிமானிகளின் பெருமுயற்சியால் இன்று ஒரு சுயமரியாதைத்திருமணம் நடந்தது. திரு பொது உடையார் என்றவருக்கும் திருமதி அரசுக்கும் சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக புரோகிதமின்றி சுருக்கமான செலவில் தோழர் எம். எஸ். அய்யாத்துரை அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

இவ்விதம் சுயமரியாதை இயக்க முறையில் இந்நகரில் நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும். சுயமரியாதை இயக்கச் சார்பில் நடத்த வேண்டுமென்று உயர் திரு. எம். எஸ். அய்யாத்துரை அவர்கள் முயற்சியெடுத்துக் கொண்டது பாராட்டத்தக்கது எனஒரு நிருபர் எழுதுகிறார்.

நாடார்-பிள்ளைமார் சச்சரவு ராஜியாக முடிவுபெற்றது.

ஆருமுகநேரி நாடார்களுக்கும், பிள்ளைமார்களுக்கும் சில காலமாய் நடைபெற்றுவந்த ஊர்வலத்தகாரர் 17—1—32-ல் ராஜியாகிவிட்டது. இப்பொழுதேற்பட்ட ராஜி நிபந்தனைகளின்படி பிள்ளைமார்கள் விசேஷமாய் குடியிருந்துவரும் விநாயகர் கோவில்தெரு, அம்மன் கோவில் தெரு ஆகிய தெருக்களிலும் நாடார்கள் கும்பம் முதலியன எடுத்துச் சொல்லலாமென தீர்மானிக்கப்பட்டதாய்த் தெரிகின்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பர்கள் சிந்தித்துணரவேண்டு கிறேன். பொது மக்களின் ஆதரவாலேயே பத்திரிகைகள் செல்வாக்குப் பெறவேண்டியிருக்கின்றதென்பது பெரும்பாலோர் அறிந்த விஷயம். நம் நாட்டுப் பத்திரிகைகளுக்குப் பொதுவாகவும் சிறப்பாக பத்திரிகைகளுக்கும் அன்பர்கள் தம் ஆதரவு மிகமிக்க குறைவென்பதில் ஐயமொன்றுமில்லை. பத்திரிகைகளின் பெருமையை இன்னும் நம் மக்கள் உணராதிருப்பதே அவர்கள் விழிப்புறாமைக்குக் காரணமாகும். உலகத்தில் சக்திவாய்ந்ததொன்றுவென்றால், பத்திரிகையையே குறிப்பிடவேண்டும். முன்னேற்றமடைந்த இதர நாடுகள் பத்திரிகைகளாலும், வாலிபர்களின் எழுச்சியாலும்தான் முன்னேற்றமடைந்துள்ளன. ஆனால், நம் நாட்டில், பத்திரிகைகளும் வாலிபர்களின் எழுச்சியும் சொல்லும்படியாயில்லை. பத்திரிகைகளாலேதான் ஒரு நாடு விடுதலை அடைந்திருக்கின்றதென்றால், அடைகின்றதென்றால் அதன் சக்தி எவ்வளவென்று வாசகர்களே அறிந்துகொள்ள வேண்டுகிறேன். இதர நாடுகளில் பத்திரிகைகள் நடைபெறும் தன்மையையும், நம் நாட்டுப் பத்திரிகைகள் நடைபெறும் தன்மையையும் ஒன்றிப் பார்த்தால், வெட்கப்படவேண்டியதும், துக்கப்படவேண்டியதும் தவிர வேறில்லை. வாரப் பதிப்புகள், மாதப்பதிப்புகள் தினப்பதிப்புகள், தினமிரு முறைப்பதிப்புகள் என பலபதிப்புகள் ஓர் நாளையில் லட்சக்கணக்காகசெலவாகின்றது. லண்டனிலுள்ள 'டெய்லி ஹெரால்டு'என்னும்பத்திரிகைக்குமட்டும் முப்பது லட்சம் சந்தாதாரர்கள் இருப்பதாகச் சமீபத்தில் பத்திரிகையில் பார்த்தோம். அதோடு ஆங்கு பத்திரிகை படியாதவர்கள் கிடையாதெனவே தெரிகிறது. பகலெல்லாம் கூலிவேலை செய்யும் ஒருவர்கூட மாலையில் இல்லம் திரும்புங் காலையில் பத்திரிகை கைக்கொண்டே செல்லுவாராம். வாசிக்கத் தெரியாதவர்கள் பத்திரிகை வாங்கி வாசிக்கத் தெரிந்தவர்களிடம் கொடுத்து வாசிக்கச் செய்து விஷயந் தெரிந்துகொள்ளுவார்களாம்.

நம் நாட்டில்!

பத்திரிகையென்றால், பலருக்குப் பாம்பாயிருக்கின்றது. இதர நாடுகளில் நூற்றுக்கு நூறுபேர் பத்திரிகை படிப்பவர்களென்றால், நம் நாட்டில் நூற்றுக்கு மூவர் படிப்பவர்களாய் இருக்கின்றார்கள். பத்திரிகையைக் கையால் தொடுவதற்கே பயப்படுபவர்களும் பலருண்டு. நான் இன்ன பத்திரிகை வாசிப்பதென செப்ப நடுங்குகின்றார்கள் பலர். இந் நிலையில் ஏங் நாட்டு மக்கள் முன்னேற்றமடைவர்? ஆனால், நம் நாட்டு மக்களுக்கு முன்னேற்றமடையவேண்டுமென்னும் எண்ணம் தோன்ற இன்னும் நெடுநாள் செல்லும்போலும். பத்திரிகைக்கு ஆதரவில்லாது பிஞ்சிலேயே அழிகின்றது சிலது. கருவிலேயே ஒழிகின்றது சிலது ஏன் ஆதரவு கிடையாது. மேல் நாட்டில் லட்சக் கணக்காய் செலவாகின்றதென்றால், நம் நாட்டில் ஒரு ஆயிரக் கணக்கிலாவது செலவாகக் கூடாதா? ஒரு தினசரிப் பத்திரிகைக்கு முப்பது லட்சம் சந்தாதார்களென்னும் நாடு உருப்படுமா? பத்திரிகை வாங்கப் பயப்பட்டுப் பதுங்கி நிற்கும் நாடு உருப்படுமா? ஒரு நாட்டின் முன்னேற்றம் அந் நாட்டுப் பத்திரிகை வளர்ச்சியிலேயே அடங்கியிருக்கின்றதென்றால், குற்றமாகவோ, பொருத்தமற்ற கூற்றாகவோ ஆக முடியாது. இதை நமது அன்பர்கள் உணர்ந்து ஒழுகும் காலமே நற்காலமாகும். இறுதியாக சகோதர சகோதரிகளுக்கு ஒன்று கூறி இக் கட்டுரையை முடிக்கின்றேன். அன்பர்களே! "பத்திரிகை படித்தால் புத்தி பெருகும்" என்று பல பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால், "[illegible]" என்ற [illegible] எடுத்துவிட்டு "பத்திரிகை படித்தால் பகுத்தறிவு வளரும்" என்று [illegible] அதைவிட வெகு அழகாயிருக்கும். பதம் எப்படியானாலும், பத்திரிகை படிப்பதால் பலனுண்டு என்பது மட்டும் இதினின்று தெற்றென விளங்குகின்றது, அன்பர்களே! பத்திரிகை உலகம் தெரியாத ஒன்றினால், விளையும் தீமைகள் பலவென்பதோடு அவர்கள் "கிணற்றில் வாழ் தவளைகளுக்கும்" ஒப்பாவார்கள். பத்திரிகை உலகம் மக்களது வாழ்க்கைக்குச்சகல வித்த்தும் அரண்செய்வதென்பதை அறிவிக்க விரும்புகிறேன். சுயமரியாதை இயக்கத்தைப்பற்றித் தற்போது பலர் தப்பபிப்பிராயம் கூறுவதற்கும், இதே காரணந் தான் ஒரு விஷயத்தைப்பற்றிச் சரிவரத் தெரிந்துகொள்ளாவிடில், நேரிய அபிப்பிராயம் வர இயலாதன்றோ? நம் நாடு, நமது சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமா

காங்கிரஸ்வலையில் விழவேண்டாம்.

திரு, காந்தியின் வாக்கால் [illegible]ப்பிரசாரம் செய்துகொண்டு திரு. ஜவஹர்லாலின்பொதுவுடைமைப் பிரசங்கத்தால் நம்மை மயக்கப் பார்க்கும் காங்கிரஸ்வலையில் சிக்கிவிட வேண்டாம். என்று என் வாலிப நண்பர்களை எச்சரிக்கை செய்கின்றேன்.

ஒரு சிலர் காங்கிரஸ் கடல் போன்ற ஓர் பழைமையான ஸ்தாபனமென்றும், அதில்சகல இயக்கங்களின் கொள்கைகளும்பொதிந்து கிடப்பதால் வேறு தனி இயக்கங்கள் வேண்டுவதில்லையென்றும் வாதிக்கின்றனர். இதுதான் காங்கிரஸ் தனக்கு எதிராகத்தோன்றும் வேறு ஸ்தாபனங்களை கொலை செய்யும் நய வஞ்சக மார்க்கமாகும்.

பண்டைகாலத்தில் இந்து மார்க்கத்திற்கு போட்டி ஏற்பட்ட சமயங்களில் எல்லாம் அதன் கர்த்தாக்கள் இந்து மதத்தில் எல்லாக் கொள்கைகளும் உண்டு என்று கூறி போட்டிகளை மண்டையில் அடித்து வந்தார்கள்.

இக்காலத்தில் தோன்றிய புத்தர் இயக்கமும் இவ்வாறே நசுக்கப்பட்டு. வெளி நாட்டிற்குத் துரத்தி அடிக்கப்பட்டது. அதுபோலவே நமது மா பெருந்தலைவர் உயர் திரு. ஈ. வெ. ராமசாமிஅவர்களால் தோற்றுவிக்கப்பட்ட நமது சமதர்ம இயக்கத்தையும் சில விஷமிகளும், கூலிகளும், நிலையற்ற கொள்கைகளை உடையவர்களும், காங்கிரசின் பெயரால் கொலைசெய்ய முயலுகிறார்கள்.

ஆனால் அவர்கள் சூழ்ச்சி முக்காலும் பலிக்காது: ஏமாறும் வாலிபர்கள் இன்னும் நம் நாட்டில் இல்லை: ஏமாற்றுபவர்கள்உய்யும் மார்க்கமும் இல்லை.

ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி.

னல், நம் மக்கள்பத்திரிகை உலகா ல்சூழப்படவேண்டும். சுயமரியா தை இயக்க அபிமானிகளும், நமது பத்திரிகைகளின் வளர்ச்சி யை நாடி, யாங்கும் அதன் உயர் வைப்பற்றிஎடுத்தோதவேண்டும். பத்திரிகைகள் எவ்வளவுக்கெவ்வ ளவு செல்வாக்குப் பெறுகின்ற தோ, அவ்வளவுக்கவ்வளவு இயக் கம் செழித்தோங்கும். அதோடு, நம்மியக்கத்திற்கென ஒரு ஆங் கிலப் பத்திரிகை அவசியம் தே வை. பலபலத் தலைவர்களும் ஏனையோரும் உணர்ந்து அதற் கான முயற்சி செய்யவும் வேண்டு கிறேன்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தபாதிரி கோவில்களை அடி யோடு பகிஷ்கரிக்கப் பிரசாரம் பண் ணுவோமானல், கோவில்களுக்கு வரும்படி இல்லாமல் போய்விடும். வரும்படி இல்லாமற்போனல் எந்தப் பார்ப்பனர்களும் கோவில்களைத் திரு ம்பிப் பார்க்கமாட்டார்கள். கோவில் களும் பாழடைந்து போகும். அத னல் மக்களுடைய மூட நம்பிக்கைக ளும் ஒழியுமென்பதில் சிறிதும் ஆட் சேபனையில்லை.

ஆகையால், வைதீகர்கள் கொட் டத்தை யடக்கவும், தாழ்த்தப்பட்ட வர்களும், மற்றய ஏழை மக்களும் சுகப்படவும்வேண்டுமானல் வைதீகர் கள், காங்கிரஸ்காரர்கள், பணக்காரர் கள், கோவில்கள் இவர்களின் செல் வாக்கை ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகிறோம்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னவென்றால்; முதலில் தாழ்த் தப் பட்டவர்கள் ஏழைகள்; ஆகை யால் அவர்களிடமிருந்து வரும்படி யை எதிர்பார்க்க முடியாது. இரண் டாவது தாழ்த்தப்பட்டவர்கள் பெரு ம்பாலும் கருமை நிறமுள்ளவர்கள். பார்ப்பன சகோதரர்கள் பெரும்பா லும் வெள்ளைநிறமுடையவர்கள். எப்பொழுதுமே வெள்ளை கருப்பின் மேல் காதல் கொள்ளும்; கறுப்பு வெ ள்ளையின்மேல் காதல்கொள்ளும். இந்த உண்மையை. அமெரிக்காவில் உள்ள நீக்ரோவர்களின்மேல், வெள் ளைக்காரப் பெண்கள் காதல் கொள் ளுவதையும், நீக்ரோவர்கள் வெள்ளை க்காரப் பெண்களின்மேல் காதல் கொள்ளுவதையும் நாம் அடிக்கடி கேள்விப்படுவதனல் அறியலாம். இந்தக் காரணத்தை ஒட்டித்தான், நமது நாட்டு வெள்ளையர்களான பார் ப்பனர்கள், தாங்கள் பெண்டுபிள்ளை களின் செல்லுமிடமாகிய கோயில் களுக்குள் தாழ்த்தப்பட்டவர்களையும் அனுமதிக்க அஞ்சுகிருர்கள். மேற் படி காரியங்களுக்குக் கோயில்கள் இடமாக இருக்கின்றன என்பது அவர்களுக்குத் தெரியுமல்லவா?

விபசாரத் தடைச் சட்டம்.

இம்மாதம் முதல் தேதியிலிருந்து விபசாரத் தடைச் சட்டம் சென்னை நகரில் அமுலுக்கு நடை முறையில் வந்ததறியசந்தோஷிக்கிறோம். எனினு ம் சென்னைநகரில்மட்டிலேனும் விப சாரத்தை ஒழிக்க ஒருப்பட்ட மாகா ண சர்க்கார் அவ்விதம் மீட்கப்பட்ட அனாதைச் சிறுமிகளைப் பாது காக்க அல்லது பராமரிக்க ஒரு விதி ஏற் படுத்த பொருளுதவி யளிக்க மறுத் தது விசனிக்கத் தக்கதே. ஏழை அனாதைச் சிறுமிகள் பல காரணங்க ளால் தெரிந்தோ தெரியாமலோ பிற ருடைய ஏமாற்று வார்த்தைகளை நம் பியோ, இத்தகைய இழிவான வெட் கக் கேடான. துக்ககரமான விபசா ரத்திலீடுபடுகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் எவ்வகை ஆதரவும் அற்றவர்கள், சிலர் தந்தையோடோ அன்றி தாயோடு இருக்கலாம். ஆனல் அவர்கள் இப்பெண்ணின் வருமானத்தைக் கொண்டே ஜீவியத் தை நடத்துபவர்களாயிருக்கலாம். ஆகையால் அவர்களுக்கு முன்னெச் சரிக்கை செய்து பின்னர் சட்டப்படி செய்வதே மேலானதாகும். இல்லை யேல் திடீரென அவர்கள் தங்கள் விடுதிகளினின்றும் வெளியேற்றப் படுவார்களேயானல் அவர்கள் எவ் வித ஆதரவு மின்றி தவிக்க நேரிடுவ தன்றி, அவர்கள் சீர்திருத்தப்பட மார்க்கமின்றிஇரகசியமாகத் தங்கள் பழைய தொழிலையே நகரத்தின் வேறு இடங்களில் மறைவாக நடத்த இட மேற்பட்டு விடுகிறது. சென்னை யிலிருந்து கிடைக்கும் செய்திகளி லிருந்து இது உண்மையென யூகிக்க இடமிருக்கிறது. பரிதாபகரமான அப்பெண்களின் நிலையைக் கண்டு சில கனவான்கள் அவர்களை ஆதரிக் கவோ அன்றி பராமரிக்கவோ எண் ணம் கொள்கிருர்க ளென்றல் பகி ரங்கமாக இருந்த விபசாரம் இப் போது ரகசியமாய் நடைபெற ஏது வாகிறதென்றே தான் யூகிக்க இட மிருக்கிறது. இந்நிலை யுண்டாகா வாறு தடுக்கப்பட வேண்டியதவசிய மாகும்.

திருமதி முத்துலட்சுமி அம்மாள் இது சம்பந்தமாய் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்திகளிலிருந்து இதன் உண்மை முழுவதும் அறியக் கிடக்கிறதுந் தவிர சென்னை உஷார் சங்கத்தார் இது சம்பந்தமாய் எடுத்து வரும் முயற்சியைப்பாராட்டுகிறோம். விபரமறியாச்சிறு பெண்கள் மீட்கப் பட வேண்டுவது எவ்வளவு அவசி யமோ அதை விட அவர்களைச் சீர் திருத்த மடையச் செய்ய வேண்டு வதும் நல்வழியில் நடக்கச் செய்வது மாகும். ஆகையால் இதற்காகவேலை செய்யும் சமூக ஊழியர்களோ அன்றி ஸ்தாபனங்களோ இதைக் கவனத் தில் வைக்க வேண்டுகிறோம். பகி ரங்கமாக நடைபெறும் இந்த விபசா ரத்தைத் தவிர இரகசியமாக அநேக இடங்களில் பல தனிப்பட்ட நபர்க ளும், ஸ்தாபனங்களும் விபசாரத் தை மறை முகமாகவும், வேறு ஏமாற்று பெயர்களோடும் நடந்து வருகின்றனவென்பதையும் அவை களைக் கண்டு பிடிக்க வேண்டுவதவசி யம் என்பதையும் இங்கு ஞாபகப் படுத்துகிறோம்.

ஒரு சில பெண்கள் செய்து வரும் இந்த இழிவான தொழிலானது பெண் சமூகத்தையே மாசுரச் செய் கிறது. கேவலமும், அவமானமும், வெட்கமும், துக்கமும் நிறைந்த இவ் வாழ்க்கையினின்று பெண்கள் மீட் கப் பட வேண்டியது, விலக்கப்பட வேண்டியது மிக. மிக இன்றியமை யாததாகும். சமூக மேன்மையையும் சமூக க்ஷேமத்தையும், நலத்தையும் விரும்புகிற மக்களுக்கு இதை விட மேலான உபயோகமான ஊழியம் என் னஇருக்க முடியும்- கடவுள் என்று சொல்லி கல்லுக்கும், மண்ணுக்கும், மரத்துக்கும், மதம், பழக்கம் வழக் கம் என்று சொல்லி தேர் திருவிழா வேடிக்கை முதலியவற்றிற்கும் பெரு வாரியான பொருளை வாரி யிறைக் கும் நம் மக்கள் இத்தகைய அறிவும் ஆதரவும் அற்ற பெண்களைக் காக்க ஓர் மீட்சி விடுதி ஏற்படுத்த தாராள மாய் பொருளுதவி செய்தல் சால வும் பொருந்தும்.

வரதட்சணையால் வந்த கேடு.

தாங்கெயிலில் வசிக்கும், பாபு தி னேஷ் சந்திர கோஷ் மாஜி. காம கிராமத்தைச் சேர்ந்த பிரேந்திரநாத் சௌத்திரிஎன்பாரின் சகோதரி சாவுத்திரிதேவி என்பாளை தனது மகன் ஜோதிஷ் சந்திர கோஷுக்கு மணஞ்செய்ய ஒப்புக்கொண்டு வர தட்சிணையாக சில தொகைப்பெற்று பாக்கித் தொகையைச் சீக்கிரம் தர வேண்டு மென்று சொல்லிப்போய் விட்டான். சாவித்திரி தேவி என்ற பெண் தனது சகோதரர் தன்பொ ருட்டு வரதட்சிணைக்குப் பணம் சேகரிக்கப் படுங்கஷ்டத்தைச் சகிக் காது திராவகம் குடித்துத் தற்கொலை புரிந்து கொண்டாள். மாண்ட சிறு மியின் சகோதரர் வரதட்சிணையாகக் கொடுத்த பணத்தைக் கேட்கக் கொ டுக்காததால் வழக்குத் தொடரப்பட்டு திரு எஸ். கே. சாட்டர்ஜி ஐ. சி. எஸ் என்பவரால் மோசஞ் செய்ததாகச் சம்மன் பிறப்பிக்கப் பட்டுக்கைது செய்யப்பட்டது. (தி - ன்

"சன்மார்க்கன்"

நமது சன்மார்க்கனுக்குச் சென்ற பங்குனி மாதத்தோ டன் ஓராண்டு இனிது நிறைவேறி இரண்டாம் ஆண்டு தொடங்கி விட் டது. முதலாண்டில் "சன்மார்க்கன்" தனது கடமையைச் செய்து வந்த தைக்காட்டிலும் இரண்டாம் ஆண்டில் மிகச்சிறிய கட்டுரைகளுடன் பத்திரி கை வெளிவரக் கூடுமென்று வாசக நேயர்களுக்கு நமது வாசக நேயர் களின் ஆதரவைப்பெற்றே பத்திரி கை நடைபெறவேண்டியிருப்பதால், அன்பர்கள் கருணைகூர்ந்து தங்கள்சந் தாவை அனுப்பிவைத்து இரண்டாவ தாண்டுப் பத்திரிக்கையையும் ஆதரி த்துவருவீர்களென்று நம்புகின்றேன்

குறிப்பு:—சித்திரை மாதப்பத்திரி கை வழக்கம் போல் வெளியிடப் படும் நாளில், அசம்பாவிதமான காலதாமத வேற்பட்டமையினல் அடுத்த வைகாசி இதழுடன் சேர்த் துத்தான் அது வெளியிடப்பெறும். தாமதத்துக்கு வாசகநேயர்கள் பொ றுத்தருள்க. என் ஆசியர் சுவாமிசிவ நேசம். அவர்கள் எழுதுகிறர்.

திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும்

குறளைப்பற்றிப்பல பண்டிதர்களுக்கேற்பட்ட
சந்தேக நிவர்த்தி நூல்

திருக்குறளாசிரியர் திருவள்ளுவரல்லர்.

பரிமேலழகர் உரை பல பொருந்தாதனவைகளே

இந்நூலின்கண் திருக்குறளாசிரியர் ஜைனர் (சமணர்) என் பதையும், திருக்குறள் கடவுள் வாழ்த்துப்பத்தும் அருகக்கடவு ளற்றன்மையைச் சார்ந்தனவென்பதையும், மற்றக்குறட்பாக்களும் ஜைன சமய சித்தாந்தம் நிறையப்பெற்றதென்பதையும், தொல் காப்பியர், அகத்தியர், இறையனரகப்பொருளாசிரியர் ஆகியவர் களும் ஜைனர்களே என்பதையும் விள்க்கும் ஓர் ஆராய்ச்சி மிகுந்த நூல். விலை ரூபா 2—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

கிடைக்குமிடங்கள்:—

தி. அ. அனந்தநாத நயினர் & சன்ஸ்
பட்டு ஜவுளி வியாபாரம்,
ஆடிசன்பேட்டை, காஞ்சீபுரம்.

தி. ஆதிநயினர்,
21, பாரிஷ் வெங்கடாஜலய்யர் தெரு,
ஜி. டி. சென்னை.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

வில் கூறிய உரிமைகளைப் பொறுத்த மட்டில் சுயமரியாதை மணம் செல்லத்தக்கதல்ல. அவ்வாறாயின் அதன் பொருள்தான் என்ன? அதாவது கணவனுக்கும், மனைவிக்கும் விவாகரத்து தம்பதியுரிமையை மீண்டும் பெறல் (Restitution of conjugal rights) மற்றும் மண ஒப்பந்தத்திற்குமாறாக இயற்றும் பல குற்றங்கள் ஆகிய இவைகளைப்பற்றி நடக்கும் விவகாரங்களிலும் வழக்குகளிலும் யாராவது ஒருவர் தம் இருவருக்கும் சட்டத்திற்குச்சரியான மணம் ஏற்படவில்லையென்று வழக்காடினால் மற்றவர் அதைமறுக்கத்தம் இருவருக்கும் தம்ஜாதியின் வழக்கப்படியாவது அல்லது சாத்திர முறைப்படி சடங்குகளுடனாவது மணம் நடந்தேறியுள்ளது என்னும் விஷயத்தை நிச்சயமாக நிரூபிக்கவேண்டும். ஆனால் சுயமரியாதைத்திருமணம் சடங்குகளும் மற்ற சாதி வழக்க ஆசாரங்களும்இல்லாமல்நடத்தலால் மேற்கூறிய உரிமைகளைத் தம்பதிகளுள் ஒருவரும் கையாள முடியாதபடிபோய்விடும் ஆகையால் இதைப்பொறுத்தமட்டில் தற்கால சுயமரியாதைத்திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பது திண்ணம்.

ஆனால் இரண்டாவது கூறிய ஏனைய உரிமைகளைப் பொறுத்தமட்டில் இடைவிடாது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தேக சம்பந்தம் வைத்துக்கொண்டு இருந்து கணவன் மனைவிபோல் தம்தம் நடத்தையில் காட்டுவதன்றி ஊரிலுள்ளோரால் அவ்வாறு கருதப்பட்டும் மதிக்கப்பட்டும் வரின் சட்டமானது நிச்சயமாக அவர்கள் இருவருக்கும் சட்டத்திற்கேற்ற திருமணம் நடந்தேறியுள்ளது என்று முடிவு செய்துவிடுகின்றது. நம் சுயமரியாதைத்தம்பதிகள் அனைவரும் மேற்கூறியவாறே நடந்துவருதலால் அவர்கள் ஏனைய உரிமைகளைப்பொறுத்தமட்டில் சட்டப்படி அருகதையுடையவர் ஆவார்கள்.

அவரது திருமணம் சடங்கின்றி ஆற்றப்பட்டிருப்பினும் சட்டமானது அது முழுச்சடங்கோடும் ஆற்றப்பட்டது என்று அனுமானித்து விடுகின்றது (Legal presumption] ஆதலால் இவர்கட்குப் பிறக்கும் குழந்தைகள், வைதீகத்தம்பதிகளின் குழந்தைகளைவிட சட்டத்தைப்பொருத்தமட்டில் ஒருவிதத்திலும் கீழ்ப்பட்டவர் அல்லர். ஆதலால் இந்த உரிமைகளைப்பொருத்தமட்டில் நம் சுயமரியாதைத்திருமணம் சட்டத்திற்கு முழுதும் ஒத்ததாகும். இதற்குச்சில உதாரணங்களும் உண்டு 1913ம் ஆண்டில் தலீப் குவார் வி. எஸ். பத்தி (Dalip Kuar Vs. Fathi 18 I. C. 930) என்னும் ஒருவழக்கு நடந்தது. அதில் ஒரு சீக்கியர் விவாஹரத்துப் பெற்ற வேறொரு பெண்ணை யாதொரு சடங்கின்படிக்கும் கலியாணம் செய்துகொள்ளாமல் தன் மனைவிபோல் தான் இறப்பதற்கு முன் நாலைந்து வருடங்கள் வைத்திருந்தார். அவர் இறந்தபின் அவள் ஏனைய மனைவியருடன் தன் கணவனின் சொத்தில் பாகத்திற்காக வழக்குத்தொடுத்தாள் மேற்கூறிய சட்ட அனுமானத்தின்படி அப்போதிருந்த தலைமை நியாயஸ்தலத்தில் (Chief Court) அந்த பத்தீ என்பவள்லால் குவாரின் மனைவி என்று அங்கீகரிக்கப்பட்டதுமன்றி அவளுக்கு லால் குவாரின் சொத்தில் ஒரு பங்கும் கிடைத்தது. மற்றொரு பிரிவி கவுன்சில் (Privy Council) வழக்கிலும் இக்கருத்து வெளியிடப்பட்டது. தீர்ப்புக்கூறிய சர்பார்ன்ஸ் பீகாக் (Sir Barnes Peaceock) என்பவர் இடைவிடாத தேக சம்பந்தமே இருவரைத்தம்பதி என்று நிர்ணயிக்கச்சாலும் என்று அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். அதுமட்டுமல்ல இந்தியாவில் அநேகமாய் எல்லோரும் காமக்கிழத்தி (Concubine) சர்வசாதாரணமாய் வைத்திருப்பது வழக்கமாதலால் இவ்வாறு அவர்களை கணவன், மனைவி என்று முடிவுகட்டுதல் பொருந்தாது என்று சிலர் கூறியதையும் மறுத்துவிட்டார் இந்நீதிபதி மற்றும் ஒரு பைராகி மகந்தும் தன் இறுதிகாலத்திற்கு எழுமாதத்திற்கு முன் வைத்திருந்த ஒரு பெண்ணையும் அவனது மனைவியாவாள் என்றும் தீர்ப்பாகியுள்ளது. ஆகவே நமது சுயமரியாதைத்திருமணங்கள் அனைத்தும் முழுவதும் சட்டத்திற்கு ஏற்றவையாய் இல்லாவிடினும் மிகவும் முக்கியமான விஷயங்களில் சட்டத்திற்கொத்தவை என்று நாம் இதுவரை சட்டமூலமாகவே தெளிவாக விளக்கியுள்ளோம். ஆனாலும் தம்பதி உரிமைகள் கிடையாவாகையின் இதனால் பொதுவாக கஷ்டப்படுபவர் மனைவியரேயாவர். அவர்களை எந்த நிமிடமும் கணவர்கள் தள்ளிவிடலாம். அம்மனைவியருக்குச் சட்டம் துணைசெய்யாது.

ஆகவே இனி சுயமரியாதைக்கலியாணங்கள் முழுவதும் சட்டத்துக்கொத்ததாகவும் தம்பதிகளுள் இருவரும் சமமான உரிமைகளைப்பெறவும் மேலான முறை என்னவெனின் சடங்குகள் ஒழிந்த சீர்திருத்தமணம் செய்து கொண்டபொதிலும்கூட சிவில் விவாகச்சட்டப்படி Civil Marriage Act) தம் மணங்களைப்பதிவு (Register) செய்துகொள்வதேயாகும். அவ்வாறு செய்து கொள்வதனால் சுயமரியாதை இயக்கக்கொள்கைக்கு யாதொரு பங்கமும் வாராதிருப்பதன்றியில் தம்பதிகள் இருவருக்கும் அந்தச்சட்டத்தில் கொடுத்துள்ள விவாஹ விடுதலைபோன்ற சம உரிமைகளும் வழங்கப்படும் தற்காலம் பதிவுக்கலியாணங்கள் செய்பவர் பிரம்ம சமாஜத்தினரேயாவர். ஆனால் அவர்களும் கூட சில சடங்குகள் செய்கின்றனர். உண்மையிலேயே சுயமரியாதைக்காரர் அந்தச்சடங்கையும் ஒழித்துவிட்டதால் அவர்களைக்காட்டினும் இவர் சிறந்தவரே ஆனால் அம்மணங்கள் பதிவு செய்யப்பட்டுவிடின் அதுவே உத்தமமாகும்.

இதுவரை பதிவு செய்யாது மணந்துகொண்ட தம்பதிகளுக்கு இப்பொழுது இரண்டு வழிகள் உண்டு. ஒன்று சட்டசபையில் அவர்கள் மணங்கள் சட்டப்படி சரியென நிச்சயித்து (Self-respect marriages Validating Act) 'சுயமரியாதைத்திருமணத்தை செல்லவைக்கும் சட்டம்' ஒன்றை நிறைவேற்றுதல் இது தற்கால நிலையில் இயலாத காரியம். மற்றொன்று அதே தம்பதிகள் மறு முறையும் பதிவு செய்து மணம் செய்துகொள்ளுதல். இது சுலபம் சீக்கிரம் செய்துகொள்ளுதல் இயலும். மேற்கூறியபடி சட்டத்துக்கும், சுயமரியாதை இயக்கத்தின் சீர்திருத்த மணத்துக்கும் இருக்கும் சம்பந்தத்தை நனிநோக்கி இரண்டையும் ஒன்றுபடுத்திச் சீர்திருத்தம் உத்தமமான வழியில் இயற்றும் ஆற்றல் கொண்டவர் நம்நாட்டில் எட்டாம் ஆண்டு இனிது எய்திய "குடி அரசு" என்னும் குண அரசினும் மற்றியாரே. நீடூழிவாழ்க "குடி அரசு" என்று நித்தமும் அடி முரசு"

—

குடி அரசின் எட்டாம் ஆண்டின் வாழ்த்துப்பாக்கள்.

சாரதாமணிமாலை 1] [மணி 1.

(பா. ஆதிமூலன்.)

1\. தண்ணிய அருளை தலையாகக்கொண்டு
தகுபொருளனைத்தையுந்தந்து
எண்ணிய ஆண்டு எழுமே நிறைந்த
"எழில்நிகழ் எம்மரும் பொருளே
பண்ணியமாய் பலபொருளனைத்தும்
பரிந்தருள் செய்த நற்றாயே
நண்ணிய எட்டாம் ஆண்டினில் நீயும்
எவை எவை ஈந்திடுவாயோ!

2\. சாதியும் மதமும் சமயமும் பொல்லாச்
சாத்திரக்குப்பையும் சீத்தோய்!
நீதியும் பொருளும் நித்திய வாழ்வை
நிலையென நிறுத்திய நிருபா!
ஓதியபொருள் உளத்திருத்தென்னை
உன்வசமாக்கியதென்னே
நீதியாய் நீயும் நீணிலமதனில்
நிலைபெற நீடுநிற்குகவே

3\. மாடெனமதித்து மடந்தையர் தம்மை
மங்கலை செய்தவர் நினது
ஏடது ஒன்றை எமுறப்படித்து
எங்கையர் யாவரும் சமமாய்
நாடது ஓங்க நல்வழிகாட்டி
நற்குணப்படுத்திய நலமே!
நீடுருவாக இந்நீர் நிரை உலகில்
நிற்குக நிற்குக நிலையே!

—

சுயமரியாதை வாலிபர் சங்கம் கும்பகோணம்.

ஷெ சங்கத்தின் ஜெனரல் பாடிமீட்டிங்கு 17-4-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு புதுவைமுரசு ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள்தலைமையில் நடைபெற்றது. அதில் சங்கத்தின்கட்டிடநிர்மாணத்திற்காக ஒரு "லாட்ரிசீட்டு" நடத்துவதாகயேற்கனவேசெய்யப்பட்டிருந்த தீர்மானத்தை ரத்துசெய்துவிட்டுநம் மியக்க அபிமானிகளிடத்தில் நன்கொடைவசூலித்து ஷெசங்கத்தின் கட்டிடத்தைக்கட்டிமுடிக்க வேண்டுமென்பதாக எல்லோராலும்தீர்மானிக்கப்பட்டது. ஷெமீட்டிங்குக்குவந்திருந்த திருவாளர். எ. எம். கருப்பண்ணசாமி அவர்கள் ரூ 50-ம், திருவாளர். எ. குப்புசாமிஅவர்கள் ரூ 50-ம், திருவாளர். டி.எஸ். கோவிந்தசாமி அவர்கள் ரூ 50-ம், சங்கத்தலைவர் திரு. கே. கே. நீலமேகம்அவர்கள் ரூ 100-ம் நன்கொடையளிப்பதாக ஒப்புக்கொண்டு கையெழுத்துச்செய்தார்கள். இவர்களைத்தவிர மற்றுமுள்ள இதரபிரமுகர்களிடத்திலும் சென்றுதுகைவசூலிப்பதாக தீர்மானிக்கப்பட்டபிறகு மீட்டிங்குமுடிவுற்றது. பிறகுஒரு டீபார்டிநடத்தப்பட்டு குரூப்போட்டோவும்எடுக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மான் சமர்தம ஆட்சியின் தலைவர் தோழர் ஈ. வெ. ரா அவர்கள் தம் மந்திரியாம் தோழர் இராமநாதன் எம். ஏ பி. எல். அவர்களுடன் குவலயமெங்கும் போய் ஆங்காங்குள்ள குடி அரசின் தன்மையை ஆய்ந்து வர இத் தள்ளாத கிழப் பருவத்தில் மக்களுக்குச் சேவை செய்யவே நான் பிறந்திருக்கிறேன். அதற்காகவே நான் உயிர் வாழ்ந்திருக்கிறேன் என்று எண்ணி, தம் உடலுக்குற்ற பிணியையும், பொருட் செலவையும் பொருட்படுத்தாது மக்கட்கு சேவை செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தையுன்னி மகிழ்ந்து தம் நரம்புகளெல்லாம் இரும்பென முருக்கேறி வாலிப உணர்ச்சி ததும்ப பதினுயிரக்கணக்கான மைல்கள் கப்பலிலும், ரயிலிலும் பிரயாணம் செய்து வருகிறார்.

குடி அரசு நிலை பெற விடாது தடுத்துப் பெரும் இடையூரியற்றுவது, மனிதனை மனிதன் மதியாது வாழும் மாயமும், பெண்ணைக் கண்ணெனக் கருதாத கீழ்மைப் படுத்தும் ஆணுதிக்கமும், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றெண்ணி கொடுமை பல புரியும் ஜாதிப்பித்தும், சாத்திரப் பைத்தியமும், கோத்திரக் கொடுமையும், முதலாளி தொழிலாளி ஆண் பெண் என்ற வேற்றுமை நோய்களும் தீண்டாமைப் பேயும், மதமெனும் மாய்கையால் மருண்டு, கல்லும், மண்ணும் நம்மைச் செம்மையாய்க் காக்கும் கருணாகரக் கடவுள் எனக் கருதிப் பசியால், நோயால் நலிவுற்று சுத்த தண்ணீரும் தக்க மருந்தும் கிடையாது தத்தளித்து மாளும் கோடானு கோடி மக்களை கண்ணெடுத்தும் பாராது கல்லுருவங்களின் மேல் பாலும், தேனும், நெய்யும் ஊற்றி பட்டாடை புனைந்து பார்க்கும் முட்டாள் தனத்தை வளர்க்கும் மதமும் என்றும் இவைகள் உலகில் என்றும் நிலைபெற்று நிற்க ஆதரவாய் நிற்கும் பகுத்தறிவின்மை, மூட நம்பிக்கை என்னும் புல்லுருவிகளே என்பதையும் பொது வாழ்க்கையில் தாம் நீண்ட நாள் ஈடுபட்ட அனுபவத்தின் பயனாய்க் கண்டு மொழிந்த தோழர் ஈ. வெ. ரா. அவர்களின் அமிர்த மொழிகளைக் கடைபிடித்து குடிஅரசின் பகைவர்களின் முன்னே, பல அன்பர்களின் துணையுடன் பகைமையை யொழிக்க பலவாறு முயன்று வெற்றி மாலை சூடி வருகின்றார்.

"குடி அரசு" தோன்றிய இச்சுருங்கியகாலத்திலே பல இன்னல்களுக்கிடையே மிகுந்த தொண்டுகளாற்றியிருக்கிறது. இப்பொழுது காந்திய மதம் அவதார புருஷர், மகாத்மா என்ற பெயர்களால் மக்களை மருட்டி கிளர்ச்சி செய்யும் சுயராஜ்யம் என்னும் போலிக் கூப்பாடு, முதலாளி ஆதிக்கத்தையும், பார்ப்பனீய அரசாட்சியையும் நிலை நாட்டவே பாடுபடுகிறதென்பதையும், மக்கள் அறிவு விடுதலை பெற்றாலன்றி தேசிய விடுதலை இல்லை என்பதையும் தெளிவு படுத்தி விட்டது. அவ்வாறு பெற்றாலும் பயனில்லையென்பதையும் சொத்துரிமை, மறுமண உரிமை. விவாக ரத்துரிமை, காதல் மண உரிமை கலப்பு மண உரிமை முதலியன வெல்லாம் பெண்களுக்கு வேண்டுமென்று பெண்ணுலகில் பெரிய விழிப்பை யுண்டாக்கி விட்டது. தங்கள் உரிமையை பெற அஞ்சாது போரிட ஆயிரக்கணக்கான பெண் மக்கள் முன் வந்து விட்டனர். ஆதிதிராவிடர் முதலிய கொடுமைப் படுத்தப் பட்ட மக்கள் தங்கள் உரிமையை அறிந்து தாங்கள் எவர்க்கும் தாழ்ந்தவர்களல்லேம் என்றும் சமத்துவம் நாட்டி கிளர்ச்சி செய்ய தூண்டி விட்டது. ஏழைகளைக் கொள்ளையடித்தே ஒரு சில பணக்காரர்களாய் முதலாளிகளாய் ஆனர்களே யொழிய முன் ஜென்மத்தில் அவர்கள் செய்த புண்ணியத்தினலல்ல என்பதை தொழிலாளிகள் தெளிவாய் உணரும் படி செய்து விட்டது. கோவில், சமய சாத்திரம், சாமி முதலிய பெயர்களை தெளிவாய் உச்சரிக்கப் பயந்த மக்களை யெல்லாம் (சிறுவர்களைக் கூட) அவைகளின் ஆபாசங்களையும் கெடுதிகளையும் கூறி அவைகளனைத்தையும் தைரியமாய்க் கண்டிக்க முன் வரும்படி செய்து விட்டது. ஜாதிப் பித்து தமிழ் நாட்டை விட்டு தலைவிரித் தோடும் படி செய்து விட்டது. எல்லாச் சாதியார்களும் ஒரே தாய் வயிற்றில் உதித்த மக்களைப் போல அளவளாவி ஒன்றாய் வீற்றிருந்துணணும்படி செய்து விட்டது. சுயநலங்கொண்ட தேசியவீரர்களினுள்ளம் திடுக்கிடச் செய்தது. புராணப்பிரசங்கம் புரிந்து மக்கள் கஷ்டப்பட்டு தேடிய பொருள்களை பகற் கொள்ளைக்காரர்களைப்போல் பறித்துக்கொண்டு போகும் புராணிகர்கள் வயிற்றிலிடி விழச்செய்தது பகுத்தறிவை இளமையிற்கல்லும் தமிழ் பண்டிதர்கள் வாயடங்க பாலர்களெல்லாம் பற்பல விநோத வினக்களைப் போடும்படி செய்துவிட்டது. பெண்ணடிமைகொண்ட பேடிகளைமுக்காடிட்டு மூலையிற்பதுங்கும்படி செய்து விட்டது. கலப்பு மணம், காதல் மணம், விதவைமணம் ஏராளமாய் நடக்கும்படி செய்துவிட்டது. கதர் புரட்டுகளையும், ஹிந்திபுரட்டுகளையும், பார்ப்பனீய புரட்டுகளையும் சைவக்கொடுமைகளையும் எல்லோருக்கும் எளிதில் விளக்கிற்று. எதற்கு ஆமாம்போடாமல் எங்கும் ஏன்? எங்கே? எதற்கு? என்ற வினக்கள் போடும்படி செய்துவிட்டது. இன்னும் ஏழாண்டிற்குள் உங்கள் "குடி அரசு" புரிந்த தொண்டுகளை இங்கு எழுத இடம் போதாது.

இது நிற்க சிலர் உங்கள் குடி அரசு இவைகளையெல்லாம் சாதித்துப் பயனென்ன? நீங்கள் கூறும் "சமதர்ம குடி அரசு" பூரணமாய் ஸ்தாபிக்க எத்துணையாண்டுகள் செல்லும். நெடுகிலும் பிரசாரம் பண்ணிக்கொண்டே போவதில் பயனென்ன? "சுவாமி விவேகாநந்தர்" நாம் பல விஷயங்களைப்பற்றி யெண்ணுகிறோம், ஆனல் அவற்றைச்செய்வதில்லை கிளிப்பிள்ளைகளைப்போல் பேசுதல் நமது வழக்கமாய்விட்டது. செயலில்ஒன்றும் நடத்துவதில்லை' என்று கூறியமொழிகளின்படியே பேச்சிலே ஜனங்களை ஏமாற்றிவிடலாம் என்று எண்ணுகிறீர்களோ, முதலாளி ஆதிக்கமும், பணக்காரர் தொல்லையும், அரசாங்கத்தார் கொடுமையும் வைதீகர்களின் ஆர்ப்பாட்டமும் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. ஏழைகள் வருமையினலும் பசியாலும், நோயாலும் இன்னும் பலவற்றாலும் பெரும் இடுக்கணுற்று வர நீங்கள் இவைகளை அழித்து ஏழைகள் இன்பமடைய "சமதர்ம குடிஅரசை" ஸ்திரமாய் நிலைநாட்டி பகைவர்களை நாசஞ்செய்யாது காலந் தாழ்த்துவதுதான் என்னே! எனக் கேட்டுவருகின்றனர்.

குடிஅரசு இயக்கம் காங்கிரஸ் இயக்கம்போன்ற முதலாளிகள் இயக்கமன்று. காந்தியைப்போன்ற அவதாரப்புருடர்களாகிய கடவுளைத்தலைவராகக் கொண்ட இயக்கமன்று. சார்ந்தார்க்கு இப்பொழுது புகழைக் கொடுக்கும் இயக்கமன்று. எம்மியக்கம் ஏழைகளின் இயக்கம், எம்தலைவர் நம்மைப்போன்று சாதாரணமனிதரே. அவரைக்கடவுள் வழிநடத்தவில்லை. பகுத்தறிவின்படியே நடப்பவர் ஓராண்டிற்குள் சுயராஜ்யம் வாங்கித்தந்துவிடுவேன் என்றோ, யான் சுயராஜ்யமடைய இறுதியாக சத்தியாக்கிரகப்போருக்குத்துணிந்து டாண்டி உப்பளமுற்றுகைக்குச்செல்லுகிறேன். வெற்றிபெற்று வாகைமாலைசூடித்தான் ஆச்சிரமம் வருவேன் இன்றேல் டாண்டி கடற்கரையில் பிணமாய் மிதப்பேன் எனக்கூறி முன் கூறியமொழிகளைமறந்து ஆச்சிரமம் புகுந்த தலைவர்களைப் போல் ஏமாற்றுந்தலைவர்களல்ல. தலைவர்கள் எம்மை ஏமாற்ற நாம் ஏமாந்தவர்களுமல்ல. இவ்வியக்கத்திற்கு உழைக்க எல்லோரும் முன் வரமுடியாது, தன்னலமற்ற தியாகிகளே உயிரைத்துரும்பென மதிக்கும் உத்தமர்களே, பொருளை, (ஆண்டவன்) அருளை ஆன்மீக லாபத்தை விரும்பாத ஆன்றோர்களே இதை ஆதரிக்க முடியும். பெண்நலம்பேணும் பெரியோர்களே இவ்வியக்கத்தைப்பற்றிப் பேசக்கூடும் ஜாதிப் பற்றை சமயப்பற்றை துறந்து உற்றோர் உறவினர் அரசாங்கத்தார் கொடுமைகளைப் பொருமையுடன் பொருத்துக்கொள்ளும் பொறுமைசாலிகளே இதைப்போற்றக்கூடும் தன்வலியும் மாற்றான்வலியும் துணைவலியும் எம்தலைவர்கள் நன்கறிவர். தற்சமயம் நமக்கிருக்கும் ஆதரவு நமது இறுதிப்போரை ஆரம்பித்து சமதர்ம ஆட்சியை நிறுவ போதியதாகாது. பகுத்தறிவை நம்பிநம்பி நடக்கும் தலைவர்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராயாது போரிட்டு தோல்வியுற்று கடவுள் தலையில் பாரத்தைப்போடவழியில்லை. மே.லும் இந்தியமக்கள் இன்னும் அதிகமான கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகவேண்டும் அப்பொழுது நமது படைக்குப் போதிய பலமுண்டாகும். இந்தியா அதிகமான தொல்லைகளுக்கு ஆட்படும் நாளே இந்தியா சமத்துவப் போருக்கு பக்குவமான நன்னள். என்று நம்மவர்கள் கூறும்விடை கண்டு அந்தோ! இப்பொழுது மக்கள் படும்பாடு போதாதா? இன்னுமா கஷ்டப்படவேண்டும்? 'படமுடியாதினித்துயரம் பட்டதெல்லாம் போதும்' என்று கூறி உங்களுக்கு இரக்கமுள்ள நெஞ்சல்ல. உங்கள் தலைவர்களுக்கு பைத்தியம்பிடித்துவிட்டதென்கின்றனர். ஆனல் அவர்கள் ருஷியதேசத்தில் நடந்தபின் வரும் சம்பவத்தை ஆராய்ந்தால் நாம்கூறும் உண்மைகண்டு தெளிவடைவார்கள் எனவே 'லிவிங்' ஏஜ்என்றபத்திரிகையில் கண்ட அச்சம்பவத்தை இதன் கீழே வெளியிடுகின்றேன் அன்பர்கள் ஆராய்ந்து தெளிவார்களாக.

"இல்லை; இந்தவழி சரிப்படாது என்று ஓர் இளைஞன் தன் சகோதரனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதைக்கேட்டதும் உரத்துக்கூறினன். இச்சோதரன் மூன்றும் அலெக்சாண்டர் சார் என்னும் ருஷிய சக்கிரவர்த்தியைக் கொலை செய்ய முயன்றதாக மரணதண்டனை விதிக்கப்பட்டவன், பின்னர் அச்சோதரனை கொலையாளிகள் கொலைக்கூடத்திற்கு அழைத்துச்சென்றதும் அந்த இளைஞன் அனுதாப வார்த்தை ஒன்று கூடக்கூறவில்லை. 'இல்லை 'இந்த வழி சரிப்படாது என்று மட்டுமே அவன் கூறினன். அந்த மொழியைக்கேட்டவர்களெல்லாம் பயமடைந்தார்கள். அவ்விளைஞனுக்கு அப்பொழுது வயது பதினேழு. இரண்டு ஆண்டுகட்குப்பின்னர் பஞ்சத்தினல் அல்லற்படும் ருஷியர்களுக்கு உதவி செய்வதற்காக கூடிய ஒரு கமிட்டிக் கூட்டத்தில் நாடுகடத்தப்பட்ட அதே இளைஞன் தோன்றினன். பஞ்சநிவாரணஞ்செய்ய அங்குநடந்த சில சொற்பொழிவுகளைக்கேட்டு அவன் குதித்தெழுந்து வேண்டாம்! வேண்டாம்!! ஏழைகளாகிய எங்களுக்குதவி வேண்டாம் என்று கூவினன் பஞ்சத்திலடிபட்ட எங்களுக்குதவி செய்வது தவறு. அது சார் என்னும் நம்கொடுங்கோலரசனுக்கு உதவிசெய்வதாகும். இன்னும் நாங்கள் அதிக பசியினலும் கொடுங்கோலாட்சியினலும் கஷ்டமுற்றால்தான் இவ்வரசாட்சியை ஒழிக்க அழைக்கும் கூப்பாட்டிற்கு செவிமடு ஒற்றுமையுடனும் உற்சாகத்துடன் குமுமி இவ்வரசியலை ஒழிக்கமுடியுமென்றும் வாதமிட்டான். அவன் ஆத்திரமுடன் மொழிந்த கம்பீரத்தொனியைக்கேட்டு அங்கிருந்தவர்களெல்லாம் நடுங்கிப்போனர்கள். கடைசியில்எல்லோரும் ஆலோசித்து அவனைப்பைத்தியக்காரன் என்று பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள்

இது சுமாராவில் நடந்தது.

சார் சக்கிரவர்த்தியின் கொடுமை மிகுந்தது. வறுமைப்பிணியினால் மக்கள் என்றுமில்லாத் துன்பம் பெற்றனர். நாட்டிலுள்ள மக்கள் தன் கூப்பாட்டிற்கு செவிகொடுப்பார். தன் வார்த்தைகளின்படி நடவாவிடில் விமோசனமில்லை என்று ஜனங்கள் எண்ணுவார் என்று அறிந்தும் 25 ஆண்டுகள் கழிந்த பின்னர் பைத்தியக்காரன் என்று தள்ளப்பட்ட அதே சிறுவன் அதே பிரசங்கமேடையிலேறி கொடிய அந்த அரசாட்சியை ஒழித்து "சமதர்மப்பொதுவுடைமை" இராஜ்ஜியத்தை நிறுவும் வழிகளைத் தெளிவாய் எடுத்துப்போதித்தான், ருஷியர்களெல்லாம் ஒன்றுபட்ட அபிப்பிராயத்துடன் அவன் கருத்துக்களை ஆதரிக்க முன்வந்தனர். 25 ஆண்டுகளாய் நாடு கடத்தப்பட்டு ருஷிய அறிஞர்களால் பைத்தியக்காரன் என எண்ணப்பட்டு நாடோறும் உயிருக்கு அபாயத்தை எதிர்பார்த்து இரகசிய முயற்சிகள் செய்துகொண்டு காலங்கழித்த ஒரு சாதாரணமனிதனே ருஷியதேசத்தின் தெய்வமாக போற்றப்பட்டார்.

"ஞாலங்கருதினும் கைகூடும் காலங் கருதி இடத்தாற் செயின்"

என்ற வள்ளுவர் மொழியைக் கடைப்பிடித்து ருஷிய தேசத்து ஸார் சக்கிரவர்த்தியின் கொடுங்கோன்மையை ஒழித்து சமதர்ம ஆட்சியை நிறுவிய இம்மகான் லெனின் என்னும் பெரியாராவர். சந்தர்ப்பமும், சௌகரியமுமே அவருடைய மதம் (சமயம்) அவருடைய கட்சி அமைப்பு முழுவதையும் மதங்களுக்கு விரோதமாய்த் திருப்பினர். கடவுளை "பொது உடைமை" ராஜ்யத்திற்குப் பெரும் விரோதியான பிசாசு என்று கூறினர். தேச விடுதலைக்கு தடையாயிருப்பது மதமென்றறிந்து எல்லா மதக்கோட்பாடுகளையும் அவர் பாரபட்சமின்றி தாக்கினர். பக்தி, கலை, கல்வி என்னும் பல்லாவற்றையும் அவர் பலிகொடுத்தார்"

எனவே சமதர்ம ஆட்சியை விரும்பும் யாங்களும் நம் நாட்டிலே அதிகமான பஞ்சமும், புரோகிதராட்சியின் கொடுமையும் முதலாளிகளின் இம்சையும், அடக்கு முறைகளும் துன்பங்களும் அதிகரிக்கப்பட்டு மக்கள் தாங்கமுடியா அல்லற்படும்பொழுதே எங்கள் தலைவர்கள் இறுதியாக யுத்தம் தொடுக்க இந்திய மக்களை அழைக்கும் நாள். அந்நாள் எவரும் எங்கள் அழைப்பிற்கு மறுக்காது யுத்த சன்னத்தராய் ஒற்றுமையாய் கூடிவரும் நன்னாள். இதனிடையே யாங்கள் [illegible] பாதைகளை செம்மைப்படுத்தியும் ஆயுதங்களையும் மற்றும் யுத்த முஸ்தீப்புகளையும் செய்து கொண்டிருக்கின்றோம். பக்குவமான காலம் வந்ததும் சுயமரியாதை வெடிகுண்டு உலகதிர எதிரிகள் மீது பாயும். எங்கள் போரில் தோல்வியடையா. வெற்றியை குருக்ஷேத்திரத்தில் காணுவோம்.

நிற்க இவ்வாண்டிலே குடி அரசுக் கொள்கையைப் பின்பற்றி யுத்தமுஸ்தீப்பு செய்து நாகர்கோவிலில் ஏற்றப்போகும் சமதர்மக் கொடியின் மேல் கொண்ட வெறுப்பினாலும் குடி அரசின் அதிதீவிரக்கொள்கைகள் (தீர்மானங்கள் மூலமாயும் பல புதிய எதிரிகள் தோன்றி குடி அரசை ஒழித்துவிட பலாத்காரத்தாலோ, கடவுள் பேராலோ, தேசியத்தின் பேராலோ முன்வரினும் வருவர். ரப்பர் பந்தை அடிக்க அடிக்க அதிக உயரமாய் எழுவது போல் எதிர்ப்புத்தோன்றத்தோன்ற நம்குடி அரசுக்கொள்கைகள் பரவும் என்பது நிச்சயமேயானாலும் பல் வேறு துறைகளில் புகுந்து உங்கள் "குடி அரசு" செழிக்க அதிதீவிரமாய் பாடுபட முன்வருவீர்களாக. என்றுமில்லாத முறையில் குடி அரசு மக்கள் ஆதரவைப் பெறும்படி செய்வீர்களாக.

தனக்குரிய பல்வேறு தொண்டுகளுக்கிடையே "குடி அரசு" இவ்வாண்டிலே தன் கொள்கைகளை [illegible] உள்ளத்தில் ஏற்றிவிடுவதுடன், மக்களைச் சமதருமப்போருக்குச் சரியான முறையில் பயிற்ற ஒரு "பகுத்தறிவு லைப்ஸ் கூல்" "சுயமரியாதைப் புத்தக நிலையம்" "குடி அரசு கொள்கைகளை புத்தக ரூபமாய் வெளியிடும் ஒரு [illegible]" விஸ்தாரஞ் செய்யப்பட்ட அல்லது விதவைகளாயிருப்போரான பெண்களுக்கும் [illegible] விரும்பும் கன்னியர் சேர்ந்தும் ஒரு நிலையம் நிறுவி அங்குவந்த பெண்களுக்குக் கல்வி, கைத்தொழில், சங்கீதம் முதலியன கற்பித்து அவர்கள் விரும்பும் கணவர்களைப் பொறுக்கச்செய்வது. நமது இயக்கத்தை அகில இந்திய இயக்கமாக்க ஒரு ஆங்கிலப் பத்திரிகையும், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி முதலிய பாஷைகளில் மாதப்பத்திரிகைகளும் ஜில்லா தாலூகா கிராமங்கள் தோறும் கிளைச்சபைகளும் நல்ல [illegible] நிலையமும் நிறுவி போதிய உறுப்பினர்களையும் சேர்த்து போதிய பணி புரியுமென்று நம்புகிறேன்.

தோழர்களே! ஆண்டவன் வலி, அருள்வலி, பொருள் வலி முதலிய பல் வலிகொண்டு இவ்வருமைக் "குடி அரசை" ஒழித்துவிட பெரிய ஆத்திகப் பித்தரெல்லாம் கூடி எதிர்த்து அறப்போர் புரிய முன்வந்தபொழுது உங்கள் குடி அரசுக்கோமான் சற்றும் சிரம்துளங்காது குடி அரசுக்கொள்கை நாட்டுக்கு நலம் பயக்கும் தன்மையுடையதாயின் எவரும் அதை அழித்தல் முடியாது. ஒருசில மக்களால் அக்கொள்கைகளை ஒழித்துவிடக் கூடியதாயின் அக்கொள்கை நாட்டிற்கோ, மக்களுக்கோ நன்மை நல்க வல்லதன்று. நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயக்க முடியாத கொள்கையும், இயக்கமும் அழிந்து போகட்டும். அதைப்பற்றி கவலையில்லை என்று நாலாண்டிற்குமுன் மொழிந்த கம்பீரத்தொனி இன்னும் என் செவியில் ஒலித்துக்கொண்டிருக்கிறது, நீங்களும் அம்மொழிகளை மறந்திருக்க மாட்டீர்களென நம்புகிறேன். எதிரிகளின் எதிர்ப்புக்கும், சூட்சிக்கும் ஓர் சிறிது தோல்வியுறாது எதிர்ப்புத்தோன்றத் தோன்ற பலம்பெற்று மிளிரும் குடி அரசுக் கொள்கைகள் அளவிறந்த வெற்றியுடனே இன்றுவரைப் பொலிவுற்று விளங்கி வருவதே குடி அரசின் இயக்கம் உயிருள்ள இயக்கம் என்பதை நிரூபித்துக்காட்டுகிறது.

குடி அரசின் கொள்கையாகிய உங்கள் பகுத்தறிவியக்கத்தை அழித்துப்புதைத்து உங்களெல்லோரையும் அறிவற்ற மாக்களாக்க வேண்டுமென்பதே குடி அரசின் எதிரிகள் நோக்கம். அன்னார் நோக்கிற்கு இடங்கொடுக்கப் போகின்றீர்களா? அவர்கள் காட்டும் தேசத்துரோகிகள், நாஸ்திகர்கள் என்னும் பூச்சாண்டிகண்டு கலங்கப்போகின்றீர்களா? பாரதியார் கூறியபடி "எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே, பொய்யும்ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே" என்ற பாடலை முழக்கி அஞ்சாது ஆராய்ந்து கடந்த எழாண்டாய் உங்கள் சமத்வம் நாடி பேருழியம் புரிந்து வருவதையும் இனி அது ஆற்றப்போகும் தொண்டினையுமுன்னி அதன் முழுவெற்றிக்காகவும் அதிகம், அதிகம் வீரியாவரும் உழைக்க முன்வருவீர்களாக.

இப்புத்தாண்டில் உங்கள் குடி அரசு இயக்கம் குமரி முதல் இமயம் வரைப்பரவ போதிய ஊக்கமுடன் வேலை செய்ய—எல்லாம் வல்ல இறைவனையல்ல—உங்களையே மிக அன்புடன் வேண்டிக்கொண்டு இக்கட்டுரையை முடித்துக்கொள்கின்றேன்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் ராமராஜ்யத்தை கண்டித்து தற்கால சமதர்ம ராஜ்யத்தை ஆதரிக்கின்றது. இதுவொன்றே சுயமரியாதை இயக்கத்தை மேம்படச் செய்யுமென்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் பல சரித்திர காரணங்களால் [Historic causes] சுயமரியாதை இயக்கம், இன்னும் அரசியல் துறையில் நுழையாமல் இன்னும் சமூக சீர்திருத்த இயக்கமாகவே இருந்து வருகின்றமையாலேயே இதைக் குறையென்று நாம் சொல்லவரவில்லை. ஆனால் நமது 35 கோடி மக்களும் அவர்களில் அடங்கிய 6 கோடி தாழ்த்தப்பட்டோரும், உலகில் சரிசமத்துவம் பெறவேண்டுமானால், சுயமரியாதை இயக்கம், அரசியல் துறையில் சமதர்மத்தை ஆதரித்தல் அவசியமாகும். இது இந்த இயக்கத்தின் இனிவரும் நிலைமையைச் சார்ந்தது. ஜாதி மத வித்தியாசங்கள் சில பிராணிகளுக்குகொடுக்கும் விஷமும் உண்டானது போல, மனித குலத்தில் உண்டாயின. இவை போகவேண்டியது அவசியமே. ஆனால் பசியும் பிணியும் மக்களை விட்டுத்தொலையவேண்டியது எல்லாவித சீர்திருத்தத்தைக்காட்டிலும் சிறந்ததாகையால் அதனைப்போக்க சமதர்ம அரசை ஆதரிக்கவேண்டும். உயிர்கள் சிறுகச் சிறுகப் பெருகுமாப்போல், சுயமரியாதை இயக்கமும், இனிவருங்காலத்தில் பூரண சமதர்மத்தைத் தழுவுமென்பதற்கு ஐயமில்லை. இந்திய உலகிற்கும் அதில் அடங்கியுள்ள கோடான கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஆதரவாக நிற்கும் இயக்கம் இதுவொன்றே. இதனது தற்காலக்குறுகிய பெயரை மாற்றி சமதர்ம இயக்கமென வழங்கும் காலம் கிட்டியதென்றே எண்ணவேண்டி வருகிறது. பல பக்கங்களிலிருந்து சமதர்ம சங்கங்கள், கிளைத்துவருவதும், இதற்கு அறிகுறியேயாகும். ஒரு காலத்தில் சமதர்ம ராஜ்யம் உலகமெங்கும் பரவுமென்பது எதிர்கால சம்பவம். அந்த சம்பவத்திற்கு வேரூன்றி வரும் சுயமரியாதை இயக்கம், அந்த சமதர்ம இயக்கமாகவே புத்துயிர் கொள்ளுமென்பதும் சகலருடைய கோரிக்கையாகும்.

சிறிய வித்திலிருந்து பெரிய ஆலவிருட்சம் வளர்ந்தது போல் இந்த சுயமரியாதை இன்று தழைத்தோங்கி வளர்ந்து இந்தியா முழுமையுமே கவரச் செய்யும் போல் காண்கிறது. இவ்வறிய பெரிய நிகழ்ச்சியினை உண்டாக்கிய நமது அருமைத்தோழர்களாகிய இராமசாமி, இராமநாதன் இவர்களுக்கும், மற்றுமுள்ள பெரியோர்களுக்கும், சிறியோர்களுக்கும் தமிழ் நாட்டு மக்களாகிய நாம் எக்காலமும் நன்றிபாராட்டக்கடமைப்பட்டுள்ளோம். அந்தக்கடமையை செலுத்தவேண்டுமானால் அவர்களுடைய ஆழ்ந்த கோரிக்கைகளை சோரவிடாமல், உலகில் நிரம்ப நிலவும்படி முயற்சிக்கவேண்டும்.

சுயமரியாதை வேண்டுமானால், 36 கோடி மக்களுக்கும் சமதர்ம ஆட்சி புரிய, ஆதிக்கம் ஏற்படவேண்டும். இந்த சுயஆட்சி ஏற்படாமல், சுயமரியாதைக்கு எவனும் பாத்திரமாகான், சுயஆட்சி இல்லாதவன் அடிமையே அல்லாது சுயமரியாதை உடையவனாகான். பொருளாதார விற்பன்னராகிய கோல் சொல்லுகின்றார், மனிதனுக்கு வேண்டியது செல்வமல்ல, ஜாதியுமல்ல, மதமும் அல்ல, சுதந்திரமேவேண்டும். அந்த சுதந்திரம் எத்தகையதென்றால், மத வித்தியாசம், ஜாதி வித்தியாசம், பொருளாதார வித்தியாசம் இல்லாத ஆட்சிதான், சுயமரியாதை அதாவது சமதர்ம ஆட்சியேயாகும். யாவர் உள்ளத்திலும் சமதர்மம் துலங்குமாறு உழைத்துவருவோமாக!!!

ரோஜா முத்தையா

மோட்டாரிலும், ஜாதி வித்தியாசம்.

சேலம் ஜில்லாவைச்சேர்ந்த பச்சபட்டி முனிசிபல் எலிமெண்டரி ஆதிதிராவிட பாடசாலை உபாத்தியாயர் திரு. எஸ், பெரியதம்பி அவர்கள் சித்திரசாவடி மோட்டார் டிரைவர் செய்த அக்கிரமத்தைப்பற்றி கீழ்க்கண்ட கடிதம் எழுதியுள்ளார். அதை சேலம் ஜில்லா போர்டு தலைவரும், மற்ற உத்தியோகஸ்தர்களும் கவனித்து ஷை டிரைவரின்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுகிறோம். ப—ர்.

பச்சபட்டி முனிசிபல் எலிமெண்டரி ஆதிதிராவிட பாடசாலை உபாத்தியாயராகியநான் 21-1-32 காலை பதினேறு மணிக்கு காடையாம்பேட்டை கிராமத்திற்குப் போவதற்காக என்பெண்சாதி பிள்ளைகள் நான்குடன் சித்திரசாவடி மோட்டார்நிற்கும் இடத்திற்குச் சென்று எஸ். 579, பி. எஸ். 210 நம்பருள்ள காரில் உட்கார்ந்து ஒரு மணி நேரம் காத்திருந்து வண்டி புறப்படும்போது என் ஜாதியை விசாரித்து பறையனுக்குக் கார் வேண்டுமோடாடந்துபோடா என்று என்னை அவமானமாகப்பேசி என் குழந்தைகளைப்பிடித்து கீழே இழுத்துவிட்டான். நான்இது என்ன அநியாயம் பண்ம் கொடுக்கிறேனே ஏன் என்னைக்காரில் உட்கார வைப்பதில்லை என்று கேட்டேன் அதற்கு அவன் பறையர்களை எப்போதும் என்காரில் வைப்பதுகிடையாது வேண்டுமானல் 25 ரூபாய்கொடுத்து தனியாக வேறுகாரில் வா என்று சொல்லி, எந்த இடத்தில் என்ன செய்கிறுயோ செய்துகொள் என்று ஓட்டிக்கொண்டு போய்விட்டான் இது சங்கதியை மகா-ள-ள-ஸ்ரீ சேலம் கலெக்டர் துரையவர்களுக்கும், செவ்வாய்ப்பேட்டை சப் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும், ஜில்லாபோர்டு பிரஸிடெண்டார் சமூகங்களுக்கும் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. இது விஷயமாக காருண்யமுள்ள கவர்ன்மெண்டார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிறார்களோ அதை பின்னல் தெரியப்படுத்துகிறேன்.

கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச்சாலை.

மூன்றாவதாண்டுவிழா:-

ஷை வாசகசாலையின் மூன்றாவதாண்டுவிழா கோட்டாறு சமதர்ம மண்டபத்தில் தோழர் ஏ, குணமணி எம். ஏ., பி. எல்., தலைமையில் 13-5-32 நதேதி நடைபெறும். அதுபோது தோழர்கள் கே. வி. அழகர்சாமி, விஸ்வநாதம், எஸ். திரவியம் பி, ஏ., பி. எல்,, லீலாவதி ராமசுப்பிரமணியம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவார்களென காரியதரிசி திரு. கிருஷ்ணன் எழுதுகிறார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செயல் நாத்திகப் பெரியார் செயல்-இரங்கற் குறியதாகும்.

ஓ புராண அறிஞர்களே! இதிகாச அறிஞர்களே! கடவுளறிஞர்களே! மத அறிஞர்களே! சாதி அறிஞர்களே! மூடப்பழக்கவழக்க அறிஞர்களே! நூலறிஞர்களே! நாத்திக அறிஞர்களே! கண்ணைத் திறந்து பாருங்கள் உணர்வு என்னும் பெரும்பதம் நோக்கி மக்கள் அபரிமிதமாக ஓடுகின்றனர்! நீங்கள் இருந்த இடத்தினின்று அசையாமலிருக்கின்றீர்களே! உங்கள் நிலை என்னாகும்?

நான் கல்வி, நூலறிவு வேண்டியதில்லை என்கின்றேனு? இல்லையில்லை. உண்மை, மெய்ம்மைகளை ஆதாரமாக உடைய பகுத்தறிவு, நுண்ணறிவு, உணர்வு நுண்ணுணர்வுகளையுடையார் ஆக்கிய நூற்களைக் கொள்ளுமாறு கூறுகிறேன். நாத்திகத்தை வளர்க்கும், நூற்களைத் தள்ளுமாறு கூறுகிறேன். நல்வாழ்வுக்கு, சுதந்திர வாழ்வுக்கு-சமத்துவ வாழ்வுக்கு சகோதரத்துவவாழ்வுக்குரிய வழிகளால் உணர்வு கொள்ள வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

சுயமரியாதைச் சங்கம் மதுரை.

இன்று மாலை 6-30 மணிக்கு சங்கக்கட்டிடத்தில் தோழர் வி. மாணிக்கம் அவர்கள் தலைமையில் "இந்து மதமும், சுயமரியாதையும்" என்பது பற்றி தோழர்களான கே. எஸ். ராம அழகர்சாமி, விநாயகமூர்த்தி, சுப்பையா, குமரேசன், ஆனந்தம் முதலியவர்கள் இந்துமதத்திலுள்ள குறைகளைப்பற்றி மிகவும் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் எல்லாருடைய மனதிலும் பதியும்படி விளக்கமாக பேசினர்கள். இடைஇடையே தோழர்களான சுந்தரராமன்.அய்யாசாமி, இருவரும் இனிய சுயமரியாதைக் கீதம் பாடிபரவசப்படுத்தினர்கள் தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசி பி. வி. விநாயகமூர்த்தியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

நகரெங்கும் பரபரப்பு.

சீர்திருத்த நோக்கங்கொண்ட சில அன்பர்களின் நன் முயற்சியால் இந்நகரிலுள்ள முக்கிய வீதிகளிலும், சந்துகளிலும் "ஜாதிமதத்தை ஒழிக்கவேண்டும்" என்று தகடு கொண்டு பச்சைமையினல் அடித்துக்கொண்டு வருகையில் சில போலீஸ் புலிகள் கூப்பிட்டு இரவு போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருந்து காலையில் அனுப்பிவிட்டார்கள். நகரெங்கும் இதே பேச்சாய் இருக்கிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கும்பகோணம் தாலுக்கா சத்திரங்கருப்பூரில் ஓர் சீர்திருத்தத் திருமணம்.

1932 வருடம் ஏப்ரல் மாதம் 18ந் தேதி திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு, கும்பகோணம் அழகப்ப முதலியார் தெரு திரு. பி. துரைசாமி பிள்ளையவர்கள் திருச்செல்வன் தங்கவேலுக்கும் கும்பகோணம் தாலூக்கா சத்திரம் கருப்பூர் சாலைக் கரைத்தெரு. திரு. ச- பக்கிரியா பிள்ளை அவர்கள் திருச்செல்வி சிவகாமி அம்மாளுக்கும் சீர்திருத்தமுறையில் மாலை மாற்றிக் கொள்ளப்பட்டு திருமணம் நடை பெற்றது. மேற்படி திருமணத்தைக்கும்பகோணம் சுயமரியாதை வாலிப சங்கத் தலைவர் திரு கே. கே. நீலமேகம் அவர்களால் நடத்தி வைக்கப் பட்ட பிறகு புதுவை முரசு ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் சுமார் 1.30 மணி நேரம் பேசிய பிறகு திரு கே. கே. நீலமேகம் அவர்கள் முடிவுரையுடன் திருமணம் முடிவு பெற்றது. இத்திருமணத்திற்குஅனேக எதிர்ப்புகளிருந்தும் அவைகளைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் இனிது நிறைவேற்றப் பட்டது. பகல் 12 மணிக்கு சுமார் 300 பெயர்கள் கொண்ட சமபந்தி போஜனமும் நடை பெற்றது. பிறகு பிற்பகல் மேற்படி கருப்பூர் கிராமத்தில் மேற்படி கல்யாண பந்தலிலேயே பெரிய பொதுக்கூட்டம் ஒன்று மணஞ்சேரி திரு. முத்தையா அவர்கள் தலைமையில் நடை பெற்றது, தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் சுமார் 2 மணி நேரம் "இந்து மதமும், தீண்மையின் கொடுமையும்" என்பது பற்றி வெகு உருக்கமாகப் பேசின பிறகு தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் சிறிது நேரம் பேசினர். மாலை 5 மணிக்கு தலைவர்கள் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. மேற்படி கூட்டத்திற்கு சுமார் 800 பெயர்கள் வரையில் விஜயம் செய்து அமைதியோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். இது சம்பாதமாகப் பெரிய பரபரப்பும் ஏற்பட்டிருப்பதோடு சுயமரியாதைக் கொள்கையின் உண்மை ஜனங்களுக்கு ஒருவாறு தெரிந்திருக்கிறது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

முக்காடுவேண்டாம்

நைசாம் செய்த உதாரணம்

சென்ற மார்ச்சு மாதம் 26-ந் தேதி கல்கத்தாவிலிருந்து வந்த கீழ்வரும் தந்தி ஒரு இங்கிலாந்துதினசரிப் பத்திரிகையில் வந்துள்ளது:—

முக்காடு அணிவது, அதாவது கீழ்த்தேச மாதுகள் முகமூடிகள் அணிகின்ற பழமைவாய்ந்த முறையை ஒழிக்க இந்திய மாதுகளின் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்தமும் மாறுதலும் செய்ய விரும்புகின்றவர்கள் வெகு பிரயாசையுடன் முயன்று வருகின்றனர். இந்திய மாதுகள் தொன்றுதொட்டு கையாளப்பட்டு வருகின்ற மாமூலான பழக்கங்களை விடாப் பிடியாகப் பிடித்துக்கொள்ளுகின்றனர். வெளியில் தனது வாயைத் துணியால் மூடாமல் பலருக்குங்காண்பிப்பது, ஒரு மாதுக்கு அவமானந் தருவதாகும். ஐதராபாத் நைசாம் பல அறிவு நிறைந்த கொள்கைகளும். கருத்துகளும், தனமும் ஒருங்கே வாய்ந்தவர். இவர் உலகத்திலேயே மிகுந்த தனவந்தராகக் கருதப்படுகிறார். இப்போது நைசாம் சீர்திருத்தமான வழியை யாவரும் அனுசரிக்கும்படி காண்பிக்கிறார். லட்சுமணபுரி, முஸ்லீம் பெண்கள் பாடசாலை முக்காடிடுவதைத் தள்ளிவிடுவதைப்பற்றி, ஒரு உபந்நியாசத்தை நிகழ்த்தினர். மேற்படி பாடசாலை நைசாம், தனது இரு புத்திரர்களுடனும், அவர்களது மனைவிகளுடனும் விஜயஞ் செய்தார். நைஸ் என்ற இடத்தில் சென்ற நவம்பர் மாதம் நைசாமின் இருபுத்திரர்களின் மணங்கள் ஏககாலத்தில் நடந்தேறின. மேற்படி தன் திரு. புத்திரர்களுக்கு வாய்த்த மணப் பெண்கள் துருக்கிதேசத்து இளவரசிகள். இவர்கள் துருக்கி மாஜி காலிப்பின் பெண்கள் மாஜி காலிப் அவர்களே மேற்படிசுபச்சடங்குகளுக்குவந்திருந்தார்.

நைசாமினது "சமிக்கை"யின் படி மேற்படி பாடசாலைப் பெண்கள் எல்லாம். இருபாலரும் கலந்த கூட்டத்தில் தமது வாழ்க்கையில் முதல் முறையாக முட்டாக்குகளின்றி, நைசாமின் உபந்நியாசத்தைச் செவியுற வந்தனர்- "நாம் அப்படியே செய்கிறோம்" என்று அவர்களில் ஒரு பெண் சொன்னள். மேலும் நைசாமுக் கௌரவம் பாராட்டியும் துயுக்கில் மாதுகளின் சுதந்திரங்கள் உரிமைகள் அகிய இவை விஷயமாக முனைந்து முதன்முதலாக உழைத்தநமது நைசாமினதுஇருமருமக்கள்களுக்குக்கௌரவம்பாராட்டியும், நாம்செய்கிறோம்" என்று இவள் கூறினள்.

மாதுகளின் சுதந்தர சம்மந்தமாக இந்தியாவிலுள்ள சில பாகங்களில் கவனிக்கத்தக்க முன்னேற்றமடைந்தபோதிலும், இந்திய மாகாண சர்க்கார் மகம்மதிய மந்திரிகளைச் சார்ந்த குடும்பங்களிலுள்ள மாதுகள் இன்னும் முக்கியமாக முட்டாக்கை அனுசரித்து வருகின்றனர். (தி-ன்.)

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

நமக்குள்ளே சில்லரைச்சண்டை, அற்பப்பகை, அற்பப்பொருமைகளுக்கெல்லாம் இதுவன்று காலம் என்பதைக்காட்டினோம். இருட்டுமூலைக்குள் உட்கார்ந்துகொண்டு நம்மை நாமே மகான்களென்று பாவனை செய்வதில் பயனில்லை. உலகத்தார் சபைகளில் நம்முடைய கர்வம் சிறுமைப்படுகிறதை எடுத்துக் காட்டினோம். பல நூற்றாண்டு செய்தபாவம் பெருஞ்சுமையாய் நமதாண்மையை நசுக்கி, நம்மறிவை மயக்கி நாம் முன்னே போகவிடாமல் பின்னே இழுக்கிற விதத்தைச்சொன்னோம். சென்ற காலபபுழுதியும் சருகும், புதிய உதயத்தை மூடுபனிபோல மறைக்கின்றதை உணர்த்தினோம். மனுஷ்ய ஜாதி எப்போதும் முன்னே நோக்கிச்செல்லுவதையும் அறிவுச்சுடர் கொளுத்திய வீர வழியே நடப்பதையும் காட்டினோம். இந்த மனுஷிய ஜாதியுடன் நாம் சம நடையாகச் செல்ல விரும்பினுல் மூடப்பழக்க வழக்க முட்டாள்தன முதுகுச்சுமையைக்கூச்சப்படாமல் வீசிஎறிந்து விடவேண்டுமென்று வேண்டிக்கொண்டோம்.

சூத்திரனென்றால் அடிமை, தாசிமகன், ஏவலான், ஆசாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், கண்டதைப் புசிப்போன் என்றே சாஸ்திரங்களில் அர்த்தம் சொல்லப்பட்டிருப்பதையும் அதைக்கொண்டே சமய ஆசாரங்களில் தாழ்த்தப்பட்டிருப்பதையும் வெட்ட வெளியாய் வேண்டியமட்டும் விரித்துச்சொன்னோம்.

சற்சூத்திரனென்று தன்னைத்தனியாக மதித்துக்கொள்ளும் சைவர்களுக்கு சற்சூத்திரனென்றால் நல்லமடையன், தாசிமகன், நல்ல அடிமை, நன்றாய் ஒழுக்கம் கெட்டவன், நன்றாய் ஆசாரமில்லாதவன் என்று சுவாமி வேதாசலம் அர்த்தம் செய்ததைத் தெளிவாக விரித்துச்சொன்னோம்.

நமது நாட்டுத்தெலுங்கு கன்னட ஜெமீன்தார்கள், மிட்டா மிராஸ்தார்கள், பட்டக்காரர்கள், பாளையக்காரர்கள், மடாதிபதிகள், பண்டிதர்கள் மற்றுமுள்ள எப்பெரியோர்களும் சூத்திரர்கள்தான். ஏனென்றால் கடவுளின் பாதத்திலிருந்து பிறந்தவர்களானதினுல் இவர்கள் சுடுகாட்டிற்கு ஒப்பானவர்கள், நாய்க்குச்சமானமானவர்கள் ஆனதால் இவர்கள் வேதத்தைக் காதில் கேட்கப்படாது அப்படிக் கேட்டுவிட்டால் காதில் ஈயத்தையும், அரக்கையும் உருக்கி ஊற்றவேண்டும் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதமோ கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று சொல்லிவந்த புரட்டுகளையெல்லாம் சுவாமி சிவாநந்த சரஸ்வதி அவர்களால் எழுதப்பட்ட ஞானசூரியன், மதவிசாரணை என்னும் புஸ்தகத்தாலும், உங்களுடைய பல வியாசங்களாலும் வெளியாக்கினோம்.

வேதம் வாசித்து தபசசெய்து ஒழுக்கமடைந்த பார்ப்பானுக்கே தானம் கொடுக்கவேண்டும் அப்படி இல்லாத பார்ப்பானுக்குத் தானம் கோடுத்தால் கொடுத்தவன் நரகத்திற்குப்போவது மன்னியில் அவன் குடும்பத்தின் உயர்வும் கெட்டு கடனுக்கும் ஆளாவான் என்று கலியுகத்திற்குப் பிரமாணமானபராசரஸ்மிருதியில் சொல்லியிருப்பதையும் பிராமணனுக்குத்தானம் கொடுத்தால் புண்ணியமென்று எந்த ஸ்மிருதி சொல்லுகிறதோ அந்த ஸ்மிருதிதான் பராச ஸ்மிருதியென்றும் அதில்தான் வேதம் தபஸ் ஒழுக்கமுடைய பிராமணனுக்கே கொடுக்கவேண்டும். அவன் இல்லையேல் தனது பெண், தனது அத்தை தனது தங்கை, தமக்கை, தனது ஏழைச்சுற்றத்தார்கள் இவர்களுக்குக்கொடுப்பது கோடி பங்கு புண்ணியமென்று அந்த ஸ்மிருதியிலேயே விதித்திருக்கிறதென்றும் அந்த ஸ்மிருதியிலுள்ள வாக்கியங்களையெல்லாம் அப்படியே எழுதினோம்.

கோவிலென்றும், கும்பாபிஷேகமென்றும், ஆராதனையென்றும், அபிஷேகமென்றும், தேரென்றும், திருவிழாவென்றும், நகை என்றும், வாகனமென்றும், நடனவாத்திய நர்த்தனமென்றும் இன்னும் அநேக வைபவங்களும் நம்மால் பலகாலமாக வாங்கிக்கொண்ட நம்கடவுளுக்கு நன்றியில்லாமல் நம்மையும் அடிமையாக்கி அதுவும் பலரால் உதை உண்டு அடிபட்டு அவதிப்பட்டுகிடப்பது அதன் குற்றமா? நமது கைங்கிரியத்தின்குற்றமா? ஒரு கூட்டத்திற்கு இரண்டரை வயறு உண்ணப் போட்டு வயற்றைப்பெருக்கடித்து ஒன்றுக்குமுதவாமல் செய்து மற்றொரு கூட்டத்தை அரைவயற்றிற்கும் கஞ்சியில்லாமல் போட்டு அதனுல் வயரொட்டி வாடி வதங்கி ஒன்றுக்கு முதவாமல் செய்து விடப்பட்டிருக்கும் குற்றம் பணக்காரர்களுடையதா? படித்தவர்கள் குமஸ்தா வேலைக்கும், வக்கீல் வேலைக்கும் போய்விடுவதின் குற்றமா? குருவென்றும், குருக்களென்றும், ஆசாரியென்றும் பெயர் வைத்துக்கொண்டு உலகப்பொது கடவுளை மறந்து உலகப்பொது விதியை உல்லங்கனம் செய்து தன்னலத்திற்கு அற்பத்தனமான சூதினுல் நேர்வழியை விட்டு சனசமூகங்களை விலகச்செய்து மானுஷிய உரிமையைப்புறக்கணிக்கும் மடாதிபதிகளின் குற்றமா? எக்குற்றத்தால் நமது நாடு தரித்திரத்திற்கும் நோயிற்கும் அடிமைக்கும் ஆளாக்கிக்கிடக்கிறதென்னும் அக்குற்றத்தைஎடுத்துச்சொன்னீர்கள்.

நாளுக்கு நாள் கீழே போய்க்கொண்டிருக்கிற ஜனங்களின் முன்னேற்றத்திற்கு உங்களுடைய ஜீவித காலங்களைச் சிலவழிக்க வந்திருக்கும் எனது சகோதரர்களே அது ஒருநாள் வேலையல்ல, பாதையும்விஷமுற்களால் நிறைந்துள்ளது. எத்தனையோபேர் இம்முயற்சியில் தவறிவிடுவார்கள், எத்தனையோபேர் இம்முயற்சியை முன்கொண்டு செல்வதற்குத்தயாராவிருப்பார்கள், நாம்ஜெயமடையாது அங்குமரிக்கலாம் இன்னொருவர் அந்தவேலையை எடுத்துக் கொள்ளுவார்கள் உங்களுக்கு வியாதி இன்னதென்று தெரிந்துவிட்டது அதை ஜனங்களுக்குச் சொல்லியும் விட்டீர்கள் முன்னே செல்லுங்கள் வைதீகக்கொடுமையாலும், நிவ்ரோத்தினுலும் பலமாய்ப்பீடிக்கப்பட்டு கீழேவீழ்ந்து கிடக்கும் ஜனங்களைப் பார்க்கச்சொல்லுங்கள், சுதந்திரத்தைக்கொடுப்பதற்கு தயாராகவில்லாத எவனும் சுததந்திரத்திற்கு அருகனல்லன் என்பதையும் தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்காதவர்களுக்குத் தன்னரசு எப்படி வருமென்றும், கல்வியைத்தடுக்கும் கற்றோருக்கும் அதைப்பார்த்துக்கொண்டிருக்கும் படித்தோர்களுக்கும் அவர்கள் சொல்லும் சாஸ்திரப்படியே கடவுள் அருள் கிட்டாதென்றும், கழுதையாய்ப்பிறப்பார்களென்றும் இந்த எட்டாவரு ஷமும் எடுத்துச்சொல்லுங்கள் அப்பொழுது துன்பமலேதுளாய்விடும்

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை வினியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினுல் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

உங்கள்

கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விடரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St Calcutta.

"சன்மார்க்கன்"
தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்: —
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

ஜோதிமுத்து.

மேக ரோக கர்ப்பத்தில் ஊரி ஜெனித்த சந்ததியார்களுக்கு உண்டாகும் மேல் மேகக்குத்து, மேக ஊரல் மேகத்தடிப்பு முதலிய மேகம் 21க்கும், ஆராத குழிப்புண்கள் புரையோடிய இரணங்கள் கை கால்கள் குறைந்து இரணமாயிருக்கும் குஷ்டங்களுக்கும் மூன்று நேரம் உபயோகித்து குணம் பெறக்கூடிய கோஷாயி மேக எண்ணை கொண்ட ஒரு அவுன்ஸ் சீசா ஒன்றுக்கு ரூ. 7—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன் பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பிவைக்கவும்.

உதவி டாக்டர்
T K V Chalam.

டாக்டர் B. A. எதிராஜ்,
[கால்ராவைபரி]
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர் திருச்சி.

ஹர்த்தால் அன்றையதினம் வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போகிறதில்லையா?

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House,
Erode.
Price per copy two annas. Send 0 2.0 annas postage stamps for a single copy.
Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்

குஷ்டம் நிராதகர்மநோயென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?

எக்காரணத்தினாலுமுண்டாகின்ற எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும் சிரான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சாத்மீகத்தோதுக்கிணங்கி அனுபவித்தானந்தப்படுங்கள்.
நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்

சி. ஓ. கேசவவைத்தியர்
Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S I.

"சண்டமாருதம்"
சுயமரியாதைத் தமிழ் இளம்பதிப்பு.

அநேக தந்தி செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "நொட்டுப்பாக்"
நகைச்சுவை மிக்க காவல்கள்
பெய்கூச்செறிந்த "சின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விபரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—4—0
தனிப்பிரதி ...	ரூ.	0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
"சண்டமாருதம்"
திருச்சினாப்பள்ளி.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என் பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்காணலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

புதுவை முரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5.
மாதிரிபிரதி இனாம்!

மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ஆ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அநேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமெனபதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0 2—0

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி,நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.